கேரளத் தமிழர்களும் அவர்களின் சிக்கல்களும்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

கேரளத் தமிழர்களும் அவர்களின் சிக்கல்களும்

உ. சுப்பிரமணியம்,

பேராசிரியர், சமூக இயல் துறைத் தலைவர்,

தெ.தி.இந்துக் கல்லூரி, நாகர்கோவில்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

ISBN : 81 - 7090 - 112 - X

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 93

திருவள்ளுவர் ஆண்டு 2019 புரட்டாசி: செப்டம்பர் 1988

நூல் : கேரளத் தமிழர்களும் அவர்களின் சிக்கல்களும்

ஆசிரியர் : உ. சுப்பிரமணியம்

பதிப்பு : முதற் பதிப்பு

விலை : உரு. 55-00

அச்சு : மருதோன்றி அச்சகம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

பதிப்புரை

தொல்காப்பியக் காலத்தில் தமிழ்கூறும் நல்லுலகம் வடவேங்கடம், தென்குமரியின் இடைநிலமாக இருந்தது. இக்காலத்தில் உலகளாவியுள்ளது; தமிழரும் உலகளாவி வாழ்கின்றனர்.

உலகத்தமிழர்களில், சென்ற நிலத்தோடு ஒன்றியோர் உளர். பிறந்த மண்ணை மறவாத பின்னணி கொண்டோரும் உள்ளனர். ஆற்றில் ஒருகால் சேற்றில் ஒருகால் வைத்தோரையும் காண்கின்றோம். இவர்களுள் முன்னிருவர் வாழ்வு ஆய்வுக்குரியது. இந்த ஆய்வு தமிழ் இனத்திற்கு மட்டுமன்றி மக்கள் இனங்களின் வாழ்க்கை வரலாற்றிற்கும் துணை செய்வதாகும்.

'கேரளத் தமிழர்களும் அவர்களின் சிக்கல்களும்' என்னும் இந்நூல் மலைஞாலத்தில் ஒன்றி விட்ட - புளியம் பழமும் ஓடுமாய் ஒன்றியும் ஒட்டாமலுமுள்ள தமிழர்தம் வாழ்வை ஊடாடிக் காட்டுகிறது.

நூலாசிரியர் பேரா. உ. சுப்பிரமணியம் இந்த ஆய்வை இயன்ற அளவு முயன்று களஆய்வுடன் இணைத்து எழுதியுள்ளார்.

மலைஞாலிகளிடையே தமிழர்களின் புதிய வாழ்க்கை முறை - மாறுபடுகின்ற உடன்பாடு, கேரளப் பண்பாட்டின தன்வயமாதல், சமூக ஊடாட்டம் எனப் பல முனைகளில் ஆராய்ந்துள்ளார். தமிழருக்குள்ள சிக்கல்களைச் சுட்டிக் கூறியுள்ளார்.

தமிழ்ப் பல்கலைக் கழகக் குறுகிய காலத் திட்டத்தில்

உருவான இந்நூலைப் பதிப்பிக்கத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் இசைவு தந்து பணித்தமைக்கு நன்றி கூறுகின்றேன்.

ஓர் இனச் சிக்கலை விளக்கும் இவ்வாய்வை மேற்கொண்டு நிறைவேற்றிய நூலாசிரியருக்குப் பாராட்டும் நன்றியும் உரியனவாகும். இதனை மதிப்பீடு செய்து உதவிய பேரா. சந்தானம் அவர்களுக்கும் பேரா. சி. என். நடராசன் அவர்களுக்கும் நன்றி உரியதாகும்.

சிறப்பாகச் சமுதாய நோட்டக்காரர்க்கு மட்டுமன்றி மொழி, இன ஆய்வாளர்க்கும், பொதுவாக அனைவர்க்கும் இந்நூல் பயனுடையதாகும்.

பதிப்புத்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்

கோவை இளஞ்சேரன்
துணை இயக்குநர்

முன்னுரை

தமிழர்கள் உலகின் பல பகுதிகளுக்கும் சென்று குடியேறியுள்ளனர். இக்குடியேற்றம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கும்; வாணிப நோக்கம் கொண்டதாகவும் இருக்கும்.

முன்பு நிலவிய சமுதாயங்களில் எல்லாரும் ஓர் குலம் என்ற எண்ணம் நிலவியதால் தமிழர்களுக்குச் சிக்கல்கள் ஏதுமில்லை. அண்மைக் காலத்தில் மொழி அடிப்படையில் தேசியம் வேரூன்றியபோது பல்வேறு பகுதிகளிலும் தமிழர்களுக்குச் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

பல பகுதிகளிலும் தமிழர்கள் எவ்வகையில் வாழ்கின்றனர் என்பது குறித்துத் தாய்த் தமிழகத்திலிருப்பவர்,களுக்கு எவ்விதக் கருத்தும் இருப்பதில்லை.

அண்டை மாநிலங்கள் பலவற்றிலும் குடியேறியிருக்கும் தமிழர்கள் குறித்துக்கூடத் தமிழர்கள் அறிந்து வைத்துக்கொள்வதில்லை. எல்லாத் துறைகள் குறித்தும் நம்மிடையே இருக்கும் உதாசீனப் போக்கே இதற்கும் காரணம்.

தமிழர்கள் குறித்துக் கட்டுரைகள் வெளிவரும்போது அவை உணர்ச்சியின் வடிவமாகத்தான் காணப்படுகின்றனவே தவிர உண்மையை அறிந்து கொள்ள வேண்டும் என்ற உள்ளுணர்வு கொண்டனவாக இல்லை.

அறிவியல் கண்ணோட்டத்தில் எல்லாவற்றையும் அறிந்து கொள்ள நாம் இன்னமும் பழகிக்கொள்ளவேயில்லை. பழம் பெருமை பேசிப்பழகி விட்டோம்

இந்தியத் துணைக்கண்டத்தின் மிகத் தொன்மை வாய்ந்த மொழியைப் பேசி வாழும் தமிழர்கள் பிற பகுதிகளில் இன்னல் உறுவதற்குக் காரணமென்ன என்று அறிந்து கொள்வது எல்லாருக்கும் நலம் பயப்பதாகும்.

பிற பகுதிகளில் வாழும் தமிழர்கள், தாங்கள் வாழும் பகுதிப் பண்பாட்டிற்குப் பலியாகித் தமிழர் பண்பாட்டைக் கை கழுவ நேரிடும்.

மொழியையும் சின்னாள்களில் மறந்து வேற்று மொழியைத் தமதாக்கிக் கொள்ளும் கட்டாயமும் ஏற்படும்.

பிற பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கு எப்போதும் தாய்த் தமிழகம் கனவாக இருக்கின்றது.

பிற மாநிலத்தில் வாழும் தமிழர்கள் குறித்து அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையின் உந்துதலால் ஏற்பட்டதே இந்நூல் ஆய்வு.

வரலாற்றுக் காலக்கட்டத்தில் மிக அண்மைக் காலத்தில் தங்கள் தனித்தன்மையை வெளிப்படுத்தியவர்கள் மலையாளிகள். திராவிட மொழிகளில் மிகவும் தொன்மை வாய்ந்த மொழிபேசும் தமிழர்கள், அண்மைக் காலத்தில் ஏற்பட்ட மலையாளம் பேசுபவர்களுடன் எவ்வகையில் வாழ்கின்றனர் என்பது நல்ல ஆய்வுப் பொருளுக்குகந்தது.

இரு பிரிவினர்க்கும் பல்வேறு நிலைகளில் கருத்து வேறு பாடுகள் பூகம்பமாய் வெடித்து விடுவது போன்று வெளியே தோன்றுகின்றது.

எனினும் கேரளத்தில் வாழும் தமிழர்களுக்கும் மலையாளி களுக்கும் இவை குறித்து ஏதும் கவலையில்லை.

இவ்வகையில் இருமொழி பேசுபவர்களையும் இணைத்து ஒருங்கிணைப்பது எதுவென்றும் வேற்றுமைப் படுத்துவது எதுவென்றும் அறிந்துகொள்ள இந்நூல் உதவும்.

நன்றி :

இந்நூலை ஏற்று ஊக்குவித்த தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்களுக்கும் இந்நூலைப் பதிப்பிக்க இசைவாணை வழங்கிய தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்களுக்கும் நன்றிக் கடப்பாடுடையேன்.

இந்நூல் உருவாக அரிய கருத்துரைகள் வழங்கியவர், கள ஆய்வுக்கு உதவியவர், வரைபடங்கள் வரைந்து உதவியவர், கட்டுரைப்படிகளைத் திருத்தியும் ஊக்கமளித்தும் துணை நின்றவர், தட்டச்சு செய்து தந்தவர் முதலானோர் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருவனந்தபுரம், கொல்லம் ஆகிய இரு நகரங்களிலும் வாழும் தமிழர் உறவு மனப்பான்மையுடன் இவ்வாய்விற்கு உதவினர். அவர்களுக்கு எவ்வகையில் கைம்மாறு செய்வேன்? மனம் அசை போடுவது தவிர வேறொன்றும் நன்றியுடன் செய்ய முடியாதன்றோ!

நாகர்கோயில் — உ. சுப்பிரமணியம்

5—1—1987

பொருளடக்கம்

பதிப்புரை
முன்னுரை
பொருளடக்கம்
இயல் 1
ஆய்வின் நோக்கமும் முறைகளும் 3
இயல் 2
தமிழர்கள் தனி இனக்குழுவா? 19
இயல் 3
பண்பாடும் சிறுபான்மையரும் 33
இயல் 4
பண்பாட்டு மாற்றம் 41
இயல் 5
சிறுபான்மையர் கல்வி 51
இயல் 6
தமிழர்களின் அரசியல் மனச் சாட்சி 65
இயல் 7
கேரளம் 77
இயல் 8
கேரளத் தமிழர் சமுதாயம் 93
இயல் 9
ஆய்வுரை 105
இயல் 10
முடிப்புரை 135
பின்னிணைப்புகள்
1. வினாப்பட்டியல் 139
2. துணைநூற்பட்டியல் 147

இயல் 1

கேரளத் தமிழர்களும் அவர்களின் சிக்கல்களும்

1. ஆய்வின் நோக்கமும் முறைகளும்

ஆய்வு முகப்புரை

தமிழர்கள் பண்டு தொட்டே உலகெங்கிலும் பரவி வாழ்கின்றனர். அவர்கள் வாழும் பகுதிகளைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்று கூறி மகிழ்கின்றனர். தமிழக மாமன்னர்கள் வெற்றிபெற்ற பூமியில் பழங்காலத்திலேயே குடியேறிய தமிழர்களும் உண்டு. மன்னர்கள் அழைத்துச் சென்றவர்கள், கூலி வேலைக்குச் சென்றவர்கள் என்று பல நிலைகளில் தமிழர்கள் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர்.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் அந்தந்த நாட்டின் சூழலுக்கு இயைந்த வகையில் காணப்படுகின்றனர்; சில நாடுகளில் எதிர்த்துப் போராடுகின்றனர். இலங்கையில் அரசியல் அடிப்படையில் தனி நாடு கோரிப் போராடுகின்றனர். தென் ஆப்பிரிக்காவில் நிறவெறிக்கு ஆளாகி அவதியுறுகின்றனர்.

இந்தியாவில் மொழிவாரியாக மாநிலங்கள் அமைக்கப் பட்ட பிறகு மாநில உணர்வு மக்களிடையே அதிகரித்து விட்டது. வேறு மாநிலத்திலிருந்து வந்தவர்களை வெளிநாட்டவர் போன்று கருதுகின்றனர். பல அரசியல் கட்சிகளும் இந்த உணர்வுகளுக்குத் தூபம் போட்டு அரசியல் ஆதாயம் தேட நினைக்கின்றன.

பிற மாநிலங்களில் வாழும் தமிழர்கள் மொழி வெறிக்கு ஆளாகி அவதியுறுகின்றனர். மகாராட்டிர மாநிலத் தமிழர்கள் முன்பு சிவசேனையின்[1] தாக்குதலுக்கு ஆளாகி அவதியுற்றனர். கருநாடக மாநிலத்தில் கன்னட சாலுவாலிகர் கட்சி

தமிழர்களுக்கு எதிரான முறையில் செயல்படும் கட்சியாகும். இதனைப் போன்றே முன்பு தெலுங்கர்களுக்கும் தமிழர்களுக்கும் சச்சரவு நிலவியது.

முன்னுரை

தமிழர்கள் குடியேறி வாழும் பகுதிகளுள் கேரளமும் ஒன்றாகும். நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே அவர்கள் இங்குக் குடியேறி வாழ்கின்றனர்.

இன்று கேரள மாநிலமாக விளங்கும் பகுதி 1956—ஆம் ஆண்டில்திருவிதாங்கூர்-கொச்சிசமஸ்தானங்களையும் மலபாரையும் இணைத்து உருவாக்கியதாகும். முன்பு திருவிதாங்கூர் சமஸ்தானம் மன்னராட்சியின் கீழ் இருந்து வந்தது. இந்த நிலப் பகுதி ஆராய்ச்சிக்குப் பொருத்தமான பகுதி என்று வின்செண்ட் ஸ்மித்[2] எனும் வரலாற்று ஆசிரியர் கூறுகின்றார்.

அவர் கூறுவது இப்போதும் பொருந்தும். மிகவும் தொன்மை வாய்ந்த தமிழர்கள் கேரள மாநிலத்தில் வேறொரு பண்பாட்டுடன் எப்படி இயைந்து வாழ்கின்றனர் என்று ஆய்வது பயனுடையதாக இருக்கும் என்பதனால் இவ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படுகின்றது.

ஆய்வின் நோக்கம்

கேரளத்தில் வாழும் தமிழாகளை ஆராய்வதன் மூலம் கீழ்க்காணும் கருத்துகள் வெளிப்படும் என்பதனால் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

அ — கேரளத் தமிழர் சமூக அமைப்பிலும் வாழ்க்கை முறைகளிலும் காணப்படும் புதிய முறைகளும் போக்குகளும்.

கேரளத் தமிழர் திருமண முறை, குடும்பம், சமயம், சடங்குகள் ஆகியவை எவ்வகையில் தாய்த் தமிழகத்தில் வாழும் தமிழர்கள் சமூக நிறுவனங்களிலிருந்து மாறுபடுகின்றன அல்லது உடன்படுகின்றன என்பதை ஆய்தல்.

ஆ — கேரளத் தமிழர் கொள்ளும் தொடர்பு முறை.

கேரளத் தமிழர் எவ்வகையில் மலையாளப் பண்பாட்டுடன் தொடர்பு கொள்கின்றனர் என்பதை ஆய்தல். இத் தொடர்பு மூலம் அவர்கள் எவ்வகையில் கேரளப் பண்பாட்டுடன் தன்மயமாகிக் கொண்டனர் அல்லது எவ்வகையில் தமிழர் பண்

பாட்டைக் கைவிட்டு விட்டனர் என்று அறிந்து கொள்ளலாம்.

இ — சமூக ஊடாட்டத்தில் கேரளத் தமிழர் ஏற்றுக் கொள்ளும் சமூக எல்லைகள் எவை என ஆய்தல்.

எவ்வகைக் கேரளச் சாதியினர்களுடன் தமிழர்கள் சமூக ஊடாட்டம் கொள்கின்றனர் என்று ஆய்தல். வேறொரு நாட்டில் வாழ்வதனால் பிற தமிழ்ச் சாதி யினர்களுடன் அவர்கள் எவ்வகையில் நடந்து கொள்கின்றனர் என்றும் எத்தகு சமூகத் தூரத்தைக் கடைப்பிடிக்கின்றனர் என்றும் அறிந்து கொள்ளலாம்.

ஈ — கேரளத்தில் வாழும் தமிழர்களின் சிக்கல்கள்.

வேறொரு பண்பாட்டுப் பெரும்பான்மையர் மத்தியில் வாழ்வதனால் தமிழர்களுக்கு ஏற்படும் அரசியல், கல்வி, பொருளாதார சமூகச் சிக்கல்கள் எவை என ஆராய்தல். இச்சிக்கல்கள் சச்சரவாகத் தான் உரு எடுக்க வேண்டும் என்பதில்லை; உள வியல் தன்மையிலும் காணப்படலாம். பிற மாநிலங்களில் வாழும் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்களிலிருந்து இவை வேறுபாடு கொண்ட வையா எனவும் அறிந்து கொள்ளலாம்.

உ — சிக்கல்களைத் தவிர்ப்பதற்குக் கேரளத் தமிழர் சுற்றுப்புறச் சூழலில் அமைதி காத்துக் கொள் கின்றனரா என அறிதல்.

மலையாளிகளுடன் தமிழர்கள் எவ்வகையில் இணக்கம் ஏற்படுத்தி அமைதி காத்துக் கொள் கின்றனர் என்று ஆய்தல். தமிழர்கள் தங்கள் தனித் தன்மையைக் களைந்துவிட்டு மொழி, உணவு, உடை ஆகியவற்றில் மலையாளிகளிடமிருந்து வேற்றுமை காணாதவாறு மாறிவிட்டனரா என்றும் அறிந்து கொள்ளலாம். தமிழர்கள் ஒரு சில சமூக அமைப்புகளில் தனித் தன்மையைப் பேணி வேறு அமைப்புகளில் தங்கள் அடையாளங்களைக் களைந்து விட்டனரா என்றும் ஆராய்ந்து உணர்ந்து கொள்ளலாம்.

ஊ — தாயகத்துடன் தொடர்பு.

கேரளத்தில் வாழும் தமிழர்கள் தாயகத்தில் தங்கள்

சொந்த ஊருடன் எவ்வகையில் தொடர்பு வைத்துக் கொண்டுள்ளனர் என்று ஆராய்தல்

எ — நிரந்தரமாக அவர்கள் எங்கு வாழ விரும்புகின்றனர் என ஆராய்தல்.

தமிழகத்தில் கேரளத் தமிழர்களுக்கு உடைமைகள் உள்ளனவா என்றும் கேரளத்தில் உள்ளனவா என்றும் அறிந்து கொள்ளலாம். தமிழகத்தில் உடைமைகளிலிருக்குமெனில் அதனை விற்றுக் கேரளத்தில் நிரந்தரமாகத் தங்கிவிட எண்ணுகின்றார்களா என்றும் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாய்வில் தமிழர்களின் தினசரி நடவடிக்கைகளையும் அவற்றின் சிக்கல்கள் குறித்தும் விளக்கமாக ஆராயப்படவில்லை. ஆனால், கேரளத்தில் வாழும் தமிழர்கள் மலையாளிகளுடன் சேர்ந்து வாழும் முறையில் எத்தகு மதிப்பைப்பெற்று வாழ்கின்றனர் என்று ஆராயப்பட்டுள்ளது.

ஆய்வு முறை

திருவனந்தபுரம் கொல்லம் ஆகிய இரு பெரு நகரங்களிலும் ஒவ்வொரு நகரிலும் 100 தமிழர் வீதம் மொத்தம் 200 பேர் மாதிரியாக இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர். தமிழர்கள் அதிகம் வாழ்வதனால் இவ்விரு நகரங்களும் ஆய்வுக் களங்களாகத் தேர்தெடுக்கப்பட்டன.

தமிழர் குடியிருப்புகள் நகருக்குள்ளே சிதறிக் கிடப்பதனால் நோக்க மாதிரி மூலம் (Purposive sample) இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வுக்கான வினாப்பட்டியல் தயாரிக்கப்பட்டு, திருவனந்தபுரம் நகரில் முன்னோடிச் சோதனை செய்யப்பட்டது. 25 தமிழர்கள் — பல சாதியினரும் இவ்வாய்வில் உட்படுத்தப் பட்டனர். பின்பு வினாப் பட்டியல் திருத்தியமைக்கப்பட்டுக் கள ஆய்விற்குட்படுத்தப்பட்டது.

கேரளத் தமிழர்களை மலையாளிகளிடமிருந்து பிரித்தறிவது என்பது அவ்வளவு எளிதானதன்று. அவர்கள் பேச்சு மொழியை அளவுகோலாய்ப் பயன்படுத்தலாமெனில் பெரும்பான்மைத் தமிழர்கள் முதலில் மலையாளத்தில்தான் பேச்சைத் தொடங்குகின்றனர்.

தமிழர் வாழும் இல்லங்களையும் மலையாளிகள் இல்லங்களிலிருந்து வேறுபடுத்தி அறிந்து கொள்ளல் இயலாது. நவீனக் கட்டடக் கலைகள் மூலம் எல்லா வீடுகளும் ஒரே மாதிரியாகத்தான் தோற்றமளிக்கின்றன.

கேரளத் தமிழர் சமூகம் குறித்தும் சிக்கல்கள் குறித்தும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுவதனால் இதற்குத் தகவலாளர் களாகத் தேர்ந்தெடுக்கப்படும் தமிழர்கள் ஓரளவுக்குத் தங்கள் சமூகம் குறித்து அறிவு வாய்ந்தவர்களாக இருந்தால்தான் வினாப்பட்டியலுக்குப் பதிலளிக்க முடியும். முன்னோடி ஆய்வின் மூலம் இந்த உண்மை கண்டறியப்பட்டதனால் கள ஆய்வில் நோக்க மாதிரி பயன்படுத்தப்பட்டது.

கள ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சாதி அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எல்லாச் சாதி யினர்களும் இவ்வாய்வில் உட்படுத்தப்பட வேண்டுமென்பதனால் உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இம்முறை கணித வரம்பிற்குட்பட்டுச் சீரான தன்மை கொண்டதாக இருக்காது என்பதை அறிந்தே இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கேரளத் தமிழர்களுள் தகவலாளர்களைப் பொறுக்கி எடுத்து அவர்களிடம் வினாப்பட்டியலிலுள்ள கேள்விகள் ஒவ்வொன்றாக வாசிக்கப்பட்டு விடைகள் குறிக்கப்பட்டன. இம்மாதிரி தகவலாளர் தேர்வில் நடைபெறும் பிழைகள் ஒன்றை ஒன்று சமப்படுத்திக் கொள்ளும் என்று அனுமானிக்கப்பட்டு இம்முறை பின்பற்றப்பட்டது.[3]

திருவனந்தபுரம் கொல்லம் ஆகிய இரு நகரங்களிலும் இதற்கான ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுக் கள ஆய்வு செய்யப்பட்டது. வினாப் பட்டியல் குறித்தும் ஆய்வு செய்யும் முறை குறித்தும் ஆய்வாளர்களுக்குக் கவனமாகப் போதிக்கப்பட்ட பின்புதான் அவர்கள் கள ஆய்வுக்கு அனுப்பப்பட்டனர்.

கள ஆய்வில் இடர்ப்பாடுகள்

கள ஆய்வின்போது தகவலாளர்களிடம் சுமுகமான நல்லெண்ண உறவு வைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பல தகவலாளர்களும் இணக்கமாக பொறுமையாக விடையிறுத் தனர். சிலருக்கு இந்த ஆய்வின் நோக்கம் பிடிபடாத காரணத்தினால் விடையிறுக்க முதலில் தயங்கினர்; விளக்கிய பின்பு இசைந்தனர்.

தமிழர்கள் பல்வேறு இடங்களிலும் பரவி வாழ்வதனால் சாதிவாரியாகத் தகவலாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் சிரமம் ஏற்பட்டது. நேரடியாக ஒருவரிடம் சாதியைக் கேட்பதும் இங்கிதமாகத் தெரியவில்லை. அவர்களும் தங்கள் சாதியை வெளிப்படையாகக் கூறத் தயக்கம் காட்டினர். இத்தகு ஆய்வுகள்

மேற்கொள்ளப்படும்போது மாறி வரும் சமூகச் சூழலில் இத்தகைய சிக்கல்கள் ஏற்படுவது இயல்பேயாகும்.

சில தகவலாளர்கள் வினாப்பட்டியலுக்கு விடையிறுக்க மறுத்ததற்குத் தமிழர் பண்பாட்டு முறையும் ஒரு காரணமாகும். பெரியவர்கள் வீட்டிலிருக்கும்போது வயதில் குறைந்தவர்கள் இம்மாதிரித் தகவல் அளிக்கக் கூடாது என்று அவர்கள் எண்ணி முதலில் மறுத்தனர். நிலைமையை விளக்கிய பின்பு அவர்கள் மனமுவந்து ஆய்வுக்கு உதவினர்.

வருமானம்பற்றிய கேள்விக்குப் பலரும் விடையிறுக்கப் பயந்தனர். இதனால் ஏதும் பாதிக்கப்படாது என்று உணர்ந்த பின்னரே தகவல் அளித்தனர்.

மலையாளம் பேசிய தமிழர்களையும், தமிழ் பேசிய மலையாளிகளையும் களப்பணியில் சந்திக்க நேரிட்டபோது தகவல் சேகரிப்பில் சுவையான ஏமாற்றங்கள் ஏற்பட்டன.

தரவுகள் சேகரிக்கக் கையாண்ட முறைகள்

இவ்வாய்வு, சமூக இயல் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்டதனால் மாதிரி முறையில் தரவுகள் சேகரிக்கப் பட்டன. மாதிரி முறையில் நோக்க மாதிரிமுறை பயன்படுத்தப் பட்டது. மேலும் விளக்க முறையும் பகுப்பாய்வும் கையாளப் பட்டன.

ஒரு தகவலாளியைச் சந்தித்த பின்பு அவர் கூறியபடி வேறொரு தகவலாளியைச் சந்தித்தும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இம்மாதிரித் தரவுகள் சேகரிப்பதைப் 'பனிப்பந்துக் குவியல் மாதிரி முறை' (Snow ball sample) என்று அழைப்பர்.

கையாண்ட உத்திகள்

கூர்ந்து கவனித்தல், கலந்து உற்று நோக்கல் முறையிலும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. திருவனந்தபுரம், கொல்லம் ஆகிய இருநகரங்களிலும் வாழும் தமிழர்கள் சிலர் வீட்டுச் சடங்குகளில் நேரடியாகக் கலந்து உற்று நோக்கியும் தரவுகள் அறியப்பட்டன. அப்போது ஐயம் ஏற்பட்டகாலை வயது முதிர்ந்தோர்களிடம் கேட்டு விளக்கம் பெறப்பட்டது.

பேட்டி, பட்டியல், வினா நிரல் முதலிய முறைகளிலும் தரவுகள் திரட்டப்பட்டன.

இம்முறைகளில் ஆய்வாளரின் மதிப்பீடுகளும் வெறுப்பு களும் ஊடுருவதற்கு வாய்ப்புண்டு[4] என்ற போதிலும் இதனை உணர்ந்து இவை ஏற்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளன.

ஆய்வு மூலங்கள்

களப் பணியில் திரட்டப்பட்ட தரவுகள் அனைத்தும் முதன்மை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டன. நாடு, மொழி, சாதி, கல்வி, பண்பாடு ஆகியவை குறித்து அறிஞர்கள் எழுதியுள்ள நூல்கள் முதன்மை ஆதாரங்களுக்குத் துணைமை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மொழி நடை

இவ்வாய்வேட்டில் கேரளப் பழக்க வழக்கங்களைக் குறிப் பிடும்போது வடமொழிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கேரள நாடு பற்றிக் குறிப்பிடப்படும் இயல், அலங்கார நடையில் எழுதப்பட்டுள்ளது. பொதுவாகத் தவிர்க்க முடியாத இடங்களில் தான் வடமொழிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வு அணுகுமுறை

வரலாற்று முறை, விளக்க முறை, ஒப்பீட்டு முறை ஆகிய அணுகுமுறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. கேரளத்தின் தோற்றம், தமிழர்களின் இடம் பெயர்தல் ஆகியவை வரலாற்று முறை ஆய்வாகக் கூறப்பட்டுள்ளன. தமிழர் பண்பாட்டு முறை ஆய்வில் விளக்க முறையில் விவரிக்கப்பட்டுள்ளது. கேரளத் தமிழர்களும் வேறு நாடுகளில் வாழும் தமிழர்களும் ஒப்பிடப் பட்டுள்ளனர். இம்முறை ஒப்பீட்டு முறை ஆய்வாக அமைந் துள்ளது.

ஆய்வு முன்னோடிகள் நூல் திறனாய்வு

நினைவுக் கெட்டாத காலத்திலேயே தமிழர்கள் இடம் பெயரும் வழக்கம் கொண்டவர்கள். 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது தமிழர் பழமொழி. கடல் கடந்தும் உள்நாட்டில் இடம் பெயர்ந்தும் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

வெளிநாட்டுத் தமிழர்கள் குறித்துத் தமிழில் முறையாக எழுதப்பட்ட நூல்கள் ஏதும் இதுவரை வெளிவந்ததாகத்

தெரியவில்லை. ஆங்கிலத்தில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. இவை பெரும்பாலும் இலங்கை, சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கத் தமிழர்கள் குறித்து எழுதப்பட்டவையாகும்.

இந்தியாவில் வேறு மாநிலங்களில் வாழும் தமிழர்கள் குறித்துக் கீழ்க் குறிப்பிடும் நூல் ஒன்று வெளி வந்துள்ளது:

முனைவர் ந. கடிகாசலம், 'தமிழும் தமிழரும்', உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை 1982.

வெளி மாநிலங்களில் வாழும் தமிழர்கள் குறித்துப் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. கேரளத் தமிழர்கள் குறித்து இரு கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அவை யாவன:

1. முனைவர் சாலை இளந்திரையன், 'இந்திய மாநிலங்களில் தமிழர்கள்', ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மலர்; மதுரை 1981.

2. திரு ஏ.என். தீன், 'தமிழா விழித் தெழு', கேரளத் தமிழ் மூன்றாவது ஆண்டுமலர், திருவனந்தபுரம் 1981.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நூலையும் கட்டுரையினையும் ஆய்வுக் கண்ணோட்டத்தில் விமரிசனம் செய்து கொள்ளல் இவ்வாய்வுக்குத் துணை செய்யும்.

முனைவர் ந. கடிகாசலம் எழுதியுள்ள, 'தமிழும் தமிழரும்' என்ற நூல் 108 பக்கங்கள் கொண்டது. இதில் கேரளத் தமிழருக்கென ஒரு பக்கம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் கேரளத் தமிழர் மக்கள்தொகை ஆறு இலட்சம் பேர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கேரளத்தில் வேலைபார்க்கும் தமிழறிஞர்களின் பெயர், அங்கு வாழும் தமிழ் எழுத்தாளர்களின் பெயர் ஆகியவை தரப் பட்டுள்ளன. தமிழ்ச் சங்கங்கள் உள்ள ஊர்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்நூலில் கேரளத் தமிழர் சமுதாயம், பண்பாடு ஆகியவை குறித்து ஏதும் குறிப்பிடப்படவில்லை. எனவே, கேரளத் தமிழர் சமுதாயம் குறித்து அறிந்து கொள்ள இந்நூல் துணை செய்யாது.

மேற்குறிப்பிட்ட இரு கட்டுரைகளும் ஆய்வு முறைக்குட் பட்ட கட்டுரைகள் அல்ல. கேரளத் தமிழர்கள் நிலையை ஓரளவுக்குக் கோடிட்டுக் காட்டும் வகையில் உள்ளன. கேரளத்

தமிழர் சமுதாயம் எதிர் நோக்கியிருக்கும் ஓரிரு சிக்கல் கள் கூறப்பட்டுள்ளன.

முனைவர் சாலை இளந்திரையன் கூறும் பல கருத்துகள் வரலாற்று அடிப்படையில் உறுதிப்படுத்த முடியாதனவாக உள்ளன.

பிற மாநிலங்களில் வாழும் தமிழர் குறித்து, 'தமிழகத்தின் அண்டை மாநிலங்களான கேரளம், கருநாடகம், ஆந்திரம் ஆகியவற்றில் வாழும் தமிழர்கள் பெரும்பாலோர் சென்றேறு குடிகள் அல்லர். காலங்காலமாக அவர்கள் அங்கேயே வாழ்ந்து வருகிறார்கள்' (ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மலர், மதுரை, 1981, ப.84) எனும் கருத்து வரலாற்று அடிப்படையில் உண்மையன்று. தமிழர்கள் பல காலக்கட்டங்களில் கேரளத்தில் குடியேறியவர்களாவர் (பார்க்க: இயல் 8).

'இந்தியாவின் வேறு மாநிலங்களில் குடியேறியிருப்ப வர்கள் (தமிழர்கள்) வேலை வாய்ப்புத் தேடிச் சென்றவர்கள்; பஞ்சம் பிழைக்கச் சென்றவர்கள் எனும் இரண்டு பிரிவுகளில் அடங்குவார்கள்" (ப.85).

கட்டுரை ஆசிரியர் இதனைக் கேரள மாநிலத்திற்கும் பொருந்தும் என்றே கூறுகின்றார். ஆனால் கேரளத்தில் இன்னொரு முறையில், மன்னர்கள் விரும்பி அழைத்ததன் காரணமாகத் தமிழர்கள் குடியேறியும் உள்ளனர் என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.

"கேரளம், கருநாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் வாழும் தமிழர்கள் அந்தந்த மாநிலங்களுக்கே உரியோராய்த் தொழில்களிலும் பெரும்பணிகளிலும் ஈடுபட்டு வந்தாலும் சிறுபான்மையோர் என்ற வகையில் அவர்களின் நிலை வேறு மாநிலங்களில் வாழும் தமிழர்களின் நிலையிலிருந்து பெரிதும் வேறுபட்டதாக இல்லை" (ப.85).

இக்கூற்று மூலம் கட்டுரை ஆசிரியர் எல்லா மாநிலங்களிலும் உள்ள தமிழர்களின் நிலையைப் பொதுமைப் படுத்துகின்றார். இது உண்மையன்று. கேரளத் தமிழர்களின் நிலை பிற மாநிலத்தில் வாழும் தமிழர்களின் நிலையிலிருந்து பல வகையிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இதற்குப் பல அரசியல் நிலக் கூறு காரணங்கள் உள்ளன. இஃதன்றி கேரளத் தமிழர்களையும் கருநாடகத்தில் வாழும் தமிழர்களையும் கூடப் பொதுநிலைப்படுத்த முடியாது.

கருநாடக மாநிலத்தில் தமிழர்களை எதிர்த்து ஓர் அரசியல் கட்சியே இயங்கி வருகின்றது. தமிழர்கள் சட்டசபையில் தமிழில் உறுதிமொழி எடுத்துக் கொள்வதற்கு எதிர்ப்பு உள்ளது. ஆனால், கேரளத்தில் இம்மாதிரிச் சச்சரவு ஏதுமில்லை.

'தமிழர்கள் இந்தியாவின் எந்த மாநிலத்தில் சென்று வாழ்ந்தாலும் தங்கள் தாய்த் தமிழகத்தோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளவே விரும்புகின்றார்கள். பொதுவாகக் கோடை விடுமுறையின்போது வெளி மாநிலத் தமிழர்களில் 100—இற்கு 85 பேருக்கு மேல் தமிழகத்திற்கு வந்து விடுகிறார்கள். இந்தியாவில் உள்ள வேறு எந்த மொழியினரையும்விடத் தமிழர்கள் இத்தகைய தாயக அன்பு விஞ்சியவர்களாகக் காணப்படுகின்றனர்" (ப.88).

வெளி மாநிலத் தமிழர்கள் தாயகத்தோடு எவ்வகையில் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்கிறார்கள் என்பது ஆய்வுக்குரியதாகும். கட்டுரை ஆசிரியர் ஒரு மாநிலத்தில் வேலை பார்ப்பவர்களையும் குடியேறியவர்களையும் ஒன்றுபடுத்தியிருக்கிறார். கேரளத்தில் வாழும் தமிழர்கள் குடும்பங்களில் நடைபெறும் சடங்குகள், கோயில் வழிபாடுகள் காரணமாகத்தான் தமிழகத்திற்கு வருகிறார்கள்; கோடை விடுமுறைதோறும் தாயகம் வருவதில்லை.

"அரசியலிலேகூட வெளி மாநிலத் தமிர்கள் தாங்கள் வாழும் இடத்து அரசியலைவிடத் தமிழகத்து அரசியலிலே அதிகம் ஆர்வம் காட்டுவார்கள்" (ப.88).

கேரள மாநிலத் தமிழர்களுக்கு இது பொருந்துமா எனில், பொருந்தாது என்றே கூறல் வேண்டும். தாங்கள் வாழும் பகுதியில் உள்ள அரசியல் தங்களைப் பாதிக்கும் அரசியல்; அதில் ஆர்வம் காட்டாமல் தமிழகத்து அரசியலில் ஆர்வம் காட்டுவார்கள் என்பது தமிழர்களை ஏதுமறியாதவர்களாக்குவதாகும்.

இவ்வாசிரியர் கூறியுள்ள வேறு இரு கருத்துக்கள் ஊன்றி ஆராயத்தக்கன. அவை யாவன:

1. "பிற மொழிப் பகுதிகளில் தங்கள் மொழி, பண்பாடுகளைக் காததுக் கொள்வதில் பல சிக்கல்களை எதிர்நோக்குகிறார்கள்" (ப.88).

2. "மொழி, கலை மற்றும் பழக்க வழக்கங்களிலும் பிறமொழி இன ஊடுருவல்களுக்கு இடம் தந்துள்ள பிறமாநிலத் தமிழர்கள் . . . ." (ப.88).

இப் பகுதியில் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட மற்றொரு கட்டுரை, 'தமிழா விழித்தெழு', கேரளத் தமிழ், ஆண்டுமலர் 1981 என்பதாகும். இதனை எழுதிய ஆசிரியர் கேரளத்திலேயே வாழ்பவராகையால் தமிழர்களின் சிக்கல்களை மட்டுமே இக் கட்டுரையில்கூறுகின்றார்.

இவற்றுள் சில சிக்கல்கள் தமிழர்கள் சிறுபான்மை யோராக இருப்பதால் ஏற்படும் சிக்கல்கள்; சில எல்லாருக்கும் ஏற்படும் அடிப்படைச் சிக்கல்கள். எனவே, பின்னதை நாம் புறக்கணித்து விடலாம்.

இக்கட்டுரையாசிரியரும், "அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த நாம் (தமிழர்கள்) தொழில் நிமித்தமாகக் கேரளாவில் குடி யேறியுள்ளோம்" (ப.115) என்று கூறுகின்றார்.

இக்கட்டுரையில் கூறப்படும் தமிழர் சிக்கல்களாவன:

அ) அடிப்படைத் தேவைகள்.
ஆ) ஆங்கிலக் கல்வியுடன் தமிழர்கள் மலையாளத்தையும் பாடமாகக் கற்கின்றனர்.
இ) தமிழர்க்கான மயானக்கரை இல்லாததால் தமிழர்கள் சொந்த ஊருக்கு இறுதிச் சடங்கு நடத்தச் செல்கின்றனர்.
ஈ) போக்குவரத்து வசதி.

இவற்றுள் அடிப்படைத் தேவைகள், போக்குவரத்து வசதிகள் (அ,ஈ) போன்றவை தமிழர்கள் என்ற முறையினால் **ஏற்படுபவையல்ல.** கேரளக் குடிமக்கள் என்ற முறையினால் ஏற்படும் சிக்கல், எல்லாருக்கும் உள்ள சிக்கல்கள், வேறு இரு சிக்கல்களும் தமிழர்களை எவ்வகையில் பாதிக்கின்றன என்பது ஆராயத்தக்கதாகும்.

ஆய்வமைப்பு

'ஆய்வின் நோக்கமும் முறைகளும்' என்ற இவ்வியலை அடுத்து, 'தமிழர்கள் தனி இனக்குழுவா' என்ற இரண்டாவது இயலில் இனக்குழுவிற்கு இலக்கணம் கூறி, 'கேரளத் தமிழர்களுக்கு இவ்விலக்கணம் பொருந்துமா' என்றும் கூறப்பட்டுள்ளது. அதோடு இனக்குழுக்கள் பலவற்றை ஒப்பீடு செய்து அமெரிக்கா விலும் பீஜித் தீவிலும் உள்ள தமிழர்கள் குறித்தும் கூறப் பட்டுள்ளது.

மூன்றாவது இயலில் 'தமிழர்களின் சிறுபான்மைச் சிக்கல்' ஆராயப்பட்டுள்ளது. பெரும்பான்மை, சிறுபான்மையர் உறவு,

பண்பாடு ஆகியவை குறித்து இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இவ்விலக்கணம் தமிழர்க்குப் பொருந்துமா' என்றும் ஆராயப் பட்டுள்ளது.

'கேரளத் தமிழர் பண்பாட்டுச் சிக்கல்' என்ற நான்காவது இயலில் மலையாளிகள் தமிழர் உறவு, பண்பாடு தன்மயமாகுதல், அதன் தன்மைகள், தமிழர் பண்பாடு போன்ற முக்கியமான கோட்பாடுகள் விளக்கப்பட்டுள்ளன.

ஐந்தாவது இயலாகத் 'தமிழர் கல்விச் சிக்கல்' கூறப் பட்டுள்ளது. கல்வியில் மொழியின் நிலை, மொழியும் குழந்தை வளர்ச்சியும், மொழியும் ஆளுமையும் போன்றவை விவரிக்கப் பட்டுத் தமிழ்க் குழந்தைகளுக்குச் சிக்கல் ஏற்பட்டுள்ளதா என்றும் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

'தமிழர்களின் அரசியல் சிக்கல்' ஆறாவது இயலாக இடம் பெற்றுள்ளது. இதில் தமிழர்—மலையாளிகள் அரசியல் வேறு பாடுகள், கேரளத் தமிழர்களின் அரசியல் நிலை, தமிழக அரசியல் பாதிப்பு, கொழுந்துவிட்டெரியும் சிக்கல்கள் முதலியவை விளக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆறு இயல்களும் கேரளத் தமிழர்களின் சமூக அமைப்பையும் சிக்கல்களையும் கள ஆய்வு செய்து ஆய்வுரை செய்து கொள்வதற்கு வாய்ப்பான தத்துவக் கோட்பாட்டுப் பின்னணியாக முற்பகுதியில் கூறப்பட்டுள்ளன.

பிற்பகுதியாகவுள்ள ஏழாவது இயலும் எட்டாவது இயலும் ஆய்வுக் களமான 'கேரளம்','கேரளத் தமிழர் சமுதாயம்' ஆகியவை பற்றிக் குறிப்பிடுகின்றன. 'கேரளம்' என்ற இயலில் அதன் தனித்தன்மை, நில எல்லை காலநிலை, திருவனந்தபுரம், தமிழர் வாழும் இடங்கள் கொல்லம், அங்குத் தமிழர் வாழும் இடங்கள் ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளன.

'கேரளத் தமிழர் சமுதாயம்' என்ற எட்டாவது இயலில் சங்ககாலம், புராண வரலாறு, மலையாள மொழித் தோற்றம், தமிழர்களின் வரலாற்றுப் பின்னணி, தமிழர்கள் எப்போது இடம் பெயர்ந்தனர் முதலானவை கூறப்பட்டுள்ளன.

ஒன்பதாவது இயலான ஆய்வுரையில் வினாப்பட்டியல் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் விளக்கமாக ஆராயப்பட்டுத் தமிழர் மலையாளிகள் ஊடாட்டக் கோலங்கள் கூறப்பட்டுள்ளன.

பத்தாவது இயலாக 'ஆய்வு முடிப்புரை' தொகுத்துத் தரப்படுகின்றது. அதனை அடுத்துப் பின்னிணைப்பும் ஆய்விற்குத் துணை நின்ற துணை நூற்பட்டியலும் இடம் பெறுகின்றன.

அடிக்குறிப்புகள்

1. பால் தேக்கரே என்பவர் தலைமையில் உள்ள மாநிலக் கட்சி.
2. V.A.Smith, *Ancient History of India,* Oxford Univesity Press, London, P.140.
3. L.K.Kidder, *Research Methods in Social Relations,* Holt Rinehart, New York, 1981, P.110.
4. *Ibid.,* P.111.

இயல் 2

2. தமிழர்கள் தனி இனக்குழுவா?

முன்னுரை

கேரள மாநிலத்தில் வாழும் தமிழர்கள் சிக்கலை ஆராய வேண்டுமெனில் முதலில் தமிழர்கள் தனி இனக்குழுவா என்று அறிவியல் அடிப்படையில் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். வேறு மொழியைப் பேசுவோர் அடுத்தடுத்து வாழும் போது சிக்கல்கள் இனக்குழுக்கள் அடிப்படையிலேயே ஏற்படுகின்றன. அமெரிக்கா இதற்கு நல்ல எடுத்துக் காட்டாய் விளங்குகிறது. பல்வேறு இனக்குழுக்கள் இங்கு வாழ்வது எவ்வகையில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன என்றும் அவற்றை அவர்கள் எவ்வகையில் தீர்த்துக் கொள்கின்றனர் என்றும் பல ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

கேரளத்தில் வாழும் தமிழர்கள் தனி இனக்குழுவினரா என்று ஆராயும் முன்பு, இனக்குழு என்றால் என்னவென்று இலக்கணப்படுத்திக் கொள்ளல் நம் ஆய்வுக்குத் தேவையான ஒன்றாகும்.

இனக்குழு இலக்கணம்

இனக்குழு என்பதற்கு அகராதிப் பொருளாவது:

'இனம் மற்றும் தேசியம் ஆகிய இரு தன்மைகளைத் தொடர்பு அடிப்படையில் கொண்டு ஒரு குழு இணைந்து காணப்பட்டு அடையாளப்படுத்தப்படுமெனில் அதனை இனக்குழு என்று கூறலாம்.'[1]

'அக்குழுவினருக்கு இனப் பண்பாட்டு ஒருமித்த தன்மை அவ்வளவு இணைந்து காணப்படுவதால் இது குறித்துப் புரியாமலிருப்பர்; நுணுக்க அறிவு பெறாத வெளியாரும் இதனை

வேறுபடுத்தி அறிந்து கொள்ளும் வகையில் இருக்க மாட்டார்கள்' என்றும் அவ்விலக்கணம் கூறுகின்றது.

இந்த இலக்கணம் மிகவும் குறுகிய வகையில், தற்காலச் சமூகத்தில் பல குழுக்களையும் இனக்குழு என்று வகைப்படுத்தும் நிலையில் உள்ளது.

இ.கே.பிரான்சிஸ்[2] என்பார் கூறிய இலக்கணம் பின்பு அமெரிக்கச் சமூகத்திற்கு மில்டன் கார்டன் உட்படுத்தி வகைப்படுத்த உதவியாக இருந்தது. பிரான்சிஸ் முதன்முதலாக இனத்தன்மைக்குச் சமூக உளவியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு பரந்த அளவில் விளக்கம் கூறினார். இனக்குழு என்பது குழு உறுப்பினர்களிடையே தாங்கள் இனக்குழுவைச் சேர்ந்தவர்கள என்ற ஒருமித்த தன்மை அடிப்படையில் உருவாகிறது என்று அவ்விளக்கம் கூறுகின்றது.

அவர் கூறுவதாவது: 'மானிடவியல் கூறுகிற விளக்கத்தின் அடிப்படையில் இனம் என்பது பொதுவான உடற்கூறுத் தன்மைகளைக் கொண்டது என்பதை வைத்து இனக்குழுவை ஓர் இனம் என்று கூற முடியாது. மேலும் இனக்குழு என்பது ஒரு தேசியமன்று—தேசியம் என்பது பொதுவான மொழி, எல்லை, பொதுப் பாரம்பரியம் ஆகியவற்றை உள்ளடக்கிப் பொதுவான அரசியல் அடிப்படையிலான அரசாங்கத்தைக் கொண்ட குழுவினர்'.

இனக்குழு என்பது ஒரு குழுவினர்க்கு உள்ள 'நாம் என்ற உணர்வு' ஆகும். இத்தகு நாம் என்ற உணர்வு ஒரு குழுவினர் எல்லோரும் முகத்துக்கு முகம் நேரிடையாகக் குடும்பத்திலிருப்பதுபோன்றோ, அண்டை அயலாரைப் போன்றோ இருக்கவேண்டுமென்பதில்லை. இத்தன்மை முதனிலைக் குழுவிலிருந்து இடைநிலைக் குழு உறவாகவும் மலரலாம். இத்தகு குழு ஏற்படும்போது தொடக்கத்தில் தனியான நில எல்லை, அரசியல் அமைப்பு, பொதுவான மொழி, பொதுவான மதிப்பீட்டு அளவைகள் ஆகியவை அடிப்படையானவையாக விளங்கும். இத்தகு இனக்குழுக்கள் ஒருங்கிணைந்து நல்ல வளர்ச்சியடைந்தபின்பு குழு உறுப்பினர்களிடையே மேற்குறித்த தன்மைகள் மாற்றமடைந்தாலும் மறைந்தாலும் இனக்குழுக்கள் மறையாமல் நிலைத்திருக்கும். உறுப்பினர்களிடையே நல்லிணக்கமான தனிப்பட்ட நெருங்கிய உறவு காணப்படும். உறுப்பினர்களிடையே நிலவும் உணர்ச்சி பூர்வமான ஐக்கியமும்,

பண்பாட்டு ஒருமித்த தன்மையும் குழு ஒற்றுமையை வலுப்படுத்தும். இக்குழுக்கள் தன்னிறைவு கொண்டனவாகவும் தனிமைப்படுத்தப்பட்டனவாகவும் விளங்கும்.

இனக்குழுக்களுக்கு அவற்றுக்கே உரித்தான துணை அமைப்பும் துணைப் பண்பாடும் காரணப்படும். மில்டன் கார்டன் இவ்விரு தன்மைகளையும் விளக்கமாக இனக்குழுத் தன்மை என்று கூறுகின்றார். இனக்குழுவின் துணை அமைப்புத் தன்மை என்பது, 'ஒருவனது வாழ்க்கை முழுவதும் ஏற்படும் முதனிலை, இடைநிலை உறவு முறையைத் தனது குழுவுக்குள்ளே அமைந்துள்ள வகையில் சமூக ஊடாட்டத்திற்கு வழி செய்யும் வகையில் அமைந்த சமூக அமைப்பு ஆகும்' (மில்டன் கார்டன்). துணைப் பண்பாடு என்பது, 'பெரிய சமூகத்தினைப் போன்று இணையான ஒரு குழுவிலுள்ள பண்பாடு. இக்குழுவில் குடும்பம் என்ற அமைப்பும் ஆண்களும் பெண்களும்—இருபாலர்களும் உட்படுவர். இவ்வமைப்பு ஒருவனது வாழ்நாள் முழுவதும் பிறருடன் சமூக உறவு கொள்ளும் வகையில் பல குழுக்களையும் நிறுவனங்களையும் கொண்டிருக்கும்' (மில்டன் கார்டன்).

ஓர் இனக்குழுவின் துணைப் பண்பாடு வேறொரு இனக்குழுவின் துணைப் பண்பாட்டிலிருந்து வேறுபடுத்தி அறியும் வகையிலும் எது ஆதிக்கம் வாய்ந்த பண்பாடு என்று அறியும்வகையிலும் காணப்படும்.

அமெரிக்க நாட்டைப் பொறுத்த வரையில் தேசீயம், சமயம், இனம், நாடு ஆகியவை ஓர் இனக்குழுவை அடையாளப் படுத்தும் காரணிகளாகும்.

இந்தியச் சமூக வரலாற்றுப் பின்னணி வேறுபாடானது. இந்தியச் சமூகத்தில் இனக் குழுவை அடையாளப்படுத்திக் கண்டுகொள்ள வேண்டுமெனில் வரலாற்றுக் காலத்துக்கு முன்பு இருந்து 19—ஆம் நூற்றாண்டு வரையிலும் ஏற்பட்டிருக்கும் இடம் பெயர்தலையும், இடம் பெயர்ந்த குழுவின் பண்பாட்டுச் சமூக அமைப்புத் தன்மைகளையும் கவனப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று விஜய்.பி.புனேகார் கூறுகிறார்.[3]

அமெரிக்காவில் எக்காலத்தில் மக்கள் இடம் பெயர்ந்தனர் என்று உறுதியாகக் கூறலாம். ஆனால், இந்தியாவில் இதனை அறுதியிட்டுக் கூறுவதற்கு ஆதாரம் ஏதுமில்லை. ஆனால்,

கேரளத்தில் தமிழர்கள் இடம் பெயர்ந்ததை ஆராயும்போது சாதிவாரியாக ஒன்றிரண்டு சாதியினர் நீங்கலாக ஏனையோரைப்பற்றி நாம் வரலாறு மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

மொழியும் வட்டாரமும்

மொழியும் வட்டார உணர்வும் இனக்குழு என்று அடையாளப்படுத்தப் பயன்படுகின்றன என்று விஜய்.பி.புனேகார் கூறுகின்றார்.[4]

இதனை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது பல்வேறு மொழி பேசுகிறவர்களை வெவ்வேறு இனக்குழுக்கள் என்றே கூறவேண்டும். இத்தகு வேறுபட்ட மொழியைப் பேசுவோர்கள் வட்டார வேறுபாடு கொண்டவர்களாகவும் காணப்படுவர் என்பது அறிந்ததே.

இத்தன்மைகள் இவ்வாய்வுக்கு முக்கியமானவையாகும். ஏனெனில் இரண்டு வேறு வேறு மொழிகளைப் பேசுகிறவர்களைப் பற்றியே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

தமிழர்களும் மலையாளிகளும் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இருவேறுபட்ட இனக்குழு எனக் கூறலாமா என்ற கேள்வி எழுகின்றது.

இதற்கு முன்னால் இனக்குழு என்னவென்று இலக்கணப் படுத்தியதைக் கேரளத் தமிழர்களுக்குப் பொருத்திப் பார்த்தால் அவர்களையும் இனக்குழு என்று கூறுவதில் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

திருவிதாங்கூரில் வாழ்ந்த தமிழர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது கே.எம்.பணிக்கர்[5] வேறுபட்டவர்கள் என்று தான் கூறுகின்றார்.

அவர் கூறுவதாவது: "இத் தென்பகுதி (தென் திருவிதாங்கூர்) காலநிலைப்படியும் இன அடிப்படையிலும் தமிழ் மாவட்டங்களுடன் இயைந்து காணப்படுகின்றது. அரசியல் பண்பாட்டுத் தொடர்பு மதுரை, திருச்சிராப்பள்ளியோடு தொடர்பு கொண்டதாக விளங்குகின்றதே தவிர கள்ளிக் கோட்டை, கொச்சி, கொல்லத்தோடு அன்று".

இதன் மூலம் தமிழர் — மலையாளிகள் பண்பாடுகள் வேறானவை என்பது புலனாகும். ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருவரும் விளங்கியபோதிலும் இருவேறு பண்பாடு கொண்டவர்களாகவே உள்ளனர் என்பதற்கு வேறு ஆதாரம் வேண்டுவதில்லை.

இனக்குழு என்பதற்கு எல்பிரட் டபிள்யூ. ஸ்டுவெர்ட்[6] என்பார் கூறிய இலக்கணத்தைப் பொருத்திப் பார்க்கும்போதும் கேரளத் தமிழர்களை இதற்குப் பொருத்தமானவர்களாகவே கூற வேண்டும்.

அவர் கூறுவதாவது: "பெரும்பான்மையோருடன் வாழும் ஒரு குழுவினர் பண்பாட்டு அடிப்படையில் அவர்களிடமிருந்து வேறுபட்டுக் காணப்படுவர் என்றால் அவர்களை இனக்குழு என்று கூற வேண்டும்".

இவ்விலக்கணத்தைப் போன்ற வேறொரு இலக்கணத்தை மில்டன் கார்டன் (1964. ப.234) கூறுகின்றார்.

அவர் கூறுவதாவது: "இனக்குழு என்பது ஒரு பெரிய உட்குழுவாகும் — சமூக வகுப்புகளும், முதனிலைக் குழுக்களும் குடும்பம் போன்ற பல நிறுவனங்களும் கொண்டது — இதனை வேறொரு வகையில் கூறினால், உயர்ந்த அமைப்புடைய இச் சமூகத்தின் எல்லைக்குள்ளேயே ஒருவன் விரும்பினால் தொட்டில் முதல் சுடுகாடு வரையிலும் தன் வாழ்க்கையைப் பொருள் உள்தாகக் கழித்துக் கொள்ள முடியும்".

கேரளத் தமிழர்களுக்குப் பொருந்துமா?

மேற்குறிப்பிட்ட இரு விளக்கங்களும் கேரளத் தமிழர் களுக்குப் பொருந்துமா என ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.

மிகப்பெரிய மலையாளச் சமூகத்தின் உட்பிரிவாகத் தமிழர்கள் விளங்குகின்றனர். தமிழர்க்கே உரித்தான குடும்ப அமைப்பு உள்ளது. ஒருவன் பிறப்பு முதல் இறப்பு வரையிலும் தமிழர்களுடன் உறவாடி மட்டுமே கழித்துக் கொள்ள முடியும்.

எனவே, கேரளத் தமிழர்களை இனக்குழு என்றே அழைக்க வேண்டும். தமிழர்களை இனக்குழு என்று வகைப்படுத்திக் கொள்ளல் இவ்வாய்வுக்கு மிக முக்கியமானதாகும்.

கேரளத்தில் வாழும் தமிழர்களின் சிக்கல்களை இந்த

அடிப்படையில் இரு வேறு பண்பாட்டின் அடிப்படையில் ஆராய வேண்டியிருப்பதால் இனக்குழு என்னவென்று இலக்கணப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இனக்குழுக்கள் — ஓர் ஒப்பீடு

கேரளத் தமிழர்களைச் சிறுபான்மை இனக்குழு என்று வகைப்படுத்தி ஆராயும்போது பிற நாடுகளில் இம்மாதிரி வாழும் வேறு சில சிறுபான்மை இனக்குழுக்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதும் இவ்வாயவுக்குப் பொருத்தமானதாக இருக்கும். தமிழர்களே பல நாடுகளிலும் சிறுபான்மை இனக்குழுக்களாக வாழ்ந்து வருகின்றனர். இது தவிரவும் வேறு தேசிய இனத்தவர்களான கிரேக்கர்கள், போலந்துக்காரர்கள், யூதர்கள், செர்மானியர்கள், ஈரானியர்கள், மொரொக்கோவினர், அராபியர்கள் ஆகியோரும் பல்வேறு நாடுகளில் பல்வேறு சிறுபான்மை இனக்குழுக்களாக வாழ்ந்து வருகின்றனர்.

வேறு நாடுகளில் வாழும் இத்தகு இனக்குழுவினர் தங்கள் சொந்த நாட்டிலிருந்து நில அடிப்படையில் நீண்ட தூரத்தில் வாழ்பவர்களாவர். வெளி நாடுகளில் வாழும் தமிழர்களும் இவ்வகையினரேயாவர். ஆனால் கேரளத் தமிழர்களின் நிலை வேறு.

1957—ஆம் ஆண்டு மொழிவாரி மாகாணம் அமைப்பது வரையிலும் தமிழர்கள் திருவிதாங்கூர் கொச்சியில் 5 தாலுகாக்களில்[7] பெரும்பான்மையோராக வாழ்ந்து வந்தனர். கேரள மாநிலம் என்று மாறிவிட்ட பிறகு தமிழர்கள் பல இடங்களிலும் சிதறி வாழ்பவர்களாகவும் முன்பு இருந்ததை விடவும் சிறுபான்மையோராகவும் மாறிவிட்டனர். வரலாற்றுப் பின்னணியில் பார்த்தால் கேரளம் முன்பு சேர நாடாகவும் தமிழர்களே முழுவதுமாக வாழ்ந்த பூமியாகவும் இருந்தது. இப்போதோ அவர்கள் சிறுபான்மையோராக அதே பூமியில் வாழ்கின்றனர்.

வேறு நாடுகளில் பெரும்பான்மையினராக வாழும் மக்களுக்கும் சிறுபான்மையோராகக் காணப்படும் பல இனக்குழுவினர்க்கும் பல வகையிலும் பிணக்குகள் உள்ளன. இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் இனக்குழுக்கள் இத்தகைய சிக்கல்களில் சிக்கித் தவிக்கின்றன.

கோவாவில் வாழும் கன்னடியர்கள், அசாமில் வாழும் வங்காளிகள், கன்னடத்தில் வாழும் தமிழர்கள், மகாராட்டிரத்தில் வாழும் தமிழர்கள் ஆகியோர்களுக்கான சிக்கல்கள் போன்று கேரளத் தமிழர்களுக்கு அரசியலில் சிக்கல்கள் இல்லை. இசுரேலில் வாழும் அரேபியர்களைப் போன்று கேரளத்தில் தமிழர்களுக்கு முரண்பாடுகளும் பிணக்குகளும் இல்லை.

கேரளமும் தமிழகமும் இந்தியாவின் அங்கமாக விளங்குவதனால் வேறு நாடுகளில் காணப்படும் அளவிற்கு இனக்குழுக்களின் தேசியப் பிரச்சினைகள் தமிழர்—மலையாளியிடம் எழவில்லை.

இசுரேலில் வாழும் அராபியர்கள் தங்களை விடத் தாழ்ந்தவர்கள் என்று பெரும்பான்மையான இசுரேலியர்கள் கருதுகின்றனர். இது அமெரிக்காவில் வாழும் நீக்ரோக்கள் அமெரிக்கர்களை விடவும் தாழ்ந்தவர்கள் என்று கருதப் படுவதைப் போன்றதாகும்.

இந்த நிலையிலும் கறுப்பர்கள் என்று வெறுப்பாக அழைக்கப்படும் நீக்ரோக்கள் வெள்ளையர் சமூகத்துடன் ஒருங்கிணைந்து வாழவே முயலுகின்றனர். இதனை எதிர்த்துத் தங்கள் தனித் தன்மையை வெளிப்படுத்த வேண்டும் எனும் கொள்கையுடைய 'கறுப்பு முசுலீம்' என்ற பிரிவினர் நீக்ரோ மக்களிடம் செல்வாக்குப் பெற்று வருகின்றனர். வெள்ளையர் சமூகத்துடன் இணையாமல் தங்கள் தனித் தன்மையுடன் வாழவேண்டும் என்ற முழக்கத்தை எழுப்பிப் போராடி வருகின்றனர் (லிங்கன் 1961, 29).

அமெரிக்காவில் வாழும் தமிழர்கள்

அமெரிக்காவில் வாழும் பல்வேறு இனக்குழுக்களுக்கும் இம்மாதிரிச் சிக்கல்கள் உள்ளன. 'இந்தப் பூலோகச் சொர்க்கத்தில்' (அமெரிக்காவில்) இன்று புதிதாகப்பிரச்சினைகள் பல துவங்கியிருக்கின்றன[8] — குறிப்பாக அங்குக் குடியேறிய இந்தியர்களுக்கு.

அமெரிக்காவில் குடியேறியவர்கள் இருதலைமுறையைக் கடந்தவுடன் அமெரிக்கச் சமூகத்துடன் பண்பாட்டு முறையில் ஒருங்கிணைந்து விடுகின்றனர். அமெரிக்கச் சமூகம் அவர்களைக் 'கபளீகரம்' செய்து விடுகின்றது. இத்தகு இனக்குழுக்களில் குழந்தைகள் ஆங்கிலத்தைக் கற்று அமெரிக்கர்களாகவே மாறி

வருகின்றனர் (ரிடா ஜேம்ஸ் சைமன், 1978, ப.18). போலந்துக்காரர்கள், இத்தாலியர்கள், ஐரிஷ் மற்றும் கிரேக்கர்கள் இம்மாதிரி நிலையில் காணப்படுகின்றனர். ஆனால் சீனர்களும் சப்பானியர்களும் அமெரிக்கச் சமூகத்துடன் இணைந்து கொள்வதில் சிக்கல்கள் உள்ளன. பல்வேறு தடைகள் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளன.

இதற்கு நேர்மாறாக அமெரிக்கச் சமூகத்துடன் இணையாமல் தனித்துத் தங்கள் பண்பாட்டு முறைகளைப் பேணிக் கொள்ள வேண்டும் என்று ஆமிஷ் Amish மெனோான்ட்டிஸ் Menonities மான்மோன்ஸ் Monmons மக்களைப் போன்ற இனக்குழுவினர் விரும்புகின்றனர்.[9]

அமெரிக்கர்கள் இன ஒதுக்கல் கொள்கையைப் பின் பற்றுகின்றனர் என்ற குற்றச் சாட்டு நிலவுகின்ற காலத்தில், இத்தகைய இனக்குழுக்கள் தாங்களாகவே இன ஒதுக்கலை ஏற்படுத்திக் கொள்வதை விந்தைப் பூமியான அமெரிக்காவில் காண்கின்றோம்.

அமெரிக்காவில் வாழும் தமிழர்களுக்கும் அமெரிக்கச் சமூகத்துடன் இணைந்து வாழ்வதில் சிக்கல் ஏற்பட்டு வரு கின்றது. எனவே, அவர்கள் இந்த மாதிரி நிலையைத் தவிர்த்து வாழவே விரும்புகின்றனர் (ஆனந்தவிகடன், 2-1-1983). ஆமிஷ் போன்ற மக்களைப் போன்று அமெரிக்காவிலேயே தங்கள் பண் பாட்டைக் காத்துக் கொண்டு வாழ முடியாமல் இந்தியாவிற்கே திரும்பி வந்து விடுகின்றனர்.

அமெரிக்காவில் மிகப் பெரிய கம்ப்யூட்டர் கம்பெனியில் பணியாற்றிய விஜய்.கே.இராகவன்[10] தனது குடும்பத்துடன் இந்தியா திரும்பிவிட்டார். அதற்கு அவர் கூறும் காரணம் என்ன? 'பெண்ணுக்காகத் திரும்பினோம்' என்பதாகும்.

திருமதி கீதா இராகவன் கூறியதாவது: ''என் முதல் பெண் ஷீலாவுக்கு ஐந்து வயதாகிறது. இரண்டாவது பெண் பிரியாவுக்கு இரண்டு வயது. இவர்கள் அமெரிக்கச் சூழ் நிலையில் வளர்வதைவிட நமது நாட்டுச் சூழ்நிலையில் வளர்வதையே நாங்கள் விரும்புகிறோம். புறப்பட்டு வந்துவிட்டோம். நமது 'கல்ச்சரை' நமது குழந்தைகளுக்கு இங்குத் தானே சரியாகப் புகட்ட முடியும்?''

வேறு சில தமிழர்கள் குடும்பமாகத் தாயகம் திரும்பாமல் பெண் குழந்தைகளை மட்டும் தமிழகத்திற்கு அனுப்பிக் கல்விபெறச் செய்கின்றனர். இதுவும் அதிகச் சிக்கல்களைக் கொண்டு வராமலில்லை. டாக்டர் எஸ் உதயமூர்த்தி, 'பூலோக சொர்க்கத்தில் ஒரு புதிய பிரச்சினை'[11] என்ற கட்டுரையில் கூறியிருப்பதாவது:

'பலர் இதற்குப் பயந்து (அமெரிக்கப் பண்பாட்டுக்கு) தங்கள் பெண் குழந்தைகளை இந்தியாவில் படிக்க அனுப்பு கின்றனர். அந்தப் பெண் குழந்தைகளால் இந்தியப் பாட போதனையை, பரீட்சை முறையைத் தாள முடிவதில்லை. சுற்றுப்புறச் சுகாதாரம் வேறு மனத்தில் அருவருப்பை ஏற்படுத்துகின்றது. பெரும்பாலான பெண்கள் மீண்டும் அமெரிக்காவுக்கே படிக்க வந்து விடுகிறார்கள்'.

'. . . . . அமெரிக்கச் சூழ்நிலை நம்மை (இந்தியர்களை) வெகுவாக நெருக்குகிறது. அமெரிக்காவில் வாழ்ந்து கொண்டு இந்தியக் கலாச்சார அளவுகோலை வைத்துக் கொண்டு சங்கடப் படுகிறார்கள்'.

தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல் பண்பாட்டுச் சிக்கல். அங்கேயும் இல்லை, இங்கேயுமில்லை என்ற புதிய சூழல். 'இப்போது கலாச்சார வேறுபாடு என்ற பெயரில் அது அமெரிக்காவில் வாழும் இந்தியர்களை மோதுகிறது'.

உருசியாவிலிருந்து இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவில் குடியேறிய மொலோகன் (Molokan), துகோபார் (Dukhobar) ஆகிய இனக்குழுவினர்க்கும் பண்பாட்டுச் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று பாலின் எங் 'The pilgrims of Russian Town' என்ற நூலில் கூறுகின்றார். பெரும்பான்மையினரான அமெரிக்கர் களின் பண்பாட்டிலிருந்து தங்கள் பண்பாட்டைத் தனியாகக் காத்துக் கொள்ள முடியவில்லை. பெரியவர்கள்தாம் தங்கள் பண்பாட்டைக் காத்துக் கொள்ள வேண்டும் என்று போராடு கின்றனர். இளைய சமூதாயத்தினர்க்கு இம்மாதிரி எண்ணம் ஏதுமில்லை; தங்கள் பண்பாடு மிகச் சிறந்தது என்ற எண்ணமும் இல்லை. அமெரிக்கப் பண்பாட்டைப் பின்பற்றவே அவர்கள் விழைகின்றனர். இந்த நிலையில் இந்த இனக்குழுவின் பழைய தலைமுறையினர் இரண்டு முனைகளில் போராட வேண்டியிருக் கின்றது. ஒருபுறம் வளைத்துக் கொள்ளும் அமெரிக்கப் பண்பாடு;-

மறுபுறம் அதற்கு இரையாகிவிடத் துடிக்கும் இளைய தலை முறையினர். இவ்விரு சக்திகளையும் எதிர்த்து மொலோகன் இனக்குழுவினர் எத்தனை நாள் தங்கள் பண்பாட்டைத் தனியாகக் காத்துக் கொள்ளப் போகின்றனரோ தெரியவில்லை.

அமெரிக்காவில் உள்ள தமிழர்களுள் அண்மையில் குடியேறிய இளைய தலைமுறையினர் அமெரிக்கப் பண்பாட்டில் தங்களைத் தன்மயமாக்கிக் கொள்ள விரும்பவில்லை. அங்கே பிறந்து வாழ்ந்து வரும் சிலரும் தாயகத்தின் மீது பற்றுநிலை கொண்டவர்களாக உள்ளனர். 'சுஜாதா'வின், 'பிரிவோம் சந்திப்போம்' கதையில் வரும் ரத்னா கேட்டது மாதிரி ''என்னை இந்தியா அழைச்சிட்டு போயிடுவீங்களா?''[12] என்று தான் கேட்கின்றனர்.

மேற்கிந்தியத் தமிழர்கள்

மேற்கிந்தியத் தீவு, பீஜி, கரிபியன் தீவுகளில் வாழும் இந்தியர்கள் எப்படியுள்ளனர்? டிக் ஹங்கர் (1977, 53) படம் பிடித்துக் காட்டுகின்றார்:

"இந்தியக் கிராமம் அங்கே வந்துவிட்டது — அந்தக் கோயில், அந்த ஆலமரம், அந்தக் குறுகலான சந்து, தூசிபடிந்த வீடுகள் ஆகியவை தொடர்ந்து நிலையானவற்றைப் பேசுகின்றன. இந்தியக் கிராமம் தான் இந்தியா. கரும்புத் தோட்டக் குடியிருப்பில் இந்தியக் கிராமம் எஸ்டேட்டின் ஒரு விரிவுப் பகுதியாகக் காணப்படுகின்றது".

இது மட்டுமா? மக்களின் வாழ்க்கையையும் அவர் படம் பிடித்துக் காட்டுகின்றார்:

"ஆற்றோரத்தில் பெண்கள் துணி துவைக்கும் கல்லில் துணியை அடித்து வைத்து வெளியே வெயிலில் காயப்போடு கின்றனர் — பல்வேறு வண்ணக் கலவையாகப் புடவைகளை இந்தியாவில் செய்வது போன்று காயப் போடுகின்றனர்.

சந்தையில் இந்தியாவில் காணப்படுவது போன்று காய்கறிகள் குவியலும், தானியக் குவியலும், கூடை முறங்களும் காணப்படுகின்றன. பெண்கள் தண்ணீர்க் குழாயிலிருந்து — கிணற்றிலிருந்தல்ல — (இந்தியாவில் இருப்பது போன்று) நளினமாகத் தண்ணீர் எடுக்கின்றனர். அந்தியில் ஒரு பையன் மேய்ச்சல் இடத்திலிருந்து ஆடுகளை வீட்டுக்கு விரட்டிக்

கொண்டிருக்கின்றான். ஒரு புனிதம் வாய்ந்த மரத்தின் அடியில் இருக்கும் தெய்வத்துக்கு விளக்கேற்றி மலர்களை அர்ப்பணிக்கின்றனர் — இந்தியாவில் இருப்பது போன்று காணப்படுகின்றது".

அடிக்குறிப்புகள்

1 Henry Pratt Fair Child, (Editor)*Dictionary of Sociology*, New York Philosophical Library 1947, (P.109).

2. E.K.Francis, "The Nature of the Ethnic groups", *American Journal of Sociology*, March 1947, (PP.393-400).

3. Vijay B.Punekar, *Assimilation, A Study of North Indians in Bangalore*, Popular Prakashan, Bombay, 1974, P.14.

4. *Ibid.*, P 25.

5. K.M.Panickar, *A History of Kerala*, Annamalai University, Anna malai Nagar, 1960, P.226

6. Elbert W.Stewert James A.Glynn, *Introduction to Sociology*, II Ed, Mcgraw Hill, New Delhi, 1976 P.152.

7. தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு செங் கோட்டை ஆகியவை.

8. முனைவர் எசு.உதயமூர்த்தி, ஆனந்தவிகடன், சென்னை, 2.01.1983, (ப.74).

9 Smith Elemer Lenis, *The Amish People Exposition Press*, New York, 1960, P.227.

10. ஆனந்த விகடன், சென்னை, 2.01.1983, ப.1

11. *Ibid.*, P 16.

12. ஆனந்த விகடன், சென்னை, 20.03.1983, ப.93

இயல் 3

3. பண்பாடும் சிறுபான்மையினரும்

பெரும்பான்மையர் சிறுபான்மையர் உறவு:

கேரளத்தில் பெரும்பான்மையோர் மலையாளிகளாகவும் சிறுபான்மையோர் தமிழர்களாகவும் வாழ்வதனால் இவ்விரு பிரிவினர்களின் உறவு முறையைப் பெரும்பான்மையர் — சிறுபான்மையர் உறவு என்ற அடிப்படையில் ஆராய்வதும் இவ்வாய்வுக்குப் பொருத்தமானதாகும்.

பெரும்பான்மையர் — சிறுபான்மையர் தொடர்பு குறித்து அரசியல் வரலாற்றுப் பொருளாதார அறிஞர்கள் பல்வேறு உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளனர். இக கருத்துக்கள் பல்வேறு திறத்தனவாக உள்ளன. ஒரு நாட்டில் சிறுபான்மையர் எவ்வகையில் உள்ளனர் என்றும் பிற சிறுபான்மையர்களுடன் அவர்கள் எவ்வகையில் உறவு வைத்துள்ளனர் என்றும் அறிய பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிறதுறையைச் சேர்ந்தவர்கள் சிறுபான்மையர் சிக்கல் குறித்து ஆயும்போது அதன் நோக்கங்கள் பலவகையிலும் வேறுபட்டுக் காணப்படும். அரசாங்கத்துடன் சிறுபான்மைச் சமூகங்கள் எவ்வகையில் பிணக்கு ஏற்படுத்தி உரிமைக்குப் போராடுகின்றன என்றுதான் அரசியல் அறிஞர் ஆராயமுடியும். இதனைப் போன்றே பிறதுறையைச் சேர்ந்தவர்கள் ஒருசில குறிப்பிட்ட நோக்கங்களை அடிபபடையாக வைத்துக்கொண்டு சிறுபான்மையோர் சிக்கல்களை அணுகுகின்றனர். இவ்வகைச் சிக்கல்களுக்கு அவர்கள் அரசியல் அல்லது பொருளாதாரத் தீர்வுகளை மட்டுமே அளிக்க முடியும். சமூகப் பண்பாட்டுத் தன்மைகள் பின்தள்ளப்பட்டுப் புறக்கணிக்கப்படுகின்ற நிலையும் உருவாகிவிடுகிறது.

சிறுபான்மையோரின் சமூகப் பண்பாட்டுமுறைகள் இத்தகு பன்மொழி பேசுவோர் நாடுகளில் வாழும்போது

எவ்வகையில் மாற்றங்களை மேற்கொள்கின்றன என்று சமூக வியலாளர்களால் மட்டுமே ஆராயமுடியும்.

கேரளத் தமிழர்கள் பிற சமூகத்தினருடன் எவ்வகையில் இணைந்து போகின்றனர்? எவ்வகையில் எதிர்த்துப் போராடு கின்றனர்? எவ்வகைக் காரணிகள் அவர்களுக்கு உதவி அளிக்கின்றன அல்லது இடையூறாக இருக்கின்றன? தமிழர்கள் பரந்த அளவிலான சமூகத்துடன் தொடர்பு கொண்டு வாழும்போது தங்களுக்கே உரித்தான பண்பாட்டு முறையில் எவற்றைப் பேணி வளர்க்க வேண்டும் என்று கருதுகின்றனர்? எவற்றை எதிர் காலத்தில் புறக்கணித்துவிடலாம் என்று எத்தனிக்கின்றனர்?

இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள வேண்டுமெனில் தமிழர் மலையாளிகள் உறவில் சிக்கல்கள் விளைந்துள்ளனவா என்று ஆராய்ந்தால்தான் முடியும். சிக்கல்கள் எல்லாருக்கும் விளங்கும்படியாக வெளிப்படையாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. நுணுகி ஆராய்ந்தால் புலப்படும் வகையில் சமூகத்தில் மிகவும் ஆழமான இடத்தில் நிலவுவதாகவும் இருக்கலாம்.

தமிழர்களின் சிக்கல்களைச் சிறுபான்மையர்— பெரும்பான்மையர் என்ற நோக்கில் ஆராயும்போது இரண்டு முக்கியத் தன்மைகளை முதலில் கருத்தில் கொள்ளல் இன்றியமையாததாகும். பண்பாடு என்பதற்கான இலக்கணம் சிக்கலானது: சிறுபான்மையர் என்பதை விளக்குவதில் இடர்ப் பாடு உளளது.

பண்பாடு

பண்பாடு என்பதற்குச் சர் எட்வர்ட் டைலரின் விளக்கத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளலாம்.

'மனிதன் சமூகத்தில் அங்கமாகியிருப்பதன் மூலம் அடைந்து கொள்கின்ற திறமைகளையும் பழக்கங்களையும் போன்று அறிவுத் திரட்சி, நம்பிக்கைகள், கலை, ஒழுக்க விதிகள், சட்டம், வழக்கம் ஆகியவற்றின் கூட்டு மொத்தமே பண்பாடு'.[1] என்பது டைலர் கூறிய இலக்கணமாகும்.

இவ்விளக்கத்துடன் மலினோஸ்கியின் இலக்கணத்தை இணைத்துப் பார்க்கும்போது பண்பாடு என்பதற்கான விளக்கம் மிகவும் தெளிவாகப் புலப்படும்.[2]

மலினோஸ்கியின் இலக்கணமாவது: 'மனிதன் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தன் சுற்றுப்புறச் சூழலில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளும் கருவியே பண்பாடு'.

சிறுபான்மையர்

சிறுபான்மையர் என்பதற்கான இலக்கணத்தை எல்லோருமம ஏற்றுக் கொள்ளும் வகையில் கூறுவது கடினமாகும். தற்போது இரு விளக்கங்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளும் வகையில் உள்ளன.

லூயிஸ் விர்த் என்பார், 'சிறுபான்மையர் என்பார் உடலியல் அல்லது பண்பாட்டு வேறுபாட்டின் காரணமாகப் பிறருடன் சரிசமமாக நடத்தப்படாமல் ஒதுக்கப்படும் குழுவினர்' என்று கூறுகின்றார்.[3]

இவ்விலக்கணத்தைப் பொறுத்தவரையில் சிறுபான்மையர் என்பவர்கள் அரசியல் அடிப்படையில் அடிமைப்பட்டுச் சமூக பொருளாதார முறையில் சம வாய்ப்பில்லாமல் ஒதுக்கப்பட்டுத் தாழ்த்தப்பட்டு இருப்பவர்கள் என்றுதான் பொருள். இவ் விளக்கம் இனம் மற்றும் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு விளங்கியபோதிலும் அதிகம் முக்கியத்துவம் அளிப்பது பண்பாட்டிற்கே என்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

ஐக்கியநாட்டுச் சபை அளித்துள்ள விளக்கம் (1950) சிறுபான்மையர் என்போர் பண்பாட்டுச் **சிறுபான்மையர்** என்பதைக் கருத்தில் கொண்டுள்ளதாகக் காணப்படுகின்றது. அரசியல் சமூகக் காரணிகளையும் அதோடு உள்ளடக்கியுள்ளது என்றும் கூறலாம். இக்கருத்தின்படி, 'சிறுபான்மையோர் என்போர் தாங்கள் வாழும் நாட்டில் ஆதிக்கச் சக்தியில்லாதவர்களாகவும் அதே நேரத்தில் பற்றுநிதியுள்ளவர்களாகவும் இருந்து கொண்டு மற்றவர்களிடமிருந்து வேறுபட்ட தங்களது இன மொழி சமயத் தன்மைகளை இயல்பாகவே பேணி வளர்க்கும் வகையில் எண்ணிக்கை கொண்டவர்களாகவும் இருப்பவர்கள் ஆவர்'. இந்த விளக்கத்தில் **'ஆதிக்கமில்லாதவர்கள்'** என்றும் 'விசுவாசமுள்ளவர்கள்' என்றும் சிறுபான்மையர் விவரிக்கப் பட்டுள்ளனர். இதற்குக் காரணம் அரசியல் பின்னணியில் இந்த இலக்கணம் கூறப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

எல்வர்த்தும் ஐக்கிய நாட்டுச் சபையும் அளித்துள்ள இலக்கணம் எல்லோரும் முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்ளும் வகையில் இல்லை.

ஐக்கியநாட்டுச் சபை அளித்துள்ள இலக்கணமானது பெண்கள், குருடர்கள், திருடர்கள் முதலியோரையும் சிறு பான்மையர் என்ற இலக்கணத்திற்கு உட்படுத்தும் வகையில் உள்ளது. ஏனெனில் இவர்களும் தங்களுக்கே உரித்தான பண் பாட்டு முறைகளைப் பேணி வளர்க்க முயற்சி செய்து வருகின்றனர். இவர்களையும் சிறுபான்மையர் என்ற விளக்கத் திற்கு உட்படுத்துவது பொருத்தமானதன்று என்பதனால் ஐக்கிய நாட்டு விளக்கம் அவ்வளவாக ஏற்றுக் கொள்ள முடியாது.

பண்பாட்டைப் பேணி வளர்த்தல் என்று இவ்விளக்கத்தில் கூறப்பட்டிருப்பதும் தெளிவானதாக இல்லை. எந்தவகையில் பேணி வளர்த்தல் என்பது புலனாகவில்லை.

முன்பு கூறிய இரு இலக்கணங்களும் சிறுபான்மையர் என்போர் பிறரால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு ஒதுக்கப்படுவோர் கள் என்று தோன்றும் வகையில் வரையறை செய்கின்றன. இத்தன்மைச் சிறுபான்மையர் என்று அழைக்கப்படுவோர் எல்லோரிடமும் காணப்படுகின்றது என்று கூற முடியாது.

ஆப்பிரிக்காவில் உள்ள சிறுபான்மையினரும் பிரஞ்சு கானடாவில் வாழ்பவர்களும் ஆலந்துத் தீவில் உள்ளவர்களும் இவ்வகையில் பார்க்கும்போது ஆதிக்கம் வாய்ந்தவர்களாகக் காணப்படுவதனால் இவ்விளக்கங்கள் பொருந்துவனவாக வில்லை.[4]

எனவே, சிறுபான்மையர் என்பதற்குட் அந்தோனி இ.அல்கான் மற்றும் பி.டி.டைலர் ஆகியோர் கூறியுள்ள இலக்கணம் மிகவும் பொருத்தமானதாக உள்ளது.

சிறுபான்மையர் என்பதற்குப் பண்பாட்டுச் சிறுபான்மையர் என்று பொருள் கொள்ளப்படல் வேண்டும். (A.E.Alcock, 1979). அவர்கள் பல குடும்பங்களின் கூட்டு மொத்தம். வேறு ஒரு நாட்டில் உள்ள அரசியல் அமைப்பில் உள்ள பெரிய சமூகத்தில் தாங்களோ தங்கள் மூதாதையர்களோ அங்கம் வகித்துத் தங்களுக்கே உரித்தான பண்பாட்டை வளர்த்தவர்களாகக் காணப் படுவர். போரின் காரணமாகவோ குடியேற்றத்தின் காரண மாகவோ அந்த நாட்டில் பன்மொழி பேசும் அமைப்பில் அங்கம்

வகிப்பவராகவும் இருப்பர். இச்சமூக அமைப்பில் இவர்கள் எண்ணிக்கைப்பலம் குறைந்தவராக இருந்தபோதிலும் தங்களுக்கே உரித்தான பண்பாட்டைப் பேணிக் காக்கவே நாட்டம் கொண்ட வராகக் காணப்படுவர்.

தமிழர்க்குப் பொருந்துமா?

இவ்விலக்கணம் கேரளத் தமிழர்களுக்கு மிகவும் பொருத்தமானதாக உள்ளது. கேரளத் தமிழர்களைச் சிறு பான்மையர் என்று அழைப்பது இவ்விலக்கணத்தின்படி பொருத்தமானதாகும்.

தமிழர்கள் மலையாளத்தில் குடியேறியவர்களாகவும் தாய்த் தமிழகத்தில் நிலவும் பண்பாட்டைத் தாங்களும் பின்பற்றிக் கேரளத்திலும் பேணிக் காக்கவேண்டும் என்றும் கருதுவதனால் கேரளத் தமிழர்களை அங்குள்ள சிறுபான்மையர் என்று அழைப்பது முற்றிலும் பொருத்தமானதாகும். கேரளத் தமிழர் களுள் ஒரு பகுதியினர்க்குத் தங்கள் பண்பாட்டைப் பேணி வளர்க்க வேண்டும் என்பது குறித்து எண்ணமில்லாமலிருக்க லாம்; அல்லது அவர்கள் தங்கள் பண்பாட்டை மறந்தவர் களாகவும் காணப்படக்கூடும் என்பதையும் நினைவிற்கொள்ளல் வேண்டும்.

கேரளத் தமிழர்கள் எவ்வகையில் தங்கள் பண்பாட்டைப் பேணி வளர்த்துக் கொள்ளக் கேரளத்தில் வாய்ப்புள்ளது என்று ஆராய்வது நமது ஆராய்ச்சிக்குப் பொருத்தமானதாவே உள்ள தெனக் கொள்ளலாம்.

இதற்கு விடை காண வேண்டுமெனில் கேரளத் தமிழர் சமூகத்தையும் பண்பாட்டையும் ஆராய்தல் வேண்டும். அவ்வாறு ஆராயும்போது பல்வேறு பண்பாட்டுத் தன்மைகளை நாம் உணர்ந்து கொள்ளலாம். இவ்வாறு ஆயும்போது கீழ்க் குறிப்பிடும் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு கேரளத் தமிழர் சமுதாயத்தை உற்றுநோக்கல் வேண்டும்.

1. தற்போது கேரளத்தில் வாழும் தமிழர்கள் எவ்வகையில் பிற பண்பாட்டுடன் இணைந்து வாழ்கின்றனர்—தங்கள் பாரம் பரியத் தன்மைகளில் எவற்றைப் பேணி வளர்க்க வேண்டும் என்று விழைகின்றனர்?

2. எத்தகைய சக்திகள் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவனவாக உள்ளன?—அரசியல் பொருளாதாரச் சட்டம்,

சமயம், கல்வி, பொதுத்தொடர்புச்சாதனம், குடும்பம் ஆகியவற்றில் ஒன்றிற்கொன்று வலு எவ்வாறு உள்ளது.

3. தமிழர்களுக்கு ஏற்படும் மாற்றங்கள்——மேற் குறிப்பிட்ட சக்திகள் எவ்வகையில் மாற்றங்களைக் கொண்டு வருகின்றன? பாரம்பரியமான தன்மைகளில் எவை பேணப்படுகின்றன?

4. பண்பாட்டைப் பேணுவதற்குத் தமிழர்கள் எவ்வித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்? இளைய தலை முறையினர்க்குத் தமிழர் பண்பாடு குறித்து அறிவுள்ளதா? அறிவில்லையெனில் பண்பாட்டு முறைகளை அவர்களுக்கு அறிவுறுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் எவை?

அடிக்குறிப்புகள்

1. Sir Edward Tylor, *Primitive Culture*, London, 1871, V.I. P.1
2. B.Malinowshi, *A Scientific Theory of Culture*, Chapel Hill, London, 1944. P.36.
3. L.Wirth, *The Problems of Minority Groups*, New York, 1945, P.48.
4. Antony E.Alcock and others, *The Future of Cultural Minorities*, Macmillan Press, London, 1979, P.23.

இயல் 4

4. பண்பாட்டு மாற்றம்

பண்பாட்டுத் தன்மயமாகுதல்

ஒரு நாட்டில் குடியேறியவர்கள் தங்களின் புதிய சூழலுக்கு இயைந்து அதனைப் பின்பற்றுவதைப் பண்பாட்டுத் தன் மயமாகுதல் என்று கூறுகின்றோம். முழுப் பண்பாட்டுத் தன்மயமாகுதல் இரண்டு நிலையில் ஏற்படும். ஒரு நாட்டில் குடியேறியுள்ளவர்கள் தங்கள் சொந்தப் பண்பாட்டுத் தன்மைகள் அனைத்தையும் கைவிட்டுப் புதிய சமுதாயத்தின் தன்மைகளைப் பின்பற்றும்போது பண்பாட்டுத் தன்மயமாகுதல் ஏற்படும். குடியேறிய நாட்டில் உள்ளவர்களின் சமுதாயத்துடன் குடியேறியவர்கள் சமூகத் தொடர்பு முறைகளை எல்லா வகையிலும் ஏற்படுத்திக் கொள்ளும்போதும் வேறொரு நிலையில் அவர்கள் பண்பாட்டுத் தன்மயமாகுதலுக்கு ஆளாவார்கள். பண்பாட்டுத் தன்மயமாகுதல் சிக்கலானது. இது தவிர்க்க முடியாதது என்றும் கூற முடியாது.

மில்டன் கார்டன் பண்பாட்டுத் தன்மயமாகுதல் என்பதானது சமூக அமைப்பு முறையிலும் பண்பாட்டு முறையிலும் இரு வகையில் ஏற்படும் என்று கூறுகின்றார்.

குடியேறியுள்ள நாட்டுச் சமுதாயத்தின் மதிப்பீடுகளையும், நடத்தை முறைகளையும் பின்பற்றுவதன் மூலமாகப் பண்பாட்டுத் தன்மயமாகுதல் ஏற்படும். வாழும் நாட்டில் சமுதாய உறுப்பினர்களுடன் உறவுமுறை மற்றும் நட்புப் பாராட்டுவது போன்ற முதனிலை உறவு கொள்ளும் போதும் இந்தப் பண்பாட்டுக் கலப்பு ஏற்படும்.

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள பண்பாட்டுத் தன் மயமாகுதல் பண்பாட்டு மூலம் ஏற்பட்டுள்ள மாற்றம் என்றும், அமைப்பு முறையில் ஏற்பட்ட கலப்பு அல்லவென்றும் கார்டன் கூறுகின்றார்.[1]

தன்மயமாகுதலில் சிக்கல்

பண்பாட்டுத் தன்மயமாகுதல் என்பது ஒரு சிக்கல் வாய்ந்த முறைமையாகும். கேரளத்தில் குடியேறியுள்ள தமிழர்கள் மலையாளப் பண்பாட்டுக் கலப்புக்கு ஆளாகியுள்ளனர் என்று கூறும்போது எந்த மலையாளப் பண்பாட்டுக்கு என்று கேள்வி எழுகின்றது. கேரளப் பண்பாட்டு முறை ஒருங்கிணைந்து தெளிவாகப் புலப்படும் வகையில் உள்ளது என்றும் கூற முடியாது. கேரளப் பண்பாட்டிற்குள்ளாகவே பலவகையிலான வேறுபாடுகளும் தொகுப்பு முறைகளும் உள்ளன.

கேரளப் பண்பாட்டிற்குள்ளாகப் பல்வேறு வட்டார, சாதி, சமய வேறுபாடுகள் நிலவுகின்றன. கேரள மக்களிடையே அடிப்படையிலேயே ஒரு சில ஒருமித்த தன்மைகள் நிலவிய போதிலும் அவர்களிடையே பல வேறுபாடுகளும் உள்ளன.

பல சாதியினர் பல்வேறு தன்மைகளுக்கு வித்தியாசமான முறையில் முக்கியத்துவம் அளிக்கின்றனர். இவை சமூக வாழ்க்கை ஊடாட்டத்தில் பல்வேறு தன்மைகளை வெளிப் படுத்துவனவாக உள்ளன. கல்வி, வேலை, தொழில், அரசியல் போன்ற துறைகள் தொடர்பானவையாகவும் இவை உள்ளன. சாதி அமைப்புகள் என்ற பெயரில் பல சங்கங்கள் (யோகம்) கேரளத்தில் வலிமை வாய்ந்தவையாக உள்ளன. இவற்றிற்கே உரித்தான அரசியல் கட்சிகளும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. நாயர்களுக்கான தேசீய ஜனநாயகக் கட்சி, கிறித்தவர்களுக்கான கேரள காங்கிரஸ் (மாணிக்குழு), முசுலீம்களுக்கான முசுலீம் லீக், ஈழவர்களுக்கான சோசலிசக் குடியரசுக் கட்சி போன்றவை நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

இத்தகைய சாதி அமைப்புக்கள் தங்களுக்கே உரித்தான சாதிப் பண்பாட்டைப் பெருமைப்படுத்தும்போது கேரளப் பண் பாடு ஒருமித்த தன்மை கொண்டதாக இல்லாமல் வேற்றுமையை வெளிப்படுத்துவனவாக உள்ளன என்று கூறலாம்.

தமிழர்கள் மலையாளப் பண்பாட்டு முறைகளைப் பின் பற்றுகின்றனர் என்று கூறும்போது அவர்கள் எந்த மலையாளப் பண்பாட்டுத் தன்மைகளைப் பின்பற்றுகின்றனர் என்று கூறுவது?

கேரளத் தமிழர்கள் இத்தகைய வேறுபாடுகளை நுணுக்க மாகப் புரிந்து வைத்துள்ளார்கள் என்று கூறமுடியாது. கள ஆய்வின்போது பல தகவலாளர்கள் மலையாளப் பண்பாடு என்பது ஒருங்கிணைந்த ஒன்று என்ற எண்ணத்தில்தான் பதிலளித்தனர்.

அமைப்பு முறைத் தொடர்பு

தமிழர்களும் மலையாளிகளும் ஒரே இடத்தில் வாழ்ந்து வந்தபோதிலும் எல்லாப் பிரிவினர்களிடையேயும் ஒரே மாதிரி நெருங்கிய பண்பாட்டு முறைத் தொடர்பு ஏற்படவில்லை. ஆனால், பலவகையிலும் சமூக ஊடாட்டம் நிகழ்ந்து வருகின்றது. இதிலும் தமிழர்களும் மலையாளிகளும் தாங்கள் வேறுபட்ட பிரிவினர் என்ற எண்ணம் கொண்டுதான் தொடர்பு கொண்டு வருகின்றனர்.

தமிழர்கள் அனைவரையும் பொதுவாகச் செட்டியார்கள் என்றுதான் மலையாளிகள் அழைத்து வருகின்றனர். வாணிபம் செய்யும் தமிழர்களைத்தான் அவர்கள் இவ்வாறு அழைக்கின்றார்கள் என்றில்லை; எல்லாத் தமிழர்களையும் செட்டியார்கள் என்றுதான் குறிப்பிடுகின்றனர். மலேசியாவில் மலாக்காப் பகுதியில் உள்ள தமிழர்களனைவரையும் மலேசிய மக்கள் செட்டி என்று அழைப்பதையே இது நினைவுபடுத்துகின்றது.

கேரளத்தில் மலபார் பகுதியிலும் இதுவே நிலை. தமிழர்களுள் எல்லாச் சாதியினரையும் செட்டியார் என்றே மலையாளிகள் அழைக்கின்றனர். இதனைப் போன்றே தமிழர்களை அண்ணாச்சி என்றும் அழைப்பதுண்டு.

தமிழர்கள் செய்வது ஏதேனும் மலையாளிகளுக்குப் பிடிக்கவில்லையெனில் 'அண்ணாச்சி அப்படித்தான் செய்வார்' என்று இளக்காரமாக மலையாளிகள் கூறுகின்றனர். கள ஆய்வில் பல தகவலாளர்கள், 'அண்ணாச்சி' என்ற சொல் கேலியான பொருளில்தான் மலையாளிகளால் பயன்படுத்தப்படுகின்றது என்று தெரிவித்தனர்.

மலையாளிகளுக்குத் தமிழர்கள் குறித்து இத்தகைய ஒரு வடிவார்ப்பான[2] எண்ணமே நிலவுகின்றது.

தொடர்பு முறைகள்

பொதுவாகத் தமிழர்கள் மலையாளிகளுக்கிடையே பலவகையிலும் தொடர்பு ஏற்பட்டுள்ளது. பல தொடர்பு முறைகள் வாணிபத்தினைப் போன்ற தொடர்பு உடையது — உடைமையாளர் — வேலைபார்ப்பவர், விற்பவர் — வாங்குபவர் போன்ற தொடர்பு நிலவுகின்றது.

கல்வியில் வேலைப் பங்கீட்டுமுறைத் தொடர்பு, அதிகாரப்

பங்கீட்டு முறைத்தொடர்பு, சமயத்தொடர்பு முதலானவையும் தமிழர் மலையாளிகளிடம் காணப்படுகின்றன.

இத்தகு தொடர்பை ஒருமுனைத் தொடர்பு, பலமுனைத் தொடர்பு என்று இருவகைப் படுத்தலாம். அலுவலகத்தில் வேலை பார்க்கும் மலையாளிகளுக்கும் தமிழர்க்கும் நிலவும் அதிகார முறையிலான தொடர்பு ஒருமுனைத் தொடர்பு என்று கூறலாம். ஆனால், இத்தொடர்பு சமூக நடத்தையில் பல சந்தர்ப்பங்களிலும் பலதரங்களிலும் பரவும் என்றால் இவற்றைப் பலமுனைத் தொடர்பு என்று கூறலாம்.

பண்பாட்டு ஒலிக் குறியீடுகள்

மலையாளிகளுடன் தமிழர்கள் தொடர்பு கொள்ளும் போது பலவகையிலும் தாங்கள் மலையாளிகளுடன் ஒற்றுமை கொண்டவர்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்கின்றனர். மலையாளிகளைப் போன்று உடை, உணவு, சமயச் சடங்குகள் முதலியவற்றைத் தமிழர்கள் பின்பற்றுகின்றனர்.

நெற்றியில் திருநீற்றுக்குறியை மலையாள முறையில் போட்டுக் கொள்கின்றனர். முடியலங்காரம் மொழி ஆகியவற்றிலும் தமிழர்கள் மலையாளப் பண்பாட்டு முறைகளைப் பின்பற்று கின்றனர்.

இத்தகைய முறைகளைப் பார்த் என்பார் 'பண்பாட்டு ஒலிக்குறியீடுகள்'[3] என்று குறிப்பிடுகின்றார்.

தமிழர்களும் மலையாளிகளும் சந்தித்துக் கொள்ளும்போது இத்தகைய அடையாளங்கள் தங்கள் வேறுபாடுகளைக் களைந்து கொண்டு ஊடாடுவதற்கு வழி செய்கிறது. இந்த அடையாளங்களின் அறிமுகத்தின் காரணமாகத் தொடர்பு ஏற்படவும் அது ஒருமுனைத் தொடர்பாக உருவாகிப் பலமுனைத் தொடர்பாகப் பரவவும் வழி ஏற்படுகின்றது.

இத்தொடர்பு ஓர் எல்லைக்கு அப்பால் சென்றுவிடாமல் நின்றுவிடுமெனில் அதனைப் 'பண்பாட்டு எல்லை காத்தல்' என்று அழைக்க வேண்டும்.

தமிழர் பண்பாடு

மலையாளிகள் பண்பாட்டினைப் போன்று தமிழர் பண்பாடும் சாதி வட்டார அடிப்படையில் வேறுபாடு கொண்டு

விளங்குவதைக் காணலாம். மொத்தமான தமிழர் பண் பாட்டிலிருந்து இத்தகைய சாதிப் பண்பாடுகள் ஓரளவுக்கு வேற்றுமை கொண்டும் காணப்படும். எல்லாப் பண்பாட்டு அமைப்புகளிலும் இத்தகைய வேறுபாடுகள் காணப்படும். இதைக் 'குரோபர்' எனும் மானிடவியலாளர் அரைகுறைப் பண்பாடு அல்லது முழுமையற்ற பண்பாடு என்று கூறுகின்றார். மொத்தச் சமூகப் பண்பாட்டிற்கும் சாதிப் பண்பாட்டிற்கும் வேறுபாடுகள் உள்ளன என்றும் அவர்[4] உறுதிப்படுத்துகின்றார்.

கேரளத்தில் வாழும் தமிழர்கள் சாதிவேலிகளைப் போட்டுக் கொண்டுதான் வாழ்கின்றனர். தமிழர்கள் என்று பொதுவான நிலையில் ஒருங்கிணைந்து காணப்படுகின்றனர். இது வியப்புக்குரியதன்று. தமிழர்கள் எங்குச் சென்றாலும் தங்கள் சாதிமுறைகளையே பின்பற்றுகின்றனர். வேற்று நாடுகளுக்குக் குடியேறும் தமிழர்கள் குறித்துச் சென்னை மக்கள் கணக்கெடுப்பு அறிக்கை (1931) கூறுவது இப்போதும் எல்லாத் தமிழர்களுக்கும் பொருந்தும். 'அவன் (தமிழ்த் தொழிலாளி) தன் சொந்த உலகத்தைத்தான் எங்குச் சென்றாலும் எடுத்துச் சென்று தன் புதிய சூழ்நிலையில் மீண்டும் ஏற்படுத்திக் கொள்கின்றான்' என்று அதில் கூறப்பட்டுள்ளது.

கேரளத் தமிழர்களும் சாதி வேறுபாடுகள் கொண்டவர் களாகவே உள்ளனர். ஒவ்வொரு சாதியினருக்கும் தனித்தனியான கோயில்கள் உள்ளன. எல்லாச் சாதியினர்க்கும் இவ்வாறு கோயில்கள் உள்ளன என்று கூறமுடியாது. சாதி அடிப்படையில் கேரளத்தில் சில தமிழர்களுக்குக் கோயில்கள் உள்ளன என்று கூறலாம். யாதவர்களுக்கு உரிமையான மாரியாத்தா கோயில் களும், வெள்ளாளர்களுக்குரிய முத்தாரம்மன் கோயில்களும் திருவனந்தபுரத்தில் உள்ளன. ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் கோயில் திருவிழாவில் யாதவர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று வயது முதிர்ந்த தகவலாளர் ஒருவர் கூறினார். இதன்மூலம் அவர்கள் தங்கள் சாதிப் பற்றையும் சமய நம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்றனர்.

தமிழர் ஒற்றுமை

தமிழர் மலையாளிகள் என்ற நிலை உருவாகும்போது தமிழர்கள் அனைவரும் சாதி வேறுபாடுகளை மறந்துவிட்டுத் தமிழர்கள் என்ற எண்ணம் கொண்டு ஒற்றுமையாகிவிடுகின்றனர். மலையாளிகள் மத்தியில் தமிழர்கள் வாழும்போது இந்த உணர்வும் நிலைமையும் ஏற்படுவது இயல்பே. இம்மாதிரி சமயத்தில்

தமிழர்கள் மலையாளிகளிடமிருந்து இனம், மொழி, பண்பாடு ஆகியவற்றில் வேற்றுமை கொண்டவர்கள் என்றும் நினைவு கொள்கின்றனர். இருபிரிவினர்களிடையே எவ்வளவு தான் சமூக ஊடாட்டம் நடைபெற்றாலும்கூட இத்தகைய எண்ணம் தவிர்க்க முடியாததாகும்.

தமிழர் எண்ணிக்கை

பொதுவாக இனக்குழுக்கள் தங்கள் உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமெனில் மக்கட்பெருக்கத் தின்மூலம் உடற்கூற்றியல்படித்தான் முடியும். இதனைப் போன்றே எண்ணிக்கை குறைய வேண்டுமெனில் இனக்குழு உறுப்பினர்களுக்கு மரணம் ஏற்பட்டால்தான் முடியும். ஆனால், வேறு ஒருமுறையில் ஓர் இனக்குழுவின் எண்ணிக்கை பெருகலாம்; அதே நேரத்தில் வேறோர் இனக்குழுவின் எண்ணிக்கை குறையும். ஓர் இனக்குழுவினர் வேறோர் இனக்குழுப் பண்பாட்டைப் பின்பற்றித் தங்கள் பழைய பண்பாடுகளைக் களைந்து விடும்போது இந்நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

கேரள மாநிலத்தில் தமிழர்கள் சிலர் தங்கள் பண்பாட்டைத் துறந்து மலையாளப் பண்பாட்டிற்குத் தாவிவிட்டனர். மக்கள் கணக்கெடுப்பில்கூட மலையாளம்தான் தாய்மொழி என்று கூறுகின்றனர்.[5] இத்தகைய நிலை தமிழர்களை மலையாளிகளாக்கும் சதி என்று கூடத் தமிழர்கள் ஐயுறுகின்றனர்.

இது குறித்து வாதித்தபோது கேரள மாநில மக்கள் தொகைத் துணை இயக்குநர்[6] வேறு ஒரு நிலையில் இதனை உண்மை என்று ஏற்றுக் கொண்டார்.

மக்கள்தொகைக் கணக்கெடுப்பாளர்கள் வீடுவீடாக வந்து தகவல் சேகரிக்க வரும்போது தாய்மொழி எதுவென்றும் மக்கள் தொகை அட்டவணையில் உள்ள ஒரு கேள்வியைக் கேட்க வேண்டும். வீட்டிலுள்ளோர்கள் மலையாளத்தில் பேசிக் கொண்டிருப்பதனாலும், மலையாளத்தில் பதில் சொல்வத னாலும் கணக்கெடுப்பவர் தாய்மொழி எனக் குறிப்பிடும்போது மலையாளம் என்று எழுதிவிட்டுப் போய்விடுகின்றார். இவ் வகையில் பலதமிழர்களும் மலையாளிகள் ஆகிவிட்டனர். இதில் உண்மையில்லாமலில்லை.

களஆய்வில் இம்மாதிரி தமிழர்கள் பலரையும் சந்திக்க நேரிட்டது. தமிழர் குடும்பத்தில் சகோதரர்கள் தம்முள் பேசும்

போது கூட மலையாளத்தில்தான் பேசுகின்றனர். தாய்மொழியை அவர்கள் மறந்துவிட்டனர் போலும்!

இம்முறையில் தமிழர்களுள் ஒரு சாதிப்பிரிவினர் சிறிது நாளில் கேரளத்திலிந்தே மறைந்து மலையாளிகள் ஆகிவிடுவர். இதனை முழுத் தன்மயமாகுதல் என்று கூறுகின்றோம். இந்த மாதிரி நிலை தமிழர்களுக்கு ஒன்றும் புதிதன்று. முன்பே இதுமாதிரி நிலையில் தமிழர்கள் மலையாளிகளாகியுள்ளனர்.

கோயம்புத்தூரிலிருந்து கேரளத்திற்கு வந்த செட்டியார்களும் நாயர் பழக்கவழக்கங்களைப் பின்பற்றி நாயர்களாக மாறியுள்ளனர். தரகன் எனும் சாதியினர்க்கும் இதுவே நிலை. சித்தூர் தாலுகாவில் இம்மாதிரி தமிழ்ச் சாதியினர் பலர் பண்பாட்டுத் தன்மயமாகுதல் மூலம் நாயர்களாக மாறியுள்ளனர்.[7]

சமூகமயமாகுதல் மூலம் தமிழர்களுள் சில பிரிவினர் மலையாளிகளாகி வருவதன் காரணம் என்ன? இதற்கான ஊக்கிகள் எவை? மலையாளப் பண்பாடு தமிழர் பண்பாட்டை விடவும் உயர்ந்தது என்பதனால் மலையாளமாகுதல்[8] என்பதற்கு இவர்கள் ஆளாகியுள்ளனரா?

மலையாளமயமாகுதலுக்கு ஆளாகியிருக்கும் பல தமிழ்க் குடும்ப உறுப்பினர்களிடம் இது குறித்துக் கேட்டபோது அவர்கள் பண்பாடு என்பது குறித்தே கவலைப்படவில்லை என்பது தெரியவருகின்றது. தங்களுக்கு இது வசதியாகவும் மதிப்பு வாய்ந்ததாகவுமாக இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொண்டனர். இதிலிருந்து தாங்களே உணர்ந்து மலையாளப் பண்பாடுகளை அவர்கள் பின்பற்றவில்லையென்றும் சமூக ஊடாட்டத்தில் இந்த மாற்றம் ஏற்பட்டுவிடுகின்றது என்ற முடிவுக்கும் நாம் வரலாம்.

திருவனந்தபுரம், கொல்லம் நகர்களில் வாழும் வாணியச் செட்டியார்கள் இவ்வகையில் முழு மலையாளமாகுதலுக்கு ஆளாகிவிட்டனர். புதிய தலைமுறையினர்க்குத் தமிழ் தெரியவில்லை. தமிழில் படிக்க வேண்டும் என்றும் அவர்கள் விரும்பவில்லை. திருவனந்தபுரத்தில் வாழும் வெள்ளாளர் களுள்ளும் சிலர் இவ்வகையில் உள்ளனர். தமிழில் தங்களுக்குள்ளும் பேசிக் கொள்வதில்லை. மலையாள மொழியில்தான் கல்வி கற்கின்றனர்.

அடிக்குறிப்புகள்

1. M.M.Gorden, *Assimilation in American Life*, Newyork, 1964, p.36.
2. Stereotype
3. F.Barth (Ed) *Ethnic groups and Boundaries*, London, 1969, p.118.
4. Kroeber, *Anthropology*, Oxford & IBH Publishing Co., New Delhi, 1967, p.28.
5. கேரளத் தமிழ், மூன்றாவது ஆண்டு மலர், திருவனந்தபுரம், 1981.
6. திரு டி.டி.பிள்ளை, மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் துணை இயக்குநர், திருவனந்தபுரம்.
7. L.K.Anantha Rama Krishna Iyer, *The Cochin Tribes and Castes*, Cosmo Publishers, New Delhi, 1982, p.18.
8. டாக்டர் எம்.என்.சீனிவாசின் 'சமஸ்கிருதமாகுதல்' என்னும் தத்துவத்தைப் பின்பற்றி இச்சொல் பயன்படுத்தப்படுகின்றது.

இயல் 5

5. சிறுபான்மையர் கல்வி

சிறுபான்மையர் சிக்கல்

சிறுபான்மையர் தாங்கள் வாழும் நாட்டில் பெரும் பான்மையரின் சமூக பண்பாட்டுப் பொருளாதார முறைகளை ஏற்றுக் கொண்டவர்களாகக் காட்டிக் கொள்ள வேண்டும். சில நாடுகளில் பெரும்பான்மையர் சிறுபான்மையரைச் சரிசமமாக நடத்துவதில்லை; சிலநாடுகளில் மனிதர்களாகக்கூடக் கருதுவதில்லை.

இம்மாதிரிச் சூழலில் பன்மொழி பேசி, பல இன மக்கள் வாழும் நாடுகளில் ஓர் இனம் தனது மொழியைப் பேணுவதுதான் பண்பாட்டைக் காப்பாற்ற சிறந்த வழியாகும். சிறுபான்மையர் இதே நேரத்தில் பெரும்பான்மையர் வாழும் வழிகளைப் பின் பற்றித் தன்மயமாகும் முறைக்கு ஆளாகும் அபாயமும் இருக் கிறது.

சிறுபான்மையரின் பொருளாதார அமைப்புகள் நசிந்து சமூக முறைமைகள் சிதறுண்டு கைத்தொழில், கலைப் பண்பாடுகள் அழிந்து வரும் வேளையில் மொழி மட்டுமே அச் சமூகத்தின் பண்பாட்டுச் சாளரமாக விளங்கும். மொழி மட்டுமே ஒரே ஓர் அடையாளச் சின்னமாகக் காணப்படும். இதன் காரணமாகத்தான் சிறுபான்மையர் எல்லா நாடுகளிலும் கல்வி, அலுவல் மற்றும் பொதுத் தொடர்பில் தங்கள் மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்று கோரிக்கை எழுப்புகின்றனர். தமிழ்நாட்டில் வாழும் ஆந்திரர்கள்கூட தங்கள் தெலுங்கு மொழியில் தமிழ்நாட்டில் கல்வி போதிக்க வேண்டும் என்று கோரிக்கை எழுப்புகின்றனர்.[1]

கேரளத்தில் தமிழர்களுக்குத் தமிழ் மூலம் கற்பதற்கு வசதியுள்ளது. உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வு வரை தமிழ் மூலம் கற்க முடியும். அரசு அலுவல் மலையாளத்தில் நடை பெறுகின்றது. தமிழ் மூலம் கற்பவர்கள் அரசு வேலை

வாய்ப்புகளில் இடம் பிடிப்பது இயலாது. வானொலியிலும் தமிழுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 முதல் 10 மணி வரை 'தமிழ்ச் சொல் மாலை' என்ற நிகழ்ச்சி மட்டுமே ஒலிபரப்பப்படுகின்றது. சென்னை வானொலி நிலையம் தமிழகத்தின் சிறுபான்மையரான தெலுங்கர்களுக்காகச் சென்னை—2 வானொலியில் நிகழ்ச்சிகள் நடத்தி வருகின்றது.

கல்வியில் மொழியின் பங்கு

கல்விக்குப் பயன்படுத்தும் மொழியின் காரணமாகச் சிலர் கற்க மனமில்லாமல் கல்வியை நிறுத்திவிடக் கூடும். இன்னும் சிலர் மொழி காரணமாகத் தரம் குறைந்த கல்வியைப் பெறுவதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டுவிடவும் ஏதுவாகும். எனவே சிறுபான்மையர்க்கு அளிக்கப்படும் கல்வி இத்தகைய சாிசமமற்ற தன்மையை உருவாக்கிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

சிறுபான்மையர்க்குத் தாய்மொழி மூலம் கற்க வசதியில்லையெனில் குழந்தைகள் மனத்தில் தாழ்வு மனப்பான்மை விதைக்கப்பட்டுவிடும். தங்களது பண்பாடு தாழ்ந்தது என்ற எண்ணமும் பின்பு ஏற்பட்டுவிடும்.

நமது நாட்டில் 15 மொழிகள் அரசியல் அமைப்பில் எட்டாவது அட்டவணையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மொழிகளாக உள்ளன. ஆங்கிலமே கல்வியில் பெரும்பான்மையும் பயன்படுத்தப்படும் மொழியாக உள்ளது.

மொழிவாரி மாநிலம் திருத்தி அமைக்கப்பட்ட போதிலும் ஒரு மாநிலத்தில் மட்டும் ஒரு மொழி பேசுவோர் வாழ்வதில்லை. பல மாவட்டங்களிலும் சிதறுண்டு வாழ்கின்றனர். கன்னட மொழி பேசுவோர்களில் ஏழில் ஒரு பகுதியினர் கருநாடக மாநிலத்தின் வெளியே வாழ்கின்றார்கள். பம்பாய் நகரத்தில் மட்டும் இந்திமொழி பேசுவோர் 16 இலட்சம் பேர் வாழ்கின்றனர் (டி.பி.பட்நாயக், 1981).

இந்நிலை காரணமாக ஒரு மாநிலத்தில் பெரும்பான்மை மொழி பேசுவோர் வேறு ஒரு மாநிலத்தில் சிறுபான்மையர் என்ற நிலையில் காணப்படுவர். தமிழர்கள் இந்த நிலையில்தான் பல மாநிலங்களிலும் குறிப்பாகக் கேரளத்திலும் காணப்படுகின்றனர்.

வட்டார வேறுபாடுகள்

ஒரு மொழியில் வட்டார வேறுபாடுகள் காணப்படும்

இவ்வகையில் வட்டாரமொழி மொத்தமான மொழி அமைப்பில் சிறுபான்மை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விடும். (டி.பி.பட்நாயக் ப.69) ஒரு வட்டார மொழியை அதே மொழி பேசும் பிற வட்டாரத்தினர் புரிந்து கொள்வதும் கடினம். வட ஆர்க்காட்டில் பிறந்து வளர்ந்தவர் தமிழ் நாட்டில் வேறு பகுதியில் மொழியைப் பேசும் அடிப்படையில் சிறுபான்மை **யராகக்** கருதப்பட வாய்ப்பு ஏற்படுகின்றது. இது எல்லா மாவட்டத்தினர்க்கும் பொருந்தும்.

இந்த வட்டார மொழி வீட்டு மொழியாகவே பயன் படுத்தப்படுகின்றது. உரைநடையிலும் இலக்கியத்திலும் எல்லோரும் ஒரே மாதிரித் தமிழைத்தான் பயன்படுத்துகின்றனர். கேரளத்தில் வாழும் தமிழர்கள் பல்வேறு வட்டாரத்திலிருந்து சென்றவர்கள். பலவகை வட்டார மொழியைப் பயன்படுத்திய போதிலும் எழுதும்போது ஒரே விதமான தமிழைத்தான் பயன்படுத்துகின்றனர். மலையாளிகளும் இவர்களை மொத்த மாகப் 'பாண்டி' என்றே குறிப்பிடுகின்றனர். இது பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர் என்று பொருளாகும்.

மொழியும் குழந்தைக் கல்வியும்

தாய்மொழி மூலம் கல்வி பெறுவது ஒரு குழந்தையின் இளமைக் காலக் கல்வியில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. சிறுபான்மையர் குழுவில் உள்ள குழந்தைகள் வாழ்விலும் தாய்மொழிக் கல்வி மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது என்பதில் ஐயமில்லை.

தாய்மொழி மூலம் கல்வி என்னும் கோட்பாடு பல தவறான வழிகளில் புரிந்து கொள்ளப்பட்டு வருகின்றது. ஒரு குழந்தைக்குத் தாய்மொழியில் அதிகம் சொற்கள் தெரியும் என்பதனால் அக்குழந்தைக்குக் கல்வி போதிப்பது எளிது என்று பலர் கருதுகின்றனர். இது சரியான கருத்தன்று என்று டி.பி. பட்நாயக் கருதுகின்றார். ஒருவனுக்குத் தாய்மொழியில் அதிகம் சொற்கள் தெரியும் என்பதனால் அதில் பேசவோ எழுதவோ முடியாது என்றும் அவர் கருதுகின்றார். ஒருவன் அடுத்தவர்கள் பேசுவதன் மூலமும் அவர்கள் நடத்தை மூலமும் தாய்மொழியில் பலசொற்களை அறிந்து கொள்கின்றான். இதன்படி பார்த்தால் கேரளத்தில் தமிழ்க் குழந்தைகள் தமிழர்கள் தமிழ் பேசுவதனைக் கேட்பது மூலமும் அவர்கள் நடத்தையை நோக்குவதன் மூலமுமே தமிழ்ச் சொற்களைக் கற்றுக் கொள்ளமுடியும். நண்பர்கள்

குழுவில் குழந்தைகள் ஊடாட்டம் கொள்ளும்போதும் அவர்கள் மூலம் பல தமிழ்ச் சொற்களைக் கற்றுக் கொள்ள முடியும். கேரளத் தமிழ்க் குழந்தைகளுக்கு இத்தகைய வாய்ப்புகள் உள்ளனவா? அவர்கள் தமிழ் பேசுகின்றனரா?

கேரளத் தமிழர்கள் மலையாளத்தில் பேசும்போது தமிழ்க் குழந்தைகள் தமிழ்ச் சொற்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைப்பதில்லை. அவர்கள் நண்பர்களுள் தமிழ் பேசுவோர்களும் இருப்பர்; மலையாளம் பேசுவோரும் இருப்பர். எனவே அவர்கள் இரு மொழியையும் பயன்படுத்தவே விழைவர். தமிழர்கள் வாழும் பகுதியில் சுற்றுப் புறத்தில் வாழ்பவர்கள் அனைவரும் தமிழர்களாக இருப்பதில்லை. மலையாளிகள் மத்தியில்தான் தமிழர்கள் வாழ்கின்றனர். எனவே அண்டை அயலார், உறவினர் பேச்சு மூலம் தமிழ்ச் சொற்களை அதிகம் கற்றுக் கொள்வதற்குத் தமிழ்க் குழந்தைகளுக்கு வாய்ப்பு இல்லை என்றே கூறவேண்டும். பள்ளியிலும் இதுவே நிலை. மலையாளம் பேசும் குழந்தைகளுடனும் அவர்கள் பழக வேண்டியிருப்பதனால் அவர்கள் எந்த மொழிச் சொற்களை விரும்பி ஏற்றுக் கொள்கிறார்கள் என்பது அக்குழந்தைகளின் மனநிலையைப் பொறுத்த காரியம். மலையாளம் அவர்களுக்குக் கவர்ச்சியாகத் தோன்றுமெனில் அச்சொற்களை அறிந்து கொள்ளவே அவர்கள் விரும்புவர். தமிழ்க் குழந்தைகளுடன் ஊடாடும்போது தமிழ்ச் சொற்களை அறிந்து கொள்ளலாமெனினும் தமிழைப் புறக்கணிக்கவும் வாய்ப்பு உண்டு.

தற்போதுள்ள கல்வி முறையில் ஒரு குழந்தை அதிக நேரம் பள்ளியில் செலவிடுவதால் தாய்மொழியல்லாமல் மலையாளத்தையும் கற்றுக் கொள்கிறான். எனவே, தமிழ்க் குழந்தைகளுக்கு ஏற்படும் உணர்ச்சி பூர்வமான ஐக்கியம் தமிழோடுதான் ஏற்படவேண்டும் என்ற கட்டாயமில்லை. மலையாளத்துடனும் இம்மாதிரி உணர்வு ஏற்படும்.

கல்வியில் குழந்தைக்கால அனுபவ மொழியும் முக்கியமான காரணியாகும். தாயின் மடியில் தவழும்போது கற்கும் மொழி கேரளத் தமிழர்களுக்குத் தமிழாகவும் இருக்கலாம், மலையாளமாகவும் இருக்கலாம். தமிழர்கள் வீட்டுக்குள் தங்களுக்குள் பேசிக் கொள்ளும்போது தமிழைத்தான் பயன்படுத்துகின்றனர் என்று கூறமுடியாது. மலையாளிகளுடன் அவர்கள் உரையாடும் போது மலையாளத்தில் பேசுகின்றனர். பலர் தமிழர்களுடன் நெருங்கிய உறவினர்களான அண்ணன்

தம்பிகளுடன் பேசும்போதும் மலையாளத்தில் பேசுவதையும் நாம் காணலாம். இந்தச் சூழலில் வாழும் குழந்தைகளுக்குத் தமிழ் தான் தாய்மொழி என்று கூறித் தாய்மொழிக் கல்வி என்பது தமிழ் மூலம் கல்வி என்று முடிவு செய்வது தவறானதாகும்.

தமிழ்க் குழந்தைகளுக்குச் சிக்கல் ஏற்பட்டுள்ளதா?

கேரளத் தமிழர்கள் தமிழ் மூலம் படிக்காத காரணத்தினால் கல்வி பெறுவதில் தவறு விளைந்து விடும் என்று கூறுவதற்கில்லை. சிறுபான்மை மொழி பேசுவோரின் வீட்டு மொழியிலிருந்து பள்ளி மொழிக்குக் குழந்தையை மாற்றும்போது கல்விச் சிந்தனையாளர்கள் இதனைக் கருத்தில் கொண்டு கல்வியை அமைத்துக் கொடுத்தால் கல்வியில் குழறுபடி ஏதும் ஏற்பட்டு விடாது. கல்வி நிலையில் மொழியின் துணை என்று கணக்கிடும்போது மட்டுமே இது பொருந்தும். பண்பாட்டிற்கு மொழி செய்யும் துணையை நினைத்துப் பார்க்கும்போது இது பொருந்தாது. ஒரு மொழி பேசுவோரின் பண்பாடு சிதைவுறவோ மறைந்து விடவோ வாய்ப்பு உண்டு. கேரளத் தமிழர்களுக்கு இது மிகவும் பொருந்தும்.

ஒரு மொழியின் சொற்கள், பழமொழிகள், சொற்றொடர்கள் ஆகியவை மூலமும் இலக்கியப் படைப்புகள் மூலமும் கருத்துக்களை வெளிப்படுத்தும் முறையில் பண்பாட்டுத் தன்மைகளை அறிந்து கொள்கிறோம்.[3]

இம்மாதிரி அடிப்படைப் பொருள் அலகுகள் ஒவ்வொரு பண்பாட்டிற்கும் வேறுபட்டுக் காணப்படும். (Elementary Meaning Unit (E.M.U).

ஸ்பானிஷ் மொழியில் மனித உறுப்புகளுக்கும் விலங்கின் உறுப்புகளுக்கும் வேறுவேறான சொற்கள் உள்ளன. செருமன் மொழியில் மனிதர்கள் வாய்க்கும் விலங்குகளின் வாய்க்கும் வேறு வேறு சொற்கள் உள்ளன. (ராபர்ட் லாடோ ப.28). எஸ்கிமோக்களுக்குப் பனியைக் குறிக்க இருக்கும் பலவகைச் சொற்களும் பண்பாட்டு அடிப்படைப் பொருள் அலகுகளாகவே காணப்படுகின்றன.

சப்பான் மொழியில் ஆங்கிலச் சொல்லான Milk- ஐக் கடன் வாங்கிப் பயன்படுத்துகின்றனர். இச்சொல் டின்னில் அடைக்கப்பட்டு விற்கும் பால் என்ற பொருளில்தான் சப்பான் மொழியில் பயன்படுகிறது. ஆனால் பொதுவாகப் பால் என்றால் விலங்குகளிலிருந்து கிடைப்பது என்ற முறையில்

ஆங்கில மொழியிலும் வேறு மொழியிலும் பயன்படுத்தப் படுகின்றது.

ஒரு பண்பாட்டைப் பின்பற்றுகிறவர்கள் அவற்றைப் பொருள் அறிந்து செய்கின்றனர். அவற்றைப் பிறரும் அந்தப் பண்பாட்டு மொழியின் மூலமே அறிந்து வைத்திருக்கின்றனர். அந்த மொழி மூலம் அந்த நடத்தைக் கோலங்களை அறிந்து கொள்ள எளிதாக முடிகிறது. வேறொரு மொழியில் இப்பண்பாட்டை விளக்குவது கடினம். மொழியை நீக்கிவிட்டால் பண்பாடு சிதைவுறும்.

கேரளத் தமிழர்கள் வாழ்வில் தமிழ் இல்லையெனில் எவ்வகையில் தமிழ்ப் பண்பாடு தேங்கி நிற்கும்?

மொழியும் ஆளுமையும்

சிறுபான்மை மொழி பேசுவோர்க்கு வீட்டு மொழியும் கல்விமொழியும் வேறாக இருப்பதனால் சிக்கல் ஏற்படும். கல்வி மொழியாக இருக்கும் பெரும்பான்மையர் பேசும் மொழிக்கு ஏற்ற சம மதிப்பு சிறுபான்மையர் மொழிக்கும் அளிக்கப்படவேண்டும். இவ்வாறில்லாமல் இரண்டாந்தர நிலையில் இம்மொழி நடத்தப்படுமெனில் குழந்தையின் மனத்தில் தாழ்வு மனப் பான்மை ஏற்படும். கல்வி மொழி மாணவர்க்கு உயர்வு அல்லது தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. ஆங்கில மொழிமூலம் கற்றுக் கொள்ளும் மாணவர்க்கு உயர் மனப்பான்மை ஏற்படுவதை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

கேரளத்தில் தமிழ்க் குழந்தைகள் தமிழ் மூலம் கற்கும்போது தாழ்வு மனப்பான்மை கொள்வர் என்பதில் ஐயமில்லை.

கேரளத்தில் தமிழ் மூலம் கல்விபெறத் தமிழர்க்கு வாய்ப்பு உள்ளது. ஆனால் இப்போது எல்லோரும் தமிழ் மூலம் கற்பதில்லை. சிலர் மலையாளத்தின் மூலம் கற்கின்றனர். தங்கள் குழந்தைகள் பிறரைப் போன்று மலையாளம் பேச வேண்டும் என்று பெற்றோர்கள் விரும்புகின்றனர்.

கேரளத்தில் தமிழ் படிப்பவர்களுக்கு வேலை கிடைப்பது அரிது. மலையாளக் கல்விதான் வேலை கிடைப்பதற்கான வழி. வேலைக்காகத்தான் இப்போது எல்லோரும் கற்கின்றனர். எனவே, தமிழைப் புறக்கணித்து மலையாளக் கல்வி பெறுவது தான் எதிர் காலத்துக்கு உதவக் கூடியது.

தமிழ் மூலம் கல்வி அளிக்கும்போது குழந்தைகளுக்குத்

தனியாக ஆசிரியர்களைவைத்துவீட்டில் கல்விபோதிப்பது'சிரமமாக உள்ளது என்றும் ஒரு தகவலாளர் கூறினார். தமிழில் வீட்டில் சொல்லிக் கொடுப்பதற்கு ஆசிரியர்கள் கிடைப்ப தில்லை. இப்போது தனியாகக் கவனம் செலுத்திப் படித்தால்தான் பள்ளிகளில் அதிக மதிப்பு எண்கள் பெற முடிகிறது. தமிழ் மூலம் கற்கும்போது இந்த வாய்ப்பு போய் விடுகிறது.

தமிழ்க் கல்வி

கேரளத்தில் தமிழ்க் கல்விபெற வாய்ப்பு உள்ளது என்று கூறும்போது தமிழ் படிப்பதற்கு வாய்ப்புள்ளது என்றுதான் பொருள். தமிழ் எம்.ஏ., படிக்கவும், ஆராய்ச்சி மூலம் முனைவர் பட்டம் பெறவும் வாய்ப்புள்ளது.

தமிழ் மூலம் பட்டப் படிப்போ முதுகலைப் படிப்போ வேறு துறைகளில் கற்றுக் கொள்ளவோ முடியாது. உயர்நிலைப் பள்ளி வரையிலும்தான் தமிழ் மூலம் கற்க முடியும்; பின்பு வேண்டுமானால் தமிழைப் படிக்கலாம். தமிழ் மூலம் படிக்க முடியாது.

தமிழ்க் கல்வி என்பது கேரளத்தில் தமிழ் இலக்கியக் கல்வி என்ற மட்டிலும்தான் நடைபெறுவதால் மொழி நடை, பேச்சு மொழி ஆகியவை கற்கவில்லையெனில் உயர்கல்வியின் போது மாணவன் இடர்ப்படுவான்.[4] எனவே, கேரளத் தமிழ் மாணவர் தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் மூலம் உயர்கல்வி பெற விழைவார்களாயின் மிகவும் தொல்லைக்குள்ளாவார்கள் என்று கூறத் தேவையில்லை.

கேரளத்தில் வாழும் தமிழர்கள் தங்களுக்குள்ளாகத் தமிழைப் பேசிப் பேச்சு மொழியாக வலுப்படுத்திக் கொள்ள வில்லையெனில் மலையாளம் அவர்களின் பேச்சு மொழியாகவும் நிலைத்து விடும். நடைமுறை வழக்கில் இது நடக்கக் கூடிய தாகவும் தோன்றவில்லை. இப்போது மாநில மொழி ஆதிக்கம் அதிகரித்து வருவதனால் தமிழ் மற்றும் ஆங்கில அறிவு மட்டும் தமிழர்க்குத் துணை நிற்காது. மலையாள மொழியறிவு இல்லையெனில் கேரளத்தில் வாழ முடியாது. முந்தையத் தலைமுறையைச் சார்ந்தவர்கள் பலரும் இப்போதும் மலை யாளிகளுடனும் தமிழர்களுடனும் தமிழ் மூலமே தொடர்பு கொண்டு வருவதை நாம் காணலாம். மலையாள மொழியை அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் இயல்பாகவே பயன் படுத்துவதில்லை. ஆனால் இளைய தலைமுறையினர் நிலையோ இதற்கு மாறானது. அவர்களுக்கு மலையாளம்தான் தெரிகிறது.

தமிழ் எழுத வாசிக்க மட்டுமல்ல பேசுவதற்கும் தெரியாது. இந் நிலை நீடிக்குமெனில் மலையாள மொழியைத் தமிழர்கள் கற்று அவர்களுடன் தன்மயமாகுதல் முறையின்படி மாறிவிடுவார்கள் எனில் சிறுபான்மையர் என்ற நிலை மாறி பெரும்பான்மையருடன் அங்கமாகிவிடுவர் என்று கூறவும் வேண்டுமோ?

தமிழ்க் கல்வி வாய்ப்புகள்

கேரளத்தில் பல பள்ளிகளில் தமிழில் பாடம் கற்பதற்கு வசதியுள்ளது. பள்ளி இறுதித் தேர்வு வரையிலும் கற்கலாம். இது தவிரவும் தமிழை இரண்டாவது மொழியாகக் கற்பதற்கும் வசதியுள்ளது.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் பேசிய கேரள மாநிலத்தின் அப்போதைய முதல்வர் திரு இ.கே.நாயனார் தமது உரையில் தமிழ்க் கல்வி குறித்து குறிப்பிட்டிருப்பதாவது.[5]

'கேரளம் தமிழ் மொழி வளர்ச்சிக்கான அனைத்தையும் செய்து வருகின்றது. கேரளத்தில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட பள்ளிகளும் தமிழை இரண்டாவது மொழியாகப் பயிற்றுவிக்கும் பள்ளிகளும் உள்ளன. தமிழ் கேரளத்தில் பல கல்லூரிகளில் இளங்கலைச் சிறப்புப் பாடமாக அமைந்துள்ளது. கேரளப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பிரிவு தமிழ் மொழியில் முதுநிலைக் கல்வி மற்றும் மேல்நிலை ஆராய்ச்சிக்கான தனிப் பிரிவை ஏற்படுத்தி வளர்ச்சி பெற்றுள்ளது. கேரளப் பல்கலைக் கழகத்தின் 150 முதுநிலைப் பட்டதாரிகளும் டாக்டர் பட்டம் பெற்ற 25 தமிழறிஞர்களும் உலகில் பல பகுதிகளில் உயர் பதவிகளை வகித்து, தமிழ்மொழி வளர்ச்சிக்கு அருந் தொண்டாற்றி வருகிறார்கள். கேரளத்தின் பிற பல்கலைக் கழகங்களும் தமிழ் மொழி வளர்ச்சிக்குச் சிறந்த ஊக்கமளிக் கின்றன'.

இது முற்றிலும் உண்மையான நிலையாகும் என்று சொல்ல வேண்டுமா?

உயர்நிலைப் பள்ளிகள்

கேரளத்தில் ஐந்து தாலுகாக்களில் 26 பள்ளிகள் மூலம் 971 தமிழ் மாணவர்கள் 1981—ஆம் ஆண்டில் தேர்வு எழுதினர். இவர்களில் 386 மாணவர்கள் வெற்றி பெற்றனர். அவர்களில் 31 மாணவர்கள் முதல் தகுதி பெற்றுள்ளனர்.[6]

பள்ளிகள் விவரம்

திருவனந்தபுரம்

1. மாதிரி எச்.எஸ்.திருவனந்தபுரம்
2. தமிழ் உயர்நிலைப்பள்ளி, சாலை
3. மைய உயர்நிலைப்பள்ளி, திருவனந்தபுரம்
4. அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பார்டன் ஹில்
5. அரசு உயர்நிலைப்பள்ளி, கரமனை.

பாலக்காடு

1. பாலக்காடு அரசு பி.எச்.எஸ், சிற்றூர்
2. அரசு விக்டோரியா ஜி.எச்.எஸ், சிற்றூர்
3. அரசு உயர்நிலைப்பள்ளி, காஞ்சிகோடு
4. அரசு உயர்நிலைப்பள்ளி, முத்தலமாடா
5. செயின்ட் பால்ஸ் உயர்நிலைப்பள்ளி, கொழிஞ்சம்பாறை
6. அரசு உயர்நிலைப்பள்ளி, கோழிப்பாறை
7. எஸ்.கே.எஸ்.எஸ்., நல்லேப்பள்ளி
8. அரசு உயர்நிலைப்பள்ளி, அகளி
9. அரசு பி.எம். ஜி.எஸ். பாலக்காடு
10. ஹேமாம்பிகா, சமஸ்கிருத எஸ்.எஸ்.கல்லேகுளங்கா

இடுக்கி மாவட்டம்

1. அரசு உயர்நிலைப்பள்ளிமூனார்.
2. அரசு உயர்நிலைப்பள்ளி, தேவகுளம்
3. சி.பி.எம். அரசு உயர்நிலைப்பள்ளி, பீருமேடு
4. அரசு உயர்நிலைப்பள்ளி, மாறயூர்
5. பஞ்சாயத்து எஸ்.எஸ். ஏலப்பாறை
6. எஸ்.எஸ்.சீந்தலார்
7. பஞ்சாயத்து எஸ்.எஸ்.வண்டிப் பெரியார்

கொல்லம் மாவட்டம்

1. அரசு பி.எச்.எஸ்.கொல்லம்
2. அரசு ஜி.எச்.எஸ். கொல்லம்

நெய்யாற்றின் கரை

1. சாமுவேல், எல்.எம்.எஸ். தமிழ் உயர்நிலைப்பள்ளி, பாறசாலை
2. அரசு உயர்நிலைப்பள்ளி, பாலராமபுரம்

கல்வியின் சிக்கல்

கேரளத்தில் வாழும் தமிழ் மாணவர்கள் அனைவரும் தமிழ் மூலம்தான் பள்ளியில் படிக்கின்றனர் என்பதில்லை. ஆங்கிலம் மற்றும் மலையாளத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு கற்று வருகின்றனர். தமிழ்ப் பெற்றோர்கள் பலரும் தமிழ்மூலம்தான் குழந்தைகள் கற்கவேண்டும் என்று விருப்பம் தெரிவிக்கவில்லை. தமிழ் மீது பற்று இருப்பதாகக் கூறிக் கொள்ளும் தமிழர்களும் தங்கள் குழந்தைகள் மலையாளத்தில் படிப்பதையே விரும்பு கின்றனர். இதற்கு அவர்கள் கூறும் காரணம் வேலைவாய்ப்பும், தனியாக 'டியூஷன்' போதிப்பதில் உள்ள இடர்ப்பாடும் ஆகும்.

தமிழர்கள் மலையாளத்தில் பாடங்களைக் கற்பது தமிழர்களின் பண்பாடு, மதிப்பீடு ஆகியவற்றிலும் சிக்கலைக் கொண்டு வருகின்றது. தமிழ் மாணவர்கள் மலையாள வரலாற்றையும், பண்பாட்டு முறைகளையும் கற்கும்போது தங்கள் பண்பாட்டு முறைகளை அறிந்து கொள்ள வாய்ப்பு கிடைப்பதில்லை.

பெரும்பான்மையர் மதிப்பீடுகளையும் குறிக்கோள் களையும் சிறுபான்மையர் தெரிந்தோ தெரியாமலோ கல்விமூலம் பெற்றுக் கொள்கிறார்கள் என்றுதான் கூற வேண்டும். கல்வி என்பது ஓர் இளைஞனைச் சமூகமயமாக்கித் தன் பண்பாட்டு முறைகளை அறிந்து கொள்ளவும் அதன் மதிப்பீடுகள், சின்னங்கள், நிறுவனங்கள் போன்றவற்றில் அவனைப் பற்றுறுதி கொண்டவனாகவும் ஆக்குவது ஆகும்.

கேரளத்தில் மலையாளம் மூலம் மலையாள வரலாறும் நிலக் கூறும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இவற்றைத் தமிழ் மாணவர்கள் தமிழ் மூலம் கற்கும் போதும் இதுவே நிலை. மலையாளிகள் தங்கள் இனத்தின் மீதும் பண்பாட்டின் மீதும் பற்றுறுதி கொள்ளப் பயன்படும் கல்வி தமிழர்களுக்குத் தமிழ் மூலம் அளிக்கப்படுகின்றது. தமிழ் மாணவர்களுக்கு இது எவ்வகையில் பொருந்தும்? தமிழ்ப் பண்பாடுகளிலுள்ள மதிப்பீடுகளையும் குறியீடுகளையும் அவர்கள் எவ்வகையில் அறிந்து கொள்வர்?

இலக்கியக் கல்வியும் இம்முறையில் அச்சமூகத்தின் பண்பாட்டை இளைய தலைமுறையினர்க்கு விளக்குவதாக அமையும். தமிழ் மாணவர்கள் மலையாளம் மூலம் கற்கும்போது மலையாள இலக்கியத்தையே கற்கின்றனர். தமிழ்

இலக்கியத்தையும் பாரம்பரியத்தையும் அவர்களுக்குப் போதிப்பது எப்படி? தங்களது வளமையான இலக்கியப் பண்பாட்டு முறைகளைக் கேரளத் தமிழர்கள் மறந்து போய்விடும் சூழல் ஏற்பட்டு விடுகின்றதல்லவா?

பெரும்பான்மையர்—சிறுபான்மையர் என்ற சிக்கல் ஏற்படும்போது ஒருவரையொருவர் புரிந்து கொண்டு இணக்க மான சூழலை ஏற்படுத்த வேண்டும். தமிழர்களுக்கு மலையாளப் பண்பாடு முறைகள் கல்வி மூலம் அளிக்கப்பட்டு விடுகின்றது. மலையாளிகளுக்குச் சிறுபான்மையர் பண்பாடு குறிப்பாகத் தமிழர் பண்பாடு முறைகளையும் இலக்கியங்களையும் அறிந்து கொள்ளக் கல்வி துணை செய்கின்றதா? இவ்வகையில் ஆராய்ந்து பார்த்தால் இப்போதைய கேரளக் கல்வி முறை இதற்கு உதவி செய்யவில்லை என்றுதான் கூற வேண்டும். சிறுபான்மையர் பண்பாடு, இலக்கியம் குறித்து மலையாளிகள் அறிந்து கொள்ளத் தற்காலக் கல்வித் திட்டம் உதவி செய்யாது.

அடிக்குறிப்புகள்

1. திரு வி.இராசகோபாலய்யரின் கடிதம், இந்து, சென்னை, 3.3.1983.
2. D.P.Pattanayak, *Multi Linguism and Language Teaching*, Oxford University Press, Madras, 1981, p.69.
3. Robert Rado, *Language Teaching*, Tata Megraw Hill, Publishing Co., Ltd., Bombay, 1968, p.28.
4. *Ibid.*, p.29.
5. கேரளத்தமிழ், திருவனந்தபுரம், மூன்றாவது ஆண்டுமலர், 1981, ப.18.
6. *Ibid.*, p.19.

இயல் 6

6. தமிழர்களின் அரசியல் மனச்சாட்சி

தமிழர் மலையாளிகள் அரசியல் வேறுபாடுகள்

தமிழர்களுக்கும் மலையாளிகளுக்கும் பலவகையிலும் அரசியல் வேறுபாடு கொண்ட கொள்கைகள் உண்டு. கேரளத்திலிருந்த தமிழ் பேசும் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் இணைவதற்கு முன்பே இவ்வேறுபாடுகள் தெளிவாகத் தீவிர மடைந்திருந்தன.

இந்தியா சுதந்திரமடைவதற்கு முன்பு கேரளத்தில் இரு காங்கிரஸ் கட்சிகள் செயல்பட்டன. ஸ்டேட் காங்கிரஸ், திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் என்பவை அவை. திருவிதாங்கூர் மன்னரிடமிருந்து சுதந்திரம் பெற வேண்டும் என்பதற்காக 'ஸ்டேட் காங்கிரஸ்' உருவாகியது. இதில் மலையாளிகள் அதிகம் பங்கு பெற்றதனால் மலையாளிகள் காங்கிரஸ் என்றழைக்கப்பட்டது. பின்பு இக்கட்சி தேசிய காங்கிரசுடன் இணைந்துவிட்டது.

திருவிதாங்கூர் சமத்தானத்திலிருந்த தமிழ் பேசும் பகுதிகளைச் சேர்த்துத் தமிழ் மாநிலமாக்க வேண்டும் என்ற கோரிக்கைக்காகத் தமிழர் காங்கிரஸ் கட்சி முதலில் தொடங்கப்பெற்றது. மலையாளிகள் இதனை எதிர்த்தனர்.

தாயத் தமிழகத்துடன் தமிழ் பேசும் பகுதிகளை இணைக்க வேண்டும் என்ற கோரிக்கைக்காகப் பின்பு தமிழ் நாடு காங்கிரஸ் என்ற இயக்கம் தொடங்கப்பட்டது. இது மலையாளிகளுக்கு எதிரான இயக்கம்.

இந்திய தேசியக் காங்கிரசும், ஸ்டேட் காங்கிரசும் இணைந்தபின்பும் தமிழர்களும் அக்கட்சியில் இருந்தனர். தமிழ் நாடு காங்கிரஸ், மொழிவாரி மாகாண அமைப்பிற்குக் காங்கிரஸ் கட்சியை எதிர்த்துப் போராடியது.

மொழிவாரி மாகாண அமைப்பிற்குக் காங்கிரஸ் எதிர்ப்பு தெரிவித்து வந்ததனால் தமிழ் நாடு காங்கிரஸ் கடுமையாக

அக்கட்சியை மலையாளிகள் ஆதிக்கம் வாய்ந்த கட்சி என்று கூறி எதிர்த்து வந்தது.

கேரளத்தின் பகுதியாக விளங்கும் தேவி குளம், பீர்மேடு ஆகியவற்றையும் சேர்த்துக் கல்குளம், விளவங்கோடு, தோவாளை, அகத்தீசுவரம், செங்கோட்டை ஆகிய தாலுகாக்களையும் தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்பதுதான் தமிழ் நாடு காங்கிரசின் கோரிக்கையாகும். இக் கோரிக்கை முழுவதும் நிறைவேற்றப்படாமல் தேவிகுளம், பீர்மேடு பகுதி இப்போதும் கேரள மாநிலத்தில் இருப்பது தமிழர்களுக்கு மனநிறைவு அளிப்பதாக இல்லை.

மீண்டும் இணைப்புச் சிக்கல்

தமிழகச் சட்டசபையில் வருவாய்த்துறை அமைச்சர் (அ.தி.மு.க) திரு எஸ்.டி. சோமசுந்தரம் இக்கருத்தை வெளியிட்டுள்ளார். "தேவி குளம் பீர்மேடு தமிழ் பேசும் பகுதிகள் கேரளத்துடன் இணைந்திருப்பது சரியன்று; இது குறித்து மேலும் நடவடிக்கை எடுக்க அரசு ஆராய்ந்து வருகின்றது".[1]

கேரளத்தில் உள்ள தமிழ் பேசும் பகுதிகள் தமிழகத்துடன் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்தவுடன் கேரள முதல்வர் திரு கருணாகரன் இதனை எதிர்த்துள்ளார். இப்போது தமிழகத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் கன்னியாகுமரியும், கூடலூரும் கேரளத்துடன்தான் இருக்க வேண்டும் என்று அவர் புதிய கோரிக்கை எழுப்பியுள்ளார். அவர் கூறியிருப்பதாவது:[2]

"எல்லா வகையிலும் இப்பகுதிகள் கேரளத்துடன்தான் இருக்க வேண்டும் என்பதற்கு ஆதாரம் உள்ளது; தேவி குளம், பீர்மேடு பகுதியைத் தமிழகத்துடன் இணைப்பதற்குக் கேரளம் இசையாது. மொழிவாரி மாநில அமைப்புக்குழு இது பற்றித் தீர விசாரித்து முடிவு செய்து விட்டதால் மீண்டும் இது குறித்து விவாதிக்க விரும்பவில்லை".

கேரளத் தமிழர்களின் அரசியல் நிலை

கேரளத்தில் வாழும் தமிழர்கள் நிலை என்ன? தமிழ் பேசும் குமரி மாவட்டத்தை மீண்டும் கேரளத்துடன் இணைக்க வேண்டும் என்று கேரள நாடார் மகாசன சங்கம் புதிய கோரிக்கை எழுப்பியுள்ளது.[3]

இக்கோரிக்கைகள் குறித்துத் தமிழர்களின் கருத்தை வெளியிடுவதற்கான செல்வாக்குமிக்க தமிழர் தலைவர்கள் யாரும

இப்போது கேரளத்தில் இல்லை. கேரள அரசியலில் மிகவும் முக்கிய அரசியல் வாதியாகத் தமிழர்கள் யாரும் இப்போது செயல்படவில்லை. முன்பு திரு பி.எஸ். நடராசப்பிள்ளை மிகவும் செல்வாக்கான தலைவராக விளங்கினார். அவரும் தமிழர் என்ற முறையில் அல்லாமல் சோசலிசக் கட்சித் தலைவர் என்ற பொதுவான நிலையில்தான் செல்வாக்குடன் விளங்கினார்.

இப்போது தமிழர்கள் என்ற முறையில் அரசியலில் ஈடு பட்டால் கேரளத்தில் பாதுகாப்பின்மையும் வேறு சிக்கல்களும் ஏற்படும் என்று தமிழர்கள் உணர்ந்துள்ளார்கள். கள ஆய்வின் போதும் பல தகவலாளர்கள் இக்கருத்தினை வெளியிட்டார்கள். அண்டை மாநிலமான கருநாடகத்தில் தமிழர்கள் அரசியலில் மொழி வெறியர்களால் எவ்வகையில் நடத்தப்படுகின்றனர் என்பதைத் தமிழர்கள் உணராமலில்லை.[4]

திருவனந்தபுரத்திலும், கொல்லத்திலும் தமிழர்கள் அதிகமாக வாழ்ந்துவருவதால் சட்டசபைத் தேர்தலில் ஓரளவுக்கு வேட்பாளரை முடிவு செய்யும் அரசியல் பலம் வாய்ந்தவர்களாக உள்ளனர். திருவனந்தபுரம் நகர்த் தொகுதியில் தமிழர் ஒருவர் சட்டசபை உறுப்பினராகத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றார். தமிழர்கள் பெரும்பாலோர் காங்கிரசுக் கட்சி ஆதரவாளர்களாகவே உள்ளனர் என்றும் கள ஆய்வில் புலப்பட்டது.

திருவனந்தபுரம், கொல்லம் ஆகிய இரு நகரங்களும் வாணிபத்திற்குப் புகழ் பெற்ற இடங்களாகும். திருவனந்தபுரத்தில் வாழும் தமிழர்கள் பலரும் அரசு அலுவலர்களாகவும், தனியார் நிறுவனங்களில் வேலை பார்ப்பவர்களாகவும் உள்ளனர். வாணிபத்தில் ஈடுபட்டுவரும் தமிழர்கள் அரசியலில் நேரடியாக ஈடுபட்டால் தங்கள் தொழில் பாதிக்கும் என்று கருதுகின்றனர். ஆனால் அரசியலில் மறைமுகமான செல்வாக்குப் பெற்று விளங்குகின்றனர். அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்குவதில் தாராளத்துடனும் நடந்து கொள்கின்றனர் என்று தெரிகிறது.

நகர சபை, சட்டசபை வேட்பாளர்களாக நிற்பவர்களுக்கு அரசியல் கோட்பாட்டின் அடிப்படையில் அல்லாமல் நேரடியாகச் சென்று கேட்பவர்களுக்கு எல்லாம் வணிகர்கள் பொருளுதவி செய்கின்றனர். யார் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவர்களின் உதவி தங்களுக்குத் தேவை என்று தமிழ் வணிகர்கள் தெரிந்து வைத்திருக்கின்றனர். தொழிலாளர் சிக்கல் சிரஞ்சீவியாக இருந்துவரும் கேரளத்தில் இத்தகைய உள்ளூர்த்

தலைவர்களின் ஆதரவு வணிகர்களுக்கு இல்லையெனில் தொழில் செய்வது அவ்வளவு இலகுவானது அன்று.

அரசியலில் தமிழர் சிறுபான்மைக் கோட்பாடு

அரசியல் கோட்பாடுகளுக்குப் போராட வேண்டும் என்ற எண்ணம் ஏதும் தமிழர்களிடமில்லை. தங்கள் குடும்ப வாழ்விற்கு அரசியல் தொடர்பில்லை என்ற கருத்தில் அதில் அதிகம் கருத்துச் செலுத்தாமல் உள்ளனர். ஆனால், கேரள அரசியல் சதுரங்க விளையாட்டைத் தமிழர்கள் பலரும் உணர்ந்துள்ளனர். தினசரி அரசியல் நடவடிக்கையில் ஈடுபடும் அளவிற்குக் கேரளத் தமிழர்களுக்கு அரசியல் வெறியுமில்லை. தேர்தல் காலத்தில் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று தங்கள் வாக்குகளை விரும்பும் அரசியல் கட்சிகளுக்கு அளிப்பதோடு தங்கள் அரசியல் நடவடிக்கை முடிந்து விட்டது என்றுதான் பலரும் கருதுகின்றனர். எனவே கேரள அரசியலில் தமிழர்கள் நேரடிப் பங்கு வகிக்கின்றனர் என்று கூறமுடியாது. தமிழர்களின் அரசியல் நடவடிக்கைகள் கேரள அரசியலில் ஆக்கவும் அழிக்கவும் சக்தி வாய்ந்தது என்றோ, விவகாரத்திற்குரியது என்றோ என்றும் கூறமுடியாது.

சிறுபான்மை என்ற அடிப்படையில் தமிழர்கள் அதிக எண்ணிக்கை வாய்ந்தவர்களாக உள்ளனர். இந்தப்பலத்தின் அடிப்படையில் தமிழர்கள் அரசியலில் மேலாதிக்கம் செலுத்த முயற்சி செய்வதுமில்லை. இளைஞர்களுக்குத் தமிழர் என்ற உணர்வின் அடிப்படையில் அரசியலில் செல்வாக்குப் பெறவேண்டும் என்ற எண்ணமே இல்லை. அவர்களின் குறிக்கோள் இலட்சியம் எல்லாம் அரசியலுக்கு அப்பாற்பட்டது. பொருளாதாரக் கண்ணோட்டத்துடன், கல்வி பெற்று வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ளவே எல்லோரும் விரும்புகின்றனர். இதற்கு மலையாளக் கல்வி துணை செய்யுமெனில் அதன் மூலம் வேலை வாய்ப்பைப் பெற்றுப் பொருளாதார அடிப்படையில் வருவாயை நிலைப்படுத்திக் கொள்ளவே விரும்புகின்றனர்.

தேவிகுளம், பீர்மேடு போன்ற பகுதிகளில் தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்வதால் அவர்கள் தமிழர்கள் என்ற முறையில் பிரதிநிதித்துவம் பெற்றால்தான் அரசுக்குத் தங்கள் கோரிக்கைகளை உணர்த்த முடியும் என்று கருதுகின்றனர்.

கொல்லம், திருவனந்தபுரம் போன்ற நகரங்களில் தமிழர்கள் நகரசபை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். முன்பு தமிழர்கள் பலர் நகர மேயர்களாகத்

தேர்ந்தெடுக்கப்பட்டுச் சிறப்புடன் பணியாற்றியுள்ளனர். அண்மைக் காலத்தில் தமிழர்கள் யாரும் மேயர்களாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. தற்போது (1983) திருவனந்தபுரம் துணை மேயராக இருப்பவர் ஒரு தமிழராவர்.

தமிழக அரசியல் பாதிப்பு

கேரளத் தமிழர்கள் தமிழக அரசியல் நடவடிக்கைகள்மீது தனிக் கவனம் ஒன்றும் செலுத்துவதில்லை. இந்தியாவின் பிற பகுதிகளில் நடைபெறும் அரசியல் நடவடிக்கைகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கின்றனரோ அதே அளவுதான் முக்கியத்துவம் அளிக்கின்றனர். பல தமிழர்கள் வீட்டில் தமிழ்ச் செய்தித்தாள்களே வருவதில்லை. பெரும்பான்மையரும் மலையாளம் அல்லது ஆங்கிலச் செய்தித் தாள்கள் மூலம்தான் செய்திகளை அறிந்து கொள்கின்றனர். தமிழ் வார இதழ்களை விரும்பிப் படிக்கின்றனர்.

தமிழகத்தில் ஏற்படும் சில அரசியல் நடவடிக்கைகள் தமிழர் மலையாளிகள் தொடர்பானதாக இருக்குமெனில் அது கேரளத்தில் எதிரொலிப்பது உண்டு. தமிழக—கேரள எல்லையிலிருக்கும் கடலூரிலிருந்து மலையாளிகள் அப்புறப் படுத்தப்படுவதை மலையாளிகளால் சீரணிக்க முடிவதில்லை.

முன்பு கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருந்த காலத்தில் சென்னையில் தமிழர் மலையாளிகள் மோதல் ஏற்பட்ட போது அதற்கு எதிரொலியாகத் தமிழர்களின் வாணிபப் பகுதியான சாலையில் தமிழர்கள் தாக்கப்பட்டனர். அத்தோடு இந்த விவகாரம் முடிந்துவிட்டது.

கொழுந்து விட்டெரியும் சிக்கல்கள்

பொதுவாகத் தமிழர்—மலையாளிகளிடையே அரசியல் அடிப்படையில் நிலவும் மனக் கசப்புகளுள் தண்ணீர், மின்சாரம் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. தமிழர்களுக்குக் கேரள ஆற்று நீரிலிருந்து தண்ணீர் அளிப்பதிலும் மின்சாரத்தைப் பங்கிடுவதிலும் விருப்பமில்லை. இதனைப் போன்றே தமிழகத்திலிருந்து கேரளத்திற்கு அரிசி போவதற்குத் தமிழர்களுக்கு விருப்பமில்லை.

தமிழர் மலையாளிகள் சிக்கல் பல நேரங்களிலும் தலை தூக்குவதுண்டு. தமிழகத்திலிருப்பவர்கள் இவற்றினைச் சமயம் கிடைக்கும் போதெல்லாம் கிளப்பாமலிருப்பதுமில்லை.

நாகர்கோவிலுக்குத் திருவனந்தபுரத்திலிருந்தும் திரு நெல்வேலியிலிருந்தும் இணைப்பு இரயில் பாதை போடப்பட்டபின்பு நாகர்கோவில் இரயில் நிலையத்தை எந்தப் பகுதியுடன் சேர்த்துக் கொள்வது என்பதில் தமிழர் மலையாளப் போராட்டம் தலை தூக்கியது. திருவனந்தபுரம் பகுதியுடன் சேர்க்க வேண்டும் என்று மலையாளிகளும், திருநெல்வேலிப் பகுதியுடன் சேர்க்க வேண்டும் என்று தமிழர்களும் வரிந்து கட்டிக் கொண்டு போராட்டத்தில் குதித்தனர்.

கொல்லத்துக்கு, சென்னையிலிருந்து சோழன் எக்ஸ்பிரசை நீடித்த போதும் தமிழர் மலையாளிகள் சிக்கல் தலை தூக்காமலில்லை. சென்னையிலிருந்து வெளிவரும் ஒரு வார இதழ்[5]

''தமிழா! தூங்கு!! நெல்லைக்கு இரயில் இல்லை; கொல்லத்துக்குப் போகிறது!'' என்று கட்டுரை வெளியிட்டது.

தமிழர் மலையாளிகளுக்கிடையே அண்மையில் ஏற்பட்டுள்ள சிக்கல் மங்களாதேவிக் கோயில் சிக்கல், இக் கோயிலை எப்படி அழைக்க வேண்டும் என்பதிலேயே சிக்கல் உள்ளது.

மலையாளிகள் இக் கோயிலை மங்களாதேவிக் கோயில் என்று அழைக்கின்றனர். தமிழர்கள் கண்ணகி கோயில் என்று கூறுகின்றனர்.

இக்கோயில் கூடலூர் அருகில் தமிழகத்திற்கும் கேரளத்திற்கும் இடையில் அமைந்த பகுதியில் உள்ளது. இக் கோயில் இருக்கும் இடமே சிக்கலுக்குரியதாக உள்ளது.

மலையாளிகள் இக்கோயில் இருக்கும் இடம் கேரளப்பகுதி என்கின்றனர். தமிழகத்தின் எல்லைக்குள் இருக்கிறது என்றும் இதற்கு ஆதாரம் உள்ளது என்றும் தமிழர்கள் கூறுகின்றனர். ஒரு தமிழ் வார இதழ் கூறுவதாவது:

'1927, 1957, 1959—ஆம் ஆண்டுகளில் தமிழக மாநில அரசினால் வெளியிடப்பட்ட வரைபடங்களிலும் இந்தக் கோயில் தமிழ்நாட்டு எல்லையில்தான் இருக்கிறது என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது'.

'1883—84—இல் வெளியிடப்பட்ட செயின்ட் ஜார்ஜ் கெசட்டிலும் வண்ணாத்திப் பாறை என்ற இடமும் அங்குள்ள மகா தேவிக் கோயிலும் தமிழகத்திற்குச் சொந்தம் என்றே குறிப்பிடப் பட்டுள்ளது.'

'1934—இல் வெளியிடப்பட்ட மதுரை மாவட்டக் கெசட்டிலும் அப்படித்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. 1918—இல் வெளியிடப்பட்ட சென்னை—திருவிதாங்கூர் சான்றிலும் இந்த விஷயம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது'.

'முதலாவது இராச ராச சோழன் காலத்தில் ஏற்பட்ட கல் வெட்டிலும் இது குறிப்பிடப்பட்டு இருக்கிறது. கண்ணகியின் மாமனார் மாசாத்துவான் என அதில் எழுதப்பட்டிருக்கிறது. நில அளவைச் சான்றுகளிலும் அந்தக் கோயில் தமிழகத்திற்குத்தான் சொந்தம் என்று கூறப்பட்டுள்ளது.'[6]

தமிழ் நாடு, கேரள மாநிலங்களின் நில அளவைத் துணை இயக்குநர்கள் இணைந்து 1975 எப்ரல் 18—ஆம் நாளில் வெளியிட்ட சான்றுகளில் இக்கோயில் 40 அடி தள்ளி தமிழ் நாடு எல்லைக்குள் இருக்கிறது என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.[7]

தமிழறிஞர்களான ஆர்.இராகவையங்காரும், மு.இராக வையங்காரும், இக் கோயில் குறித்து வஞ்சி மாநகர், சேரன் செங்குட்டுவன் என்ற நூல்களில் விளக்கமாகக் கூறியுள்ளனர்.[8]

அவ்விருவரின் கருத்துக்கள்: கண்ணகி (நெடுவேள் குன்றத்தில்) மதுரையை எரித்த பின் பழநி மலையில் தனது இறந்துபட்ட கணவனுடன் சேர்ந்து கொள்கிறாள். மலை வாழ் மக்கள் கூறிய இச்செய்தியைக் கேட்டு, செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை எடுக்கிறான். இச்சிலை இமயமலையிலிருந்து கனகவிசயர் சுமந்துவந்த கல்லிலிருந்து செதுக்கப்பட்டதாகும். சங்க காலத்தில் சேரர்கள் தலைநகராக விளங்கியது இப்போதைய கரூர் ஆகும். இங்குத்தான் இச்சிலை அமைக்கப்பட்டது. சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் இச்சிலை இருந்த இடத்தை 'மங்கல மடந்தைக்கோட்டம்" என்று குறிப்பிடுகின்றார். சிலப்பதிகாரத்தின் பழைய உரையாசிரியர் இதனை மங்கலாதேவிக்கோயில் என்று குறிப்பிடுகின்றார்.

சென்னைக் கல்வெட்டுச் சான்று (நிர் 288—1928—29, நிர் 420—1907) மதுரை மாவட்டத்தின் கம்பம்—கூடலூர் பற்றி தகவல் உள்ளது. கொல்லம் ஆண்டு 844—இல் (கி.பி.1669) மலையாள மன்னன் குலசேகரன் மங்கலாதேவிக் கோயிலுக்குக் கொஞ்சம் நிலம் அளித்தான்.

சிலப்பதிகாரத்தில் மாடலன் கூறும் கோயில் செங்குட்டுவன் கட்டுவதற்கு முன்பு இருந்த கோயிலாகும்.

மங்கலா தேவியும் கண்ணகியும் ஒரே தெய்வமன்று. இப்போதுள்ள கோயிலும் மிகவும் அண்மையில் தோன்றியதாகும்.

எது எப்படியிருப்பினும் இக்கோயில் தமிழர்களுக்கும் மலையாளிகளுக்குமிடையே சிக்கலை ஏற்படுத்திவிட்டது என்பதில் ஐயமில்லை. மங்கலா தேவியும் கண்ணகியும் ஒன்றுதானா என்று கட்சி சேர்ப்பதில் ஆர்வமில்லாவிடினும், அக்கோயில் இருக்கும் பகுதி எந்த மாநிலத்தைச் சேர்ந்தது என்பதில் தமிழகத்திற்கும் கேரளத்திற்கும் கருத்து வேறுபாடு தோன்றிவிட்டது.

இந்தக் கோயில் விவகாரத்தின் மூலமும் மீண்டும் ஒரு சிக்கல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்றுதான் கூறவேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. இந்தியன் எக்ஸ்பிரஸ், மதுரை, 12.3.1983.
2. இந்து, சென்னை, 17.3.1983.
3. தினமலர், திருநெல்வேலி, 21.3.1983.
4. கருநாடக சட்டசபையில் கைகலப்பு—அ.தி.மு.க. உறுப்பினர் தமிழில் பதவிப் பிரமாணம் எடுத்ததால் கூச்சல் குழப்பம் என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியின் சுருக்கமாவது.

   "கருநாடக புதிய சட்டசபையில் அ.தி.மு.க உறுப்பினரான பக்தவத்சலம் தமிழில் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டபோது பார்வையாளர் பகுதியிலிருந்து இரு குழுவினர் கடுமையாக மோதிக் கொண்டதையடுத்து, சலசலப்பு ஏற்பட்டது.

   புதிய உறுப்பினர்கள் பதவி ஏற்கும் வைபவம் தொடங்கி 150 நிமிடங்களுக்குப் பிறகே பக்தவத்சலம் தமிழில் பதவிப் பிரமாணம் எடுத்தார். அப்போது உறுப்பினர்கள் கன்னடத்தில்தான் பதவிப் பிரமாணம் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திய ஜனதா எம்.எல்.ஏ நாராயண் குமார் ஓடிச் சென்று பக்தவத்சலம் போர்த்தியிருந்த கறுப்புச் சால்வையைப் பிடித்து

இழுத்தார். இதனையடுத்து, பார்வையாளர் பகுதியில் இரு கோஷ்டியினருக்குமிடையே கூச்சலும் எதிர்க் கூச்சலும் ஏற்பட்டுக் கைகலப்பு நடந்தது'' (தினமலர், நெல்லை, *25.1.1983*).

5. அக்கட்டுரையில் கூறப்பட்டிருப்பதாவது:

''வாய்ப்பு கிடைக்கும்போது நெல்லைக்குப் பகல் நேர எக்ஸ்பிரஸ் விடுவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் கொல்லத்துக்கு வசதிகளைப் பெருக்குவதில்தான் இரயில் நிருவாகம் அதிகம் கவனம் செலுத்துகிறது'' (ராணி வார இதழ், சென்னை, *20.2.1983*).

6. தாய், வார இதழ், சென்னை, *15.05.1983*.

7. இந்து, சென்னை, *25.04.1983*.

8. ஆர்.விசயராகவன் எழுதிய கடிதம் இந்து, சென்னை, *17.05.1983*.

இயல் 7

7.கேரளம்

கேரளத்தின் அழகு

கேரளம்[1] அழகிய பெண்ணின் கறுப்புக் கூந்தலைப் போன்று விளங்குகிறது. மலைபடு பொருளின் வாசம் சுமந்து வரும் காற்றைப் போன்று கேரளம் புதியது; புதிரானது.

பருவமழைக் காலத்தில் கேரளம் வானமழையால் குளிப்பாட்டப்பட்டுச் சில்லென்றிருக்கும். சூன் மாதம் முதல் கேரளம் நீராடும். சந்திரனும், சூரியனும், விண்மீன்களும் புதிய ஒளி பெற்று வானில் பவனி வரும். வருணன் தன் அசுரத்தேரை ஓட்டிக் கேரளத்து வானைத் திடுக்கிடச் செய்வான். குன்றுகள் எல்லாம் பூதகணங்கள் போன்று தோற்றமளித்து அச்சுறுத்தும். கம்பியாய் உருகி வரும் மழைத் தண்ணீர் மண்ணில் கலந்து இரத்த நிறமாகும்; இராச நர்த்தகியின் தாள கதியைப் போல் கூரை முகட்டில் ஓசை எழுப்பும்; வாழை மடலில் தேங்கி நின்று கண்ணாடி போன்று இரசவாத வித்தை காட்டும். ஏரி, குளம் நிரம்பும். இருண்ட வானம் பச்சை படர்ந்த பூமியுடன் நயன மொழி பேசி மயக்கும்.

ஆகஸ்ட் மாதம் வந்ததும் சூரியன் ஆட்சி மலரும். கறுப்பு மேகங்களை அவன் கை தட்டி அனுப்பிவிட்டு இராசாங்கம் செய்வான். பூமி எங்கும் புதிய மலர்கள், மழைத் தண்ணீரின் மாய வித்தையால் மலரும் காயும் மலியும். அறுவடைக்கு நெற்கதிர்கள் தலை சாய்த்துக் காத்திருக்கும். ஓணம் வந்துவிட்டது என்று ஓசை எழும்பும். ஆம். கேரளத்தின் தேசியத் திருவிழாவுக்குப் பச்சைக் கம்பளம் விரித்தாகிவிட்டது.

திருமாலின் அவதாரமான பரசுராமனின் மழுவின் உதவியால் கடலிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டதாகக் கேரளம் புராணமாக நம்பப்படுகிறது. ஆனால், கேரளத்தின் பொற்காலமாக மகாபலி என்னும் அசுரன் ஆண்ட காலத்தை மலையாளிகள் கருதுகின்றனர். மாவேலி (மகாபலி) ஆண்ட காலத்தில் எல்லா மனிதர்களும் சமமாக இருந்தார்கள் என்று கூறுகிறது மலையாள நாடோடிப் பாடல் ஒன்று.[2]

ஓணம் பண்டிகை அந்தப் பொற்காலத்தை மலையாளிகள் மீண்டும் நினைத்து மகிழும் காலம். முரண்பாடுகளைப் பெரிதுபடுத்தாமல் நடைமுறைக்கு இயைந்ததாக்கிக் கொண்டு வாழ்க்கையை அனுசரித்துப் போகும் வகையில் ஒரு கலையாக்கிக் கொண்டவர்கள் மலையாளிகள்.[3]

கேரளத்தின் தனித் தன்மை

கேரளத்தின் தும்பாவில்தான் நவீன ஏவுகணைகள் வான மேகத்தைக் கிழித்துக் கொண்டு ஏவப்படுகின்றன. விஞ்ஞான அற்புதம் நடக்கும் கேரளத்தின் மூங்கில் மரக் காட்டுக்குள்தான் வன தேவதைகள் மோகினி உருவம் எடுத்து ஆள்களை மயக்கி மோகச் சேட்டைக்கு அழைத்துக் கொல்வதாக நம்பப்படுகின்றது.

தென்னை மரங்கள் மைல் கணக்கில் காவல் நிற்கும். காயல்கள் பக்கம் உள்ள பலாமரத் தோட்டத்தில் கடவுளையோ துர் தேவதையையோ நயந்தும் அச்சுறுத்தியும் அழைக்கும் மந்திரவாதியின் மலையாளக் குரல் முட்டி மோதுகின்றது.

அத்வைதச் சித்தாந்தத்தை உலகுக்களித்த ஆதி சங்கரர் பிறந்த பூமியான காலடியும் இங்குத்தான் உள்ளது. உடலை வளைத்துச் 'சர்க்கஸ் செய்து உயிர் வாழ உடம்பைச் சிறப்பாகக் கருதும் தீயர்கள் என்ற ஈழவர்களை உலகுக்கு அளித்த இடமுமான தலைச் சேரியும் இங்குத்தான் உள்ளது.

கதகளியும், ஓட்டந்துள்ளலும், மோகினி ஆட்டமும் மலையாளத்தின் பழம் பெருமையைப் பாவங்கள் மூலம் காட்டுவதும் இங்குத்தான். மேற்கத்தியக் கண்டுபிடிப்பான திரைப்படத்தைப் புரிந்து கொண்டு அனைத்துலகத் திரைப்படப் போட்டிக்குத்[4] திரைப்படங்கள் தயாரிப்பதும் இங்குத்தான்.

இசுலாம் மார்க்கத்தின் உண்மையை அறிந்து கொள்ள மன்னன் ஒருவன் தீர்க்கதரிசியான நபிகள் நாயகத்தைச் சந்திக்கச் சென்றதும் கேரளத்திலிருந்துதான்.[5] ஆட்சி செய்வதற்காகப் பல்வேறு மார்க்கங்களின் முத்திரையைக் குத்திக் கொண்டு அரசியல் கட்சிகள் போட்டியிடுவதும் இங்குத்தான் காணமுடியும்.

பொதுவுடைமைச் சித்தாந்தம் இங்கு வேரூன்றி வெற்றி கண்டிருக்கிறது.[6] ஆனால், இங்குத்தான் சபரி மலை ஐயப்பனுக்கு நான்கு திசைகளிலிருந்தும் பக்தர்கள் இருமுடி தாங்கி, தொண்டை கிழிய 'சரணம் ஐயப்பா' என்று கூறி மகர விளக்கு காண வருகின்றனர். குருவாயூரப்பனும், சோட்டாணிக்கரைப்

பகவதியும் இங்குத்தான் அருள் ஆட்சி செய்கின்றனர். பல வகையிலும் கேரளம் பழமையில் ஊறிக் காணப்படுகின்றது.

கேரளச் சமூகம் பல சாதிகளையும், கிளைச் சாதிகளையும் கொண்டு விளங்குகின்றது. இதனைக் கண்டு மனம் வெதும்பி விவேகானந்தர் 'கேரளம் இந்தியாவின் பைத்தியக்கார விடுதி' என்று அழைத்தார். ஒரு தலைமுறைக்கு முன்பு தீண்டாமையைத் தீவிரமாகப் பின்பற்றியவர்கள் மலையாளிகள். அவர்கள்தான் இந்தியாவிலேயே முதன்முதலாகக் கோயில் கதவுகளைத் திறந்து தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆலயப் பிரவேசம் செய்வித்தவர்கள்.

மேல் சாதி ஆண்கள் தங்கள் காம இச்சையைத் தீர்க்கும வகையில் கீழ்ச் சாதிப் பெண்களை அடிமைப்படுத்திச் சமூகப் பழக்க வழக்கங்களை ஏற்படுத்திக் கொண்டனர் என்று குற்றம் சாட்டப் படுவதும் இங்குத்தான். மேல்சாதிப் பெண்களைக் கீழ்ச்சாதி ஆண்கள் தூக்கிச் சென்று தங்களுடன் வைத்துக்கொள்ள அனுமதித்தவர்களும் இவர்கள்தான்.[7]

பெண்களைப் போகப் பொருளாகப் பயன்படுத்திய சமூக அமைப்பில்தான் பெண்கள் அதிகம் கல்வி கற்றுச் சுதந்திரம் வாய்ந்தவர்களாக விளங்குகின்றனர்.

பல நூற்றாண்டுகளாகக் கேரளம் இந்தியாவின் பிற பகுதிகளுடன் அரசியல் அடிப்படையில்தான் தனிமைப்படுத்தப் பட்டிருந்ததே தவிர பண்பாட்டு அடிப்படையில் அன்று. மௌரியர்கள், குப்தர்கள், மொகலாயர்கள் ஆகியோர்களின் ஆட்சியின் எல்லைக்குள் கேரளம் உட்படவில்லை. ஆனால், பலவகையிலும் இந்தியாவின் பண்பாட்டுத் தொடர்பு கேரளத்துக்கு இருந்து வந்திருக்கின்றது.

இந்து மதத்தின் பல பிரிவுகளான சைவம், வைணவம், சாக்தம் ஆகியவை கேரளத்தில் பின்பற்றப்பட்டுள்ளன. பௌத்தமும், சமணமும் இங்குத் தழைத்து ஓங்கியுள்ளன.

திராவிடத்தின் ஒரு பகுதியான கேரளம் ஆரியத் தன்மைகள் அதிகம் பெற்று விளங்குகின்றது. வழக்கொழிந்த வடமொழி இங்குப் பேணப்படுகின்றது. இன்றும் வடமொழி மூலம் செய்தியைத் திருவனந்தபுரம் வானொலிதான் வாசிக் கின்றது. தமிழுடன் ஏற்பட்ட வடமொழிக் கலப்பினால்தான் மலையாள மொழியே தோன்றியது.

இந்தியாவின் ஒரு கோடியில் வாழ்ந்த காளிதாசனும், பவபூதியும் எழுதிய வடமொழி நாடகங்கள் கேரளத்து

மண்ணில்தான் மூச்சைப் பிடித்துக் கொண்டு உயிர் வாழ்கின்றன; கூத்தியாட்டம் என்ற பெயரில் நடைபெறுகின்றன. கேரளத்துக் கோயில்கள், திராவிடப் பண்பாட்டையும் வெளிப்படுத்த வில்லை; ஆரியப் பண்பாட்டையும் வெளிப்படுத்தவில்லை. கூர்ந்து பார்த்தால் அவை நேபாள, சீன அமைப்பில்[8] உள்ளன.

கோயில்கள் நிறைந்து பக்தி ரசம் எங்கும் பாய்ந்தோடும் கேரள மண்ணில் உள்ள அரசியல் பாதிப்பு மாதிரி வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. கேரள **வாடகை உந்து ஓட்டுநர்க்கு** இருக்கும் அரசியல் அறிவு எழுத்தாளர் சால்மன் குஷ்டியைத் திணற அடித்திருக்கிறது[9] என்றால் இதைவிட வேறு சான்று வேண்டுமா?

நில எல்லையும் மக்கள் தொகையும்

கேரளத்தின் மேற்குப் பகுதி அரபிக்கடலால் சூழப் பட்டுள்ளது. கேரளம் 300 மைல் நீளமும் சராசரி 30 மைல் வீதியும் கொண்டு அரபிக்கடலுக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் இடைப்பட்டுத் தெற்கிலிருந்து வடக்காய் அமைந்து விளங்கு கின்றது. அரபிக்கடலில் உள்ள இலட்சத் தீவுகள் ஓர் எல்லையாகவும், தென்பகுதியில் தமிழகமும், வடகிழக்குப் பகுதியில் கருநாடகமும் எல்லைகளாக அமைந்துள்ளன.

கேரளத்தின் மொத்த நில எல்லை 38,864 ச.கி.மீ. தூரம் கொண்டது. மத்திய பிரதேசம் கேரளத்தை விடவும் பதினான்கு மடங்கு பெரியது. ஆனால் கேரளத்தில் ம.பி.இல் பாதித் தொகையினர் வாழ்கின்றனர். 1971—ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி கேரள மக்கள் தொகை 21,347,375 ஆகும். 26 இந்தியர்களுள் ஒருவர் மலையாளியாவர்.

இந்தியாவின் மொத்தப் பரப்பளவில் கேரளம் 1.18% ஆகும். ஆனால், இந்தியாவின் 3.9% மக்கள் தொகையினர் இங்கு வாழ்கின்றனர். இங்குள்ள மக்கள் நெருக்கம் ச.கி.மீட்டருக்கு 549 பேர். ஆனால், இந்தியாவின் மக்கள் நெருக்கம் ச.கி.மீட்டருக்கு 178 பேர் தான். கேரளத்தின் மூன்றில் ஒரு பகுதி காடும் மலையும் **உள்ளடக்கியது.**

கேரளத்தின் நில அளவைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது உலகிலுள்ள பல சுதந்திர நாடுகளை விடவும் இங்கு மக்கள் தொகை அதிகமாகும். இலங்கையின் மக்கள்தொகை கேரளத்தின் மக்கள் தொகையில் பாதிதான். சுவிட்சர்லாந்தில் கேரள மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதிதான் மக்கள்தொகையாகக்

காணப்படுகின்றது. கனடா, யுகேசுலேவியா. கொலம்பியா ஆகிய நாடுகளின் மக்கள்தொகை கேரள மக்கள்தொகைக்குச் சமமானவையாகும்.

இந்திய மாநிலங்களை ஒப்பிடும்போது கேரளத்தைப் போன்று நான்கு மடங்கு பெரியதான ஒரிசாவில் கேரள மக்கள் தொகைக்குச் சமமான மக்கள்தொகைதான் காணப்படுகின்றது. அதிகம் மக்கள்தொகை கொண்ட உத்திரப்பிரதேசம் கேரளத்தைப் போன்று ஏழு மடங்கு பெரியது; ஆனால் மக்கள்தொகையோ கேரளத்தைப் போன்று நான்கு மடங்கு கொண்டது.

காலநிலை

கேரளத்தின் தாழ்வான பகுதிகளில் சராசரி வெப்பநிலை 26.7 செ.கி. மழைக் காலத்தில் இது 23.8 செ. கி. இலிருந்து 26.7 செ.கி வரைக்குட்பட்டதாக இருக்கும். கோடைக்காலத்தில் 26.7 முதல் 29.4 செ.கி வரையிலும் செல்லும். தென்மேற்குப் பருவ மழை பெய்யத் தொடங்குவதற்கு முன்பு மே மாதம் உயர்ந்த பட்சம் 32.2 செ.கி. வெப்பநிலை காணப்படும். டிசம்பர்—சனவரி மாதங்களில் குளிர்வீசத் தொடங்கும்போது காலநிலை 21.1 செ.கி. மலைப்பாங்கான இடங்களில் ஆண்டு முழுவதும் காலநிலை குளிராகவும் இதமாகவும் இருக்கும்.

தென் மேற்குப் பருவமழை கேரளத்தின் கடற்கரை ஓரத்தில் மே மாதம் இறுதியில் அல்லது சூன் மாதத் தொடக்கத்தில் பெய்யத் தொடங்கும். இதனை 'இடவப்பாதி மழை' என்று அழைப்பர். சூன் முதல் செப்டம்பர் வரையிலும் கேரளம் மழையால் குளிப்பாட்டப்படும். இந்த நான்கு மாதங்களிலும் சமவெளிப் பகுதியில் 254 செ.மீ. மழை பெய்யும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையில் 500 செ.மீ அதிகமாகவும் மழை பெய்யும். பொதுவாகக் கேரளத்தில் மழை பொய்ப்பதில்லை. செப்டம்பர் முதல் டிசம்பர் வரையிலும் கேரளத்தில் தென் மேற்குப் பருவ மழை திரும்பிச் செல்லும்போது கொஞ்சம் மழை பெய்யும். இதனை மலையாளிகள் 'துலா வர்ஷம்' என்று கூறுகின்றனர். சனவரி—பிப்ரவரி மாதங்களில் இதமான காலநிலை காணப்படும். மார்ச்சு, ஏப்ரல், மே மாதங்களில் அதிகம் வெப்பம் காணப்படும்.

கேரளத்தின் சமூக வரலாறு அதன் கால நிலையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது.[10] கேரளத்தில் வியர்வை அதிகரிக்கும் காலநிலை அதிகம் இருப்பதனால் ஆண்களும் பெண்களும் இருமுறை நீராடுவர். பல வண்ண நிறத்தில்

ஆடைகள் அணிவதற்குப் பதில் வெள்ளை நிற ஆடைகளையே அதிகம் அணிகின்றனர்.[11]

கேரளம் மேடு பள்ளமாகவும், குறுக்கும் நெடுக்குமாக ஆறுகளும் ஓடுவதனால் அடுத்த அடுத்த வீடுகள் கொண்ட தெருக்களைக் கொண்ட கிராமங்களை அதிகம் காண முடியாது. பாலக்காட்டிலும், தென் திருவிதாங்கூரிலும் தவிர்த்துப் பிற இடங்களில் மக்கள் தனித் தனியாக அமைந்த வீடுகளில் வாழ்கின்றனர்.[12]

கேரளம் இயற்கையால் சூழப்பட்டுள்ளது. "தென்னஞ் சோலையும் காயலும் கொண்ட பகுதியில் குளுமையை இரசித்துக் கொண்டே போகலாம். பழங்கால முறையிலான தென்ன ஓலையிலான வீட்டின் அழகு நெஞ்சை அள்ளும். இந்தக் காட்சி மனத்திற்கு அமைதியை அளிக்கிறது. தற்காலச் சமூகத்தினால் ஏற்படும் நெருக்கடிகள் காய்ந்த இலைகளைப் போன்று வீழ்ந்து மறைந்து பழங்காலத்திற்கே நம்மை இழுத்துச் செல்கின்றது" என்று வெளிநாட்டவர் ஒருவர் அண்மையில் கேரளத்தின் அழகை ஆராதிக்கின்றார்.[13]

கேரள மக்கள்

நூற்றாண்டுகள் பல கடந்த பின்பும், பல சமூக சீர்திருத்த இயக்கங்கள் கேரளத்தில் தோன்றிய பின்பும் கேரளம் இப்போதும் பல இனங்கள் பண்பாடுகள் ஆகியவற்றின் கண்காட்சிச் சாலையாகவே விளங்குகின்றது. நீக்ரோக்கள், புரோட்டோ—ஆஸ்திரேலியர்கள், மெடிட்டரேனியர்கள், நார்டிக் ஆகிய இனத்தவர்களின் இரத்தக் கலப்பு கொண்டவர்களாகக் கேரள மக்கள் காணப்படுகின்றனர்.

கேரளத்தை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது அது ஒரு குடியேற்ற பூமியாகத்தான் தோன்றுகின்றது. கேரளத்தில் காணப்படும் மக்களுள் பெரும்பான்மையோரின் பூர்வீகம் கேரளம் அன்று. பல்வேறு இடங்களிலிருந்து பல சாதியினரும் மதத்தவர் களும் இங்குக் குடியேறியவர்களாகவே காணப்படுகின்றனர்.

இங்கு நம்பூதிரிகள், நாயர்கள், ஈழவர்கள் என்று மூன்று முக்கிய சாதியினர் உள்ளனர். இம் மூன்று பிரிவினரும் கேரளத்தின் பூர்வீகக் குடிகள் அல்லர்.

நம்பூதிரிகளைப் பரசுராமன் வட இந்தியாவிலிருந்து

கோளத்துக்குக் குடியேற்றியதாகப் புராணம் கூறுகின்றது. நாயர்களும் வெளி நாட்டவர்களே. அவர்களின் பூர்வீகம் குறித்துப் பல தகவல்கள் பல வகையில் உள்ளன. நாயர்கள் மகாபாரதத்தில் கூறப்படும் அரத்தாவாகிதாசு என்பவர்களின் வம்சாவளியாவர் என்று கூறப்படுகின்றது.[14] அவர்கள் மகாபாரத காலத்தில் பஞ்சாபில் வாழ்ந்தவர்கள் என்றும், பின்பு பல பிரிவுகளாகப் பிரிந்து பல்வேறு காலக்கட்டத்தில் பல வழிகள் மூலம் கோளத்திற்கு இடம் பெயர்ந்தனர் என்றும், நாயர்கள் நாக இனத்தைச் சேர்ந்த வர்கள் என்றும். அதனால்தான் நாக வழிபாடு இங்கு அதிகம் காணப்படுகின்றது என்றும் கருதப்படுகின்றது.[15] ஈழவர்கள் பெயரிலே அவர்கள் பூர்வீகம் காணப்படுகின்றது. ஈழம் என்று அழைக்கப்படும் இலங்கையிலிருந்து இவர்கள் கேரளத்தில் குடியேறியவர்கள் ஆவர்.

யூதர்களும் கேரளத்தில் உள்ளனர். கிறித்துவ மதம் தோன்றிய காலத்திலேயே கிறித்தவர்களாக ஆக்கப்பட்ட சிரியன் கிறித்துவர் களும் வாழ்கின்றனர். வேற்று நாட்டவரைப் போன்ற பெயரில் காணப்படும் இவர்கள் உண்மையில் மதமாற்றம் செய்யப்பட்ட நம்பூதிரிகளும் நாயர்களும் ஆவர்.[16]

வெளி நாட்டவரான அராபியர்களுக்கும் கேரள முஸ்லீம் களுக்கும் கலப்பினால் ஏற்பட்ட மாப்பிள்ளை முசுலீம்களும்[17] இங்கு உள்ளனர். அவர்களுக்கு என்று தனியாக மலப்புறம் என்று முசுலீம் மாவட்டமே உள்ளது.

இதனைப் போன்றே தமிழர்கள், கன்னடியர்கள் ஆகியோர்களும் வேறு மாநிலங்களிலிருந்து இங்குக் குடியேறி வாழ்கின்றனர்.

தமிழர்கள் கேரளம் முழுவதும் பாவி வாழ்ந்து வருகின்றனர். ஆனால் திருவனந்தபுரம், கொல்லம் ஆகிய இரு நகரங்களில் வாழும் தமிழர்களே இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். எனவே இவ்விரு நகரங்களைக் குறித்தும் அறிந்து கொள்ளல் நம் ஆய்வுக்குத் துணை செய்யும்.

திருவனந்தபுரம்

கேரளத்தின் தலைநகரான திருவனந்தபுரம் இந்தியாவிலுள்ள மிக அழகான நகரங்களுள் ஒன்று. இது கடற்கரையோரத்தில் பதினான்கு குன்றுகளின் மீது அமைந்து எழிலுடன் விளங்குகின்றது. கோயில் மணியோசையும் தெய்வீக இசையும் காலைக்கு வரவுகூறி இங்கு மக்களைத் துயிலெழச் செய்யும். திருவனந்தபுரத்திற்கே உரித்தான மண்வாசனைகூட உண்டு என்று கூறப்படுவதுண்டு.[18]

பத்பநாபசாமிக் கோயிலில் திருப்பள்ளி கொண்டிருக்கும் திருமாலின் பாம்பான ஆதிசேடனின் பெயர் காரணமாகத் திருவனந்தபுரம் என்று இந்நகருக்குப் பெயர் வந்தது. திரு அனந்த புரம் திருவனந்தபுரம் என ஆயிற்று. அனந்தன் என்பது ஆதி சேடனின் பெயர்.

பத்பநாபசாமித் திருக்கோயில் சேர சோழ பாண்டியர் களின் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குகின்றது. இக் கோயில் கோபுரம் ஏழடுக்கு கொண்டு திராவிடச் சிற்ப வேலைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றது.

மார்த்தாண்ட வர்மா என்ற மன்னர் சிற்றரசு பலவற்றை வென்று திருவிதாங்கூரைத் தேசமாக்கிப் (கி.பி.1729—1753) பத்பநாபசாமிக்குத் தேசத்தை அர்ப்பணித்தார். பத்பநாபதாசன் என்ற பெயரில் பின்பு தேசபரிபாலனம் செய்து வந்ததால் திருவிதாங்கூர் மன்னர் அனைவரும் பத்பநாபதாசன் என்றே குறிப்பிடப்பட்டனர்.

ஸ்ரீ பத்மநாபசாமிக் கோயிலைச் சுற்றிலும் ஒரு கோட்டை அமைந்துள்ளது. இது வலிமை வாய்ந்ததாக 3/4 ச.கி.மீ. பரப்பளவில் நான்கு பெரிய கோட்டைக் கதவுகளையும் கொண்டு விளங்குகின்றது. பல கேரள மன்னர்களின் கொட்டகாரங்கள் இங்கு உள்ளன. இப்போது அவை அரசு அலுவலகங்களாக உள்ளன.

ஸ்ரீ பத்மநாபசாமிக்கோயிலின் எதிர்ப்புறம் 'சாலை பசார்' என்றழைக்கப்படும் வாணிபத்தலம் உள்ளது. திருவிதாங்கூர் திவான் கேசவதாசு காலத்தில் இது உருவாகியது. இங்குள்ள வணிகர்களில் பெரும்பாலோர் தமிழர்களாவர்.

1971—ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி இந் நகரின் மக்கள்தொகை 409,627 ஆகும். இதில் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டோர் எண்ணிக்கை 47,024 ஆகும்.[19]

தமிழர் வாழும் இடங்கள்

திருவனந்தபுரத்தில் தமிழர்கள் கீழ்க்கண்ட இடங்களில் வாழ்கின்றனர்; புத்தன் சந்தை, மணக்காடு, கைதமுக்கு, தளியல், குடியாத்தி, சாலை, வலிய சாலை கிராமக் கோட்டைகளுள்ளும் வெளியேயும், செந்திட்டை, வஞ்சியூர், சவகர் நகர், பேரூர்க்கடை, உள்ளூர், ஸ்ரீ வாரியம், தம்பானூர், தைக்காடு, வழுதைக்காடு, மேட்டுக்கடை, பூசைப்புரை, கரமனை, வள்ளக்கடவு, பேட்டை, மண்ணந்தலை.

கொல்லம்.

திருவனந்தபுரத்திலிருந்து 70 கி.மீ. தூரத்தில் வடக்குத் திசையில் கொல்லம் அமைந்துள்ளது. அஷ்டமுடிக் காயலின் கூரையிலிருக்கும் இந்நகர் மிகவும் தொன்மையான துறைமுகப் பட்டினம். கொல்லம் ஆண்டு (கிபி.825) என்று கேரளத்தில் வழங்கும் ஆண்டு முறை இந்நகரை ஒட்டியே பெயர் பெற்றது. இந்தக் கொல்லம் ஆண்டுமுறை தொடங்குவதற்கு முன்பே இந்நகர் புகழ் பெற்று விளங்கியுள்ளது.

கொல்லம் நகர் தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்தின் அங்கமாகவும் சிறிதுகாலம் இருந்தது.[20] மிகப் பழங்காலத்திலேயே இது அரசியல், வாணிபம் ஆகியவற்றிற்குப் புகழ்பெற்ற இடமாக விளங்கி வந்துள்ளது. சீனா, அரேபியா முதலான வெளிநாடுகளுடன் இது வாணிபத் தொடர்பு கொண்டு இருந்தது. சீனாவின் மங்கோலிய மன்னன் கொல்லத்துடன் அரசியல் தொடர்பு கொண்டிருந்தான் என்றும் அறிகின்றோம்.

'கொல்லம் கண்டவன் இல்லம் வேண்டான்' என்னும் மலையாளப் பழமொழி, கொல்லம் நகரின் புகழைப் பறை சாற்றும்.

'கொலா' எனும் வடமொழிச் சொல் நல்ல மிளகைக் குறிப்பிடும் என்றும், அதற்குப் புகழ் பெற்று விளங்கிய இந்நகர் அச்சொல்லாலேயே அழைக்கப்படுகிறது என்றும் கூறப் படுவதுண்டு. தமிழில் கொலு, கொல்லை, கோல் ஆகிய சொற்களிலிருந்தும் கொல்லம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.[21]

மார்க்கோபோலோ, அபுல்பெதா போன்ற பயணிகள் குறிப்புகளிலும் கொல்லம் இடம் பெற்றுள்ளது.

போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் ஆகியோர்களின் ஆட்சியிலிருந்து கைமாறி பின்பு திருவிதாங்கூர் மன்னர் ஆட்சியின் கீழ் கொல்லம் வந்துள்ளது.

திருவிதாங்கூர் முதலமைச்சராக இருந்த வேலுத்தம்பித் தளவாய் (கிபி. 1800) கொல்லம் நகர வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்தினார். நகரில் புதிய வாணிபத் தலத்தைக் கட்டி மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களிலிருந்து தமிழர்களை அழைத்து வந்து குடியேறச் செய்தார். கொல்லத்திலிருந்து ஹசூர் கச்சேரியைத் திருவனந்தபுரத்திற்கு மாற்றியது வரையிலும் இது திருவிதாங்கூரின் தலைநகரமாக விளங்கிவந்தது.

1971—ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி கொல்லத்தில் மக்கள்தொகை 124,208 ஆகும். இதில் தமிழ்மொழி பேசுவோர் எண்ணிக்கை 10,307 ஆகும்.[22]

தமிழர் வாழும் இடங்கள்

இங்குத் தமிழர்கள் கீழ்க்கண்ட பகுதிகளில் வாழ்கின்றனர்:

தாமரைக்குளம், ஆசிரமம், தேவள்ளி, முழங்காடகம், கடப்பாக்கடை, கொட்டியம், கொல்லம் டவுன், பள்ளி முக்கு கணபதிக்கோயில், சின்னக்கடை, ஐயப்பாக்காலனி, இலட்சுமி நடை முதலியன.

அடிக்குறிப்புகள்

1. கேரளா என்னும் வடமொழி கேரா எனும் சொல்லிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். கேரா என்பது தென்னையைக் குறிக்கும். தென்னைகள் நிறைந்த இப் பகுதிக்கு இச்சொல் மூலம் பெயர் வந்திருக்க வேண்டும். தமிழில் சாரல் எனும் சொல் திரிந்து சேரலா என்று மாறி, கேரளா என்று ஆகியிருக்க வேண்டும்.

   K.V.Krishna Iyer, *A Short History of Kerala*. Pai & Co Ernakulam, 1966, p.1.

2. 'மாவேலி நாட்டு வணித்தும் காலம்' எனத் தொடங்கும் மலையாள நாட்டுப் பாடல். ஆங்கிலக் கவிஞன் ராபர்ட் சௌதியே 'The Story of Baly' என்ற கவிதையை எழுதுவதற்கு இந்த நாடோடிப்பாடல் உதவியாக இருந்துள்ளது.

   A.Sreedhara Menon, *Social and Cultural History of India* 'Kerala, Sterling Publishers, New Delhi, 1979, p. 142.

3. K.V.Krishna Iyer, *A Short History of Kerala* Pai & Co., Eranakulam, 1966, p 53.

4. அடூர் கோபாலகிருஷ்ணன் இயக்கிய மலையாளத் திரைப் படம் 'எலிப்பத்தாயம்' பல உலகப் பரிசுகளை 1983—ஆம் ஆண்டில் பெற்றுள்ளது.

5. சேரமான்பெருமாள் (கி.பி.600)

6. மூன்று முறை பொதுவுடைமைக் கட்சி ஆட்சி அமைத்துள்ளது. திருவாளர்கள் நம்பூதிரிப்பாடு, அச்சுத மேனன், ஈ.கே.நாயனார் ஆகியோர் முதலமைச்சர்கள்.

7. Kusuman K.K., *Slavery in Travancore* Kerala Historical Society Trivandrum. I Ed (1973), p.28-29.

8. *Illustrated Weekly*, Bombay Annual 1973.

9. "Mid Night Children" என்ற புதினத்தின் ஆசிரியர் கூறியிருப்பதாவது:

"நான் ஒரு டாக்சியில் இருந்து கொண்டு அதன் ஓட்டியிடம் கேரள அரசாங்கம் குறித்துக் கேட்டேன். கூட்டு அரசாங்கத்தின் தன்மைகளை அவர் மிகத் தெளிவாகக் கூறினார். தலைவர்களை மட்டுமல்லாமல் கட்சியின் கொள்கைகளையும் எதிர்காலத்தையும் அவர் விளக்கினார். அவர் இவ்வளவு அறிந்து வைத்திருப்பது அதிசயமளிப்பதாகும்".

India Today, April 15, 1983, P.137

10. A Sreedhara Menon *Social & Cultural History of India* Kerala Sterling Publishers, New Delhi, 1979, p. 18.

11. K.V.Krishna Iyer, *A Short History of Kerala*, Pai & Co., Ernakulam, 1966, P.111.

12. கேரளத்தில் கிடைக்கும் நல்ல குடிநீர் வசதியும் இதற்கு ஒரு காரணமாகும். Col.Welsh தனது Military Reminiscences' என்ற நூலில் இதனைப் பாராட்டிக் கூறுகின்றார். Every man has his own Castle' என்ற ஆங்கிலப் பழமொழி இங்கும் பொருந்தும்.

A Sreedhara Menon *Social & Cultural History of India* Kerala Sterling Publishers, New Delhi, 1979, p. 128.

13. நான்சி ஈல்டிங் எனும் வெளிநாட்டுக்காரர் இந்து நாளிதழில் (16.4.1983) எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி.

14. K.V.Krishna Iyer, *A Short History of Kerala* Pai & Co Ernakulam. p.10

15 C.K.Anantha Krishna Iyer *The Tribes and Castes of Cochin*. Cosmo Publication New Delhi, 1981, p 2.

16. பழமைப் பிடிப்பு வாய்ந்த நம்பூதிரிகளையும் போர் வீரர்களான நாயர்களையும் கிறித்துவ மதத்தில் அப்போ தவத்தூர் தாமசு மத மாற்றம் செய்தார். கிறித்தவ மதம் தோன்றியபோதே இவர்களும் கிறித்தவர்களாகிவிட்டனர். கண்ணனூரில், தாமசு பர்சியக் கல்லில் வானச் சிலுவையை இந்தியாவில் முதல் கிறித்துவத் தேவாலயத்தில் அமைத்தவர். அது வெள்ளத்தில் மூழ்கியதனால் அச் சிலுவையை வலியபள்ளி எனும் தேவாலயத்தில் அவரின் சீடர்கள் கொண்டு வந்து அமைத்தனர். இப்போதும் இதனைக் காணலாம்.
Illustrated Weekly Bombay, Annual 1976, p 20

17. மகாப்பிள்ளை என்பது மாப்பிள்ளை ஆயிற்று என்றும் மருமகனை மாப்பிள்ளை என்று அழைப்பதனைப் போன்று, அராபியர்கள் கேரளப் பெண்களைத் திருமணம் செய்த தனால் மாப்பிள்ளை என்று மதிப்பாக அழைக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகின்றது.

Ibid. p 25

18. இந்த மண்வாசனையைப் போக்குவரத்து நெரிசலான சாலையில் கூட உணரமுடியும் என்று கூறப்படுகிறது.
In Quest of Kerala Vol I Accent Publication, Trivandrum, p.18

19. *Census of India*, Kerala 1971

20. K P Padmanaba Menon, *History of Kerla Vol .I* Government of Travancore, p 270

21 *Ibid* , p 272

22 *Census of India*, Kerala 1971.


கேரளம்
கருநாடகம்
அரபிக்கடல்
கேரளம்
தமிழ்நாடு
கொல்லம்
திருவனந்தபுரம்

இயல் 8

8. கேரளத் தமிழர் சமுதாயம்

சங்க காலம்

சங்க காலத்தில் கேரளம் தமிழகத்தின் அங்கமாகவே விளங்கியது. சேரநாடு என்றழைக்கப்பட்டது. சமூகப் பழக்க வழக்கங்கள், மொழி, சமுதாய அமைப்பு ஆகியவற்றில் தமிழகத்திலிருந்து இப்பகுதி வேறுபாடு கொண்டதாகயிருக்க வில்லை. சங்க காலத்திற்குப் பின்புதான் இப்பகுதி தனக்கே உரித்தான தனித்தன்மையை வெளிப்படுத்தத் தொடங்கியது. இப்பகுதிக்கு ஆரியர்கள் வடக்கிலிருந்து குடியேறத் தொடங்கிய பின்பு பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஆரியர்களின் குடியேற்றம் கி.பி.6—8 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்டது.

புராண வரலாறு

கேரளம் தோன்றிய புராண வரலாறும் ஆரியர்கள் குடியேற்றத்தை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது. பரசுராமன் மழுவை எறிந்து கன்னியாகுமரியிலிருந்து கோகர்ணம் வரையிலும் உள்ள பகுதியைப் பரசுராமன் பூமி என்று உருவாக்கினார். இதுவே கேரளமாயிற்று. வெளிநாடுகளிலிருந்து பிராமணர்களைக் கொண்டு வந்து 64 கிராமங்களில் குடி யேற்றினார் என்று குறிப்புகள் உள்ளன. கி.பி. 12—ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கன்னடக் குறிப்புகளிலும் பரசுராமன் வட பகுதியை உருவாக்கியதாகக் கூறப்படுகின்றது.

புராண மூலமும் வரலாற்று மூலமும் உறுதிப்படுத்தப்படும் ஆரியர்கள் குடியேற்றம் கேரள வரலாற்றில் மருமக்கள் தாய முறையையும் மலையாள மொழியையும் உருவாக்கியது.

நம்பூதிரிகள் என்றழைக்கப்படும் பிராமணர்கள் வட இந்தியாவிலிருந்து 10—ஆம் நூற்றாண்டிற்கு முன்பே குடிபுகுந்து சாதி அமைப்பு முறையினையும் கொண்டுவந்து இங்குப் புகுத்தினர். வஞ்சியின் சேர மன்னர்களாக இருந்தவர்கள்

சத்திரியர்களாக மாறி சூரிய வம்சம் என்று அழைக்கப்பட்டனர். அது வரையிலும் இடையர்குலத் தோன்றல்களாக விளங்கிய ஆய் மன்னர்கள் பின்பு சத்திரியர்களாக மாற்றப்பட்டனர். இதனைப் போன்றே குறுநில மன்னர்கள் பலரையும் அவர்கள் சத்திரியர் களாக மாற்றினர். முதலில் இம்மன்னர்கள் இதனை மறுத்த போதிலும் பின்பு இசைந்துவிட்டனர்.

பத்தாம் நூற்றாண்டில் கண்ணன், பொறையன், போழன் சேந்தன் போன்ற திராவிடப் பெயர்களே மன்னர் பெயர்களாகக் காணப்படுகின்றன. நம்பூதிரிகள் தயவைப் பெற்றவர்கள் சத்திரி யர்களாக மாறி மருமக்கள் தாய முறையைப் பின்பற்றத் தொடங்கினர்.[1] இந்தச் சரித்திரப் பின்னணியில்தான் சேரநாடு கேரளமாகியது; மலையாள மொழியும் உருவாகியது.

மலையாளமொழி

மலையாளமொழி எப்போது உருவாகியது, எவ்வகையில் வளர்ச்சி அடைந்து வந்துள்ளது என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. கிறித்துவ ஆண்டு தொடங்கிய காலத்தில் கேரளத்தில் வழங்கி வந்தது கொடுந்தமிழே என்றும் தமிழ்க் கிரந்தத்தை வைத்து வட்டெழுத்து முறையில் கி.பி.10—ஆம் நூற்றாண்டு அல்லது அதற்குப் பிறகு மலையாளம் உருவாகியது என்ற கருத்தும் நிலவுகின்றது.[2]

வரலாற்றுப் பின்னணி

மலையாள மொழியும் கேரள மாநிலமும் தோன்றுவதற்கு முன்பு அங்கு வாழ்ந்தவர்கள் தமிழர்களாவர். வரலாற்று மூலம் இந்த உண்மைகள் தெளிவாக விளங்குகின்றன.

இளங்கோ அடிகள், குலசேகர ஆழ்வார் போன்ற தமிழ்ப் புலவர்கள் கேரள மண்ணில் தோன்றியவர்கள்.

மூன்றாம் நூற்றாண்டில் பாண்டியனின் அமைச்சராக விளங்கிய மாணிக்கவாசகர் வைக்கத்திற்கு வந்து மேற்குக் கடற்கரையோர மக்களின் பண்பாட்டை வியந்து பாராட்டி யுள்ளார்.

இலக்கிய வரலாற்றில் புகழ்பெற்று விளங்கும் சைவ நாயன்மார்களில் ஒருவரான விறல்மிண்டன் நாயனார் மத்திய திருவிதாங்கூரில் செங்கணூரில் தோன்றியவர்.

சிவத் தொண்டரான சுந்தரமூர்த்தி நாயனார் மலையாள அரசனின் நெருங்கிய நண்பராக விளங்கியவர்.

முசிரி (கிரங்கனூர்) நீலகண்டனார் இறையனார் அகப்பொருளுக்கு உரையெழுதியவர்.

சங்க காலத்திலேயே மக்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு இடம் பெயரும் வழக்கம் உண்டு. பாணர்களும் பொருநர்களும் இவ்வாறு இடம் பெயர்ந்து செல்வதுண்டு. தமிழகத்தின் வேறு பகுதிகளிலிருந்து சேரநாட்டு அவைக் களத்திற்குப் பல புலவர்கள் வந்துள்ளனர். கபிலர், பரணர், ஔவையார் ஆகியோர் இவ்வகையில் இடம் பெயர்ந்து வந்தவர்களாவர்.

கேரளத் தமிழர்கள்

இவ்வகையில் வரலாற்றுப் பின்னணியை வைத்துப் பார்க்கும்போது கேரளத்தில் வாழ்பவர்கள் அனைவரும் தமிழர்களே என்ற முடிவுக்குத்தான் வந்து விடவேண்டியுள்ளது. மற்றொரு வகையில் கேரளத்தின் பூர்வீகக் குடிகளாகத் தமிழர்கள் வாழ்கின்றனர் என்ற கருத்தும் கூறப்படுகின்றது.

'இந்திய மாநிலங்களில் தமிழர்கள்' என்ற கட்டுரையில் (ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மலர், மதுரை, ப.84, 1981) முனைவர் சாலை இளந்திரையன் இக்கருத்தையே கூறுகின்றார்.

'தமிழகத்தின் அண்டை மாநிலங்களான கேரளம், கருநாடகம், ஆந்திரம் ஆகியவற்றில் வாழும் தமிழர்கள் பெரும்பாலோர் சென்றேறு குடிகள் அல்லர். காலங்காலமாக அவர்கள் அங்கேயே வாழ்ந்து வருகின்றார்கள். இந்த மாநிலங்களில் புதிய பெரிய தொழிற்களங்கள் தோன்றியதன் காரணமாக 20/25 ஆண்டுகளில் இந்த மாநிலங்களில் குடியேறியவர்கள் தவிர பெரும்பான்மையான தமிழர்கள் அங்கே நிரந்தரமாக வாழ்ந்து வருபவர்களே'.

இக்கூற்று எவ்வகையில் பொருந்தும் என ஆராய்தல் நலம் பயக்கும்.

மலையாள மொழித் தோற்றமும் கேரள மாநில அமைப்பும் (முன்பு திருவிதாங்கூர் கொச்சிப் பகுதி) தனித் தன்மையை வெளிப்படுத்தத் தொடங்கிய பின்பும் அங்கு வாழ்ந்தவர்களைத் தமிழர்கள்தான் என்றழைப்பது பொருத்த மானதன்று. மொழி வேறுபட்டதாகத் தோன்றியபோதே பண்பாடும் வேறுபாடு கொண்டதாகிவிட்டது. இன அடிப் படையில் தமிழர்களும் மலையாளிகளும் ஒன்றாக இருந்த போதிலும் பண்பாட்டு அடிப்படையில் வேறுபட்டவர் களாகிவிட்டனர்.[3]

பண்டைய நாளில் பாணர்கள், வேலவர்கள் என்றழைக்கப் பட்டவர்கள் இப்போதும் கேரளத்தில் வாழ்ந்து வருகின்றனர் என்று தர்ஸ்ட்டன் கூறுகின்றார். அவர்கள் முன்பு என்ன தொழிலைச் செய்து வந்தனரோ அதனையே இப்போதும் செய்து வருகின்றனர். பாணர்கள் செல்வந்தர்கள் வீட்டின் முன் சென்று பாடுவது வழக்கம். வேலவர்கள் வெறியாடிக் குறி சொல் கின்றனர். இவ்விரு பிரிவினரும் தமிழைப் பேசுவதுமில்லை; தமிழர்கள் என்ற உணர்வு கொண்டவர்களுமில்லை. இந்தச் சூழலில் அவர்களைத் தமிழர்கள் என்று வலுக்கட்டாயமாக உட்படுத்தி ஆராயத் தேவையில்லை.

சேர நாட்டில் வாழ்ந்தவர்கள் மலையாளியாகிய பின்பு அப்பண்பாட்டிற்கு மாறியவர்கள் அனைவரும் மலையாளிகள் என்றே அழைக்கப்படவேண்டும். இவ்வகையில் மலையாளப் பண்பாட்டிற்கு மாற்றம் கொள்ளாமல் பண்டு தொட்டே தமிழர்கள் தங்கள் தனித் தன்மையை (ஒரு சில மாற்றங்களுடன்) வெளிப்படுத்தி இப்போதும் தமிழர்களாகவே வாழ்ந்து வருகின்றனர் என்று கூறுவதை அறிவியல் கண்ணோட்டத்தில் ஏற்றுக் கொள்ள முடியாது.

தமிழர்களை மலையாளிகளாக்கும் முயற்சி அண்மைக் காலம் வரையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கேரளத்தில் ஒரு சாதிப்பிரிவினரான நாயர்கள், மலையாள மொழியைப் பேசி மலையாளப் பண்பாட்டைப் பின்பற்றுகிறவர்கள் அனைவரை யும் நாயர்கள் என்று அழைக்கலாம் என்று 1930—ஆம் ஆண்டில் ஒரு மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தில் கூறியுள்ளனர்.[4] இவ்வகையில்கூடப் பல தமிழர்கள் நாயர்களாக மாறியிருப் பதற்கு வாய்ப்புள்ளது.

கேரளத்தில் இப்போதும் தமிழர்களாக வாழ்ந்து வருப வர்களின் பூர்வீகம் கேரள மாநிலம் அன்று. அனைவரும் தமிழகத்திலிருந்து குடியேறியவர்களாவர். வரலாறு இதனை உறுதிப்படுத்துவதாகவேயுள்ளது.

கேரளத் தமிழர்கள் அனைவரும் ஒரே காலக் கட்டத்தில் கேரளத்தில் குடியேறியவர்கள் அல்லர். வேறு நாடுகளில் வாழும் பல இனக்குழுக்களைப் போன்று நீண்ட தூரத்தைக் கடந்து குடியேறியவர்களும் அல்லர். கேரளமும் தமிழகமும் அண்டை மாநிலங்களாக உள்ளதால் தமிழர்கள் இடம் பெயர்தல் மிகச் சாதாரணமாக நடைபெற்றுள்ளது.

எப்போது இடம் பெயர்ந்தனர்?

தமிழர்கள் மிகத் தொன்மையான காலத்தில் இடம் பெயர்ந்த போதிலும் வேறுபட்ட பண்பாட்டுச் சூழல்ஏற்பட்டபின்பு ஆரியங்காவு, ஆரல்வாய்மொழிக் கணவாய்கள் வழியாகக் கேரளத்தில் குடியேறத் தொடங்கினர்.

பிராமணர்கள்.

சோழர்கள் 1102—ஆம் ஆண்டில் கேரளத்திலிருந்து படைகளைப் பின்வாங்கியபோது ஆரல்வாய்மொழிப் பாதை கேரளத்திற்கு மிக முக்கியம் வாய்ந்த தொடர்புப் பாதையாக மாறியது. பாண்டிய நாட்டிலிருந்து முனைப்பான பிராமணர்கள் முதன்முதலில் கேரளத்திற்கு வந்து குடியேறினர். லேவாதேவிக் காரர்களாகவும், வாணிபம் செய்பவர்களாகவும் அவர்கள் வந்ததனால் கேரள மன்னர்கள் அவர்களை வரவேற்றுச் சத்திரங்களிலும் கோயில்களிலும் இலவசமாக உணவளித்தனர். மன்னர்களின் பிறந்தநாளின்போதும் திருவிழாக்களின்போதும் பிராமணர்களுக்குப் பணம் பரிசு அளிக்கும் வழக்கமும் ஏற்பட்டது.[5]

இப்பரிசுப் பணம் அளிப்பதிலும் மதிப்பு வேறுபாடுகள் நிலவி வந்தன. நம்பூதிரிப் பிராமணர்களுக்கு ஏழு பணமும் (திருவிதாங்கூர் நாணயம்) தமிழ்ப் பிராமணர்களுக்கு நான்கு பணமும் அளிக்கப்பட்டன.[6]

பிராமணர்கள் 17—ஆம் நூற்றாண்டில் கேரளத்தில் முக்கியமான ஊர்களிலும் நகரங்களிலும் சமூக மடங்களை ஏற்படுத்தினர். பாலக்காட்டிலிருந்த நம்பூதிரிகள் **ஐதர்** அலி படையெடுப்பின் போது ஊரை விட்டுப் போய் விட்டதனால் சேகரவி வர்மா காவிரிக் கரையிலிருந்து ஏராளமான பிராமணர் களை அழைத்து வந்து குடியேற்றினார்.

உள்நாட்டில் பொருள்களுக்கு வரி விதிக்கும் வழக்கம் நிலவிய காலத்திலேயே பிராமணர்கள் தங்கள் தலையில் சுமந்து செல்லும் அளவு மூட்டைக்கு வரி கிடையாது. தோளில் சுமந்து செல்லும் மூட்டைக்கு வரி விதிக்கும் வழக்கம் முன்பு நிலவியது.

கேரளத்தில் **18, 19—ஆம்** நூற்றாண்டுகளில் மரண தண்டனையிலிருந்துகூட பிராமணர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. முக்கியமான வழக்குகளில் எல்லாம் பிராமண நீதிபதிகளே தீர்ப்பளிக்க வேண்டும் என்ற உரிமையும் இருந்தது.[7]

கொச்சி, மலபார் முதலிய இடங்களில் வாழும் காடு பட்டன், சாலியன், தரகன் முதலானோர் தமிழகத்திலிருந்து இங்குக் குடியேறியவர்களாவர். இவர்கள் பல்வேறு காலக் கட்டங்களில் கேரளத்தில் குடி புகுந்தனர்.[8]

காடுபட்டன் என்ற பார்ப்பனர்கள் சோழநாட்டில் காடூரிலிருந்து வந்தவர்கள் என்பதனால் காடூர் பட்டன் (பிராமணர்) என்று அழைக்கப்பட்டனர். பின்பு அது காடு பட்டன் என்று மருவிவிட்டது. தங்கள் சொந்த ஊரில் புத்த மதத்தை விரும்பியதால் இவர்கள் தங்கள் ஊரிலிருந்து துரத்தப் பட்டனர் என்றும் ஆதி சங்கரர் இவர்களுக்கு அபயம் அளித்தார் என்றும் கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. மலையாள ஆண்டு 625—இல் இவர்கள் கேரளம் வந்தனர். ஏறத்தாழ 520 ஆண்டுகளாக இவர்கள் கேரளத்தில் வாழ்ந்து வருகின்றனர்.[9]

தமிழகத்திலிருந்து பிற சாதியினரும் இவ்வகையில் கேரளத்தில் குடியேறியவர்கள் என்பதற்கு உறுதியான சான்றுகள் உள்ளன.

சாலியர்கள்

கொச்சிப் பகுதியில் இரிஞ்சாலக் குடா, கண்ணனூர் ஆகிய இடங்களில் வாழும் சாலியர்கள் தஞ்சாவூரிலிருந்து குடியேறியவர்களாவர். சேரமான் பெருமாள் காலத்தில் அவர்கள் அங்குக் குடியேறினர். திரு வஞ்சிக்குளம் தூர்த்துப் புனிதப் படுத்துவதற்குக் கலசம் கட்டுவதற்கான நூல் தேவைப்பட்டபோது சாலியப் பெண்கள் மூலம் இதனை உருவாக்க வேண்டும் என்று காஞ்சிபுரத்திலிருந்து சாலியர்களை அழைத்து வந்து கண்ண னூரிலில் குடியமர்த்தினார். நிலத்திற்கு மன்னர் வரி விலக்கு அளித்தார்.

மலபாரில் வாழும் சாலியர்கள் குறித்து இவ்வகையிலான கதை ஒன்று வழங்குகிறது. ஸ்ரீ கணபதி வழிபாட்டிற்காக சமோரிய மன்னர்களுள் ஒருவன் இவ்வழிபாட்டை மேற்கொண்டிருந்த சாலியர்களை மலபாரில் குடியமர்த்தி வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தான் என்று கூறப்படுகிறது.

உம்மினித் தம்பி திவானாக இருந்தபோது (1810) திருவனந்தபுரத்துக்கும் நெய்யாற்றன் கரைக்கும் இடைப்பட்ட காட்டுப் பகுதியைச் சீராக்கித் தமிழ்நாட்டிலிருந்து சாலியர்களை குடியேற்றினார்.[10] இப்பகுதி பாலராமவர்மா மன்னர் பெயரால் பாலராமபுரம் என்று அழைக்கப்படுகின்றது. இப்போதும்

இங்குச் சாலியர்கள் மிகுதியாக உள்ளனர். இங்கு நெய்யப்படும் கைத்தறித் துணி புகழ் பெற்றது.

தரகன்கள்

பாலக்காடு, சித்தூர் தாலுகாக்களில் வாழும் தரகன் சாதியினரும் தமிழ்நாட்டிலிருந்து இடம்பெயர்ந்து சென்றவர் களாவர்.[11] பாலக்காட்டுப்பகுதியில் வாழும் முத்தன் என்ற சாதியினருடன் இவர்களுக்குத் தொடர்பு உண்டு. ஆனால் இவர்கள் இதனை ஏற்றுக் கொள்வதில்லை. 'முத்தன் தரகனாகி நாயராகி மாறிவிட்டார்' என்று டாக்டர் குண்டர்ட் குறிப்பிடு கின்றார். இவர்கள் எப்போது கேரளத்தில் குடிபுகுந்தனர் என்பதற்குச் சரியான ஆதாரமில்லை.

பிற சாதியினர்கள்

கோயம்புத்தூரிலிருந்து செட்டியார்கள் கேரளத்தில் குடியேறியுள்ளனர்.

சாணார்கள் என்றழைக்கப்பட்ட நாடார்களும் இங்குக் குடியேறியவர்களாவர்.

எட்டு அல்லது ஒன்பதாவது நூற்றாண்டில் முக்குவர்கள் கேரளத்தில் குடியேறினர்.

பட்டாரியர்கள் பெருமாள் மன்னர்கள் காலத்தில் கேரளத்தில் குடியேறியவர்கள். கி.பி. முதல் நூற்றாண்டில் வேளாளர்கள் மதுரையிலிருந்து இங்குக் குடியேறினார்கள். பாரூரில் வாழ்பவர்கள் வள்ளியூரிலிருந்து குடியேறியவர்கள்.[12]

நாஞ்சில் நாட்டு வேளாளர்கள்

கேரளத்தில் வாழும் நாஞ்சில் நாட்டு வேளாளர்களையும் இங்குள்ள பூர்வீகக் குடிகள் என்று அழைப்பது இயலாது. இவர்கள் திருவிதாங்கூர் சமத்தானத்திற்குத் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாங்குநேரி தாலுகாவிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களாகக் கருதப்படுவதுண்டு.[13] பின்பு திருவிதாங்கூரிலிருந்து கேரளத்தின் உள் நாட்டிற்கு இடம் பெயர்ந்து சென்றனர். கேரளத்தில் வாழும் இச்சாதியினர் தமிழகத்தில் வாழும் இச்சாதியினருடன் இன்றும் கொள்வினை கொடுப்புவினை கொண்டிருப்பது இத்னை உறுதிப்படுத்துகின்றது.

மருமக்கள் தாயமுறையைக் காட்டி நாஞ்சில் நாட்டு வேளாளர்களும் பின்பற்றுவதனால் இவர்களுக்கும் கேரளம் பூர்வீகம் என்று கூறமுடியாது.

பாண்டிய நாட்டுப் பகுதியாக இருந்த நாஞ்சில் நாட்டைச் சேரர்கள் வென்றபோது அவர்கள் பறளி யாற்றுத் தண்ணீரை விவசாயத்திற்கு அளிக்க மறுத்துவிடுவர் என்ற அச்சத்தினால் இராச விசுவாசத்தை வெளிப்படுத்தும் வகையில் மருமக்கள் தாய முறையைப் பின்பற்றினர் என்றும் கருதப்படுகின்றது.

கேரளத்தில் வாழும் பிற தமிழ்ச் சாதியினரான கிருட்டிண வகையறாக்கள், சாலியன்கள், தரவன்கள் போன்றவர்களும் மருமக்கள் தாயமுறையை இராச விசுவாசத்தின் அடிப்படையில் தான் பின்பற்றியிருக்க வேண்டும். இச்சாதியினருக்குள் மக்கள் தாயமுறைப் பிரிவினரும் உள்ளதாலும், மருமக்க்ள் தாய முறை பின்னால் ஏற்பட்டது என்பதனாலும் இக்கருத்து உறுதி செய்யப்படக் கூடியதாகும்.

கேரளத்தில் ஒரேவிதமான பரம்பரைத் தொழிலைத் தமிழ்ச் சாதியினரும் மலையாளச் சாதியினரும் மேற்கொண்டு வருகின்றனர். இவ்விரு பிரிவினரும் பண்பாட்டு மரபு இனப்படியும் சமூக முறையிலும் வேறுபட்டே காணப்படுகின்றனர். ஒரே பரம்பரைத் தொழிலைச் செய்யும் தமிழர்களும் மலையாளிகளும் இணைவது என்பது இப்போதைக்கு ஏற்படக்கூடியதன்று.[14]

கேரளத்தில் வாழும் நாவிதர்களையும், வண்ணார்களையும், இதற்கு எடுத்தக்காட்டாகக் கூறலாம். இவ்விரு தொழிலையும் செய்யும் பிரிவுகளில் தமிழர்களும் மலையாளிகளும் உள்ளனர். இரண்டு பிரிவினர்களும் மொழி, வாழும் முறை, சொத்துரிமை போன்றவற்றில் வேறுபாடு கொண்டவர்களாகவே உள்ளனர். தமிழர்—மலையாளி பிரிவினர் ஒரே சாதியாக இணைவது நடக்கக் கூடியதன்று. மக்கள் கணக்கெடுப்பு முறையில் கூட ஒரே பிரிவாக வகைப்படுத்திக் கொள்ள இருபிவிரினரும் இசைவதில்லை.

கேரளத்தில் வாழும் மலையாளிகளுள் பல சாதியினரும் நம்பூதிரிப் பிராமணர்களுடன் இரத்தக் கலப்பு வாய்ந்தவர்களாகவே உள்ளனர். கேரளத்தில் நிலவும் பல சமூகச் சடங்குகள் இதற்கு ஆதாரமாக விளங்குகின்றன. இதனை மலையாளிகள் பெருமையாகக் கூடக் கருதுவதுண்டு.

தமிழர்கள் கேரளத்தில் பூர்வீகமாக வாழ்ந்து வந்திருந்தால்

நம்பூதிரிகளுடன் தொடர்பு ஏற்பட்டிருக்கக்கூடும். ஏனெனில் நம்பூதிரிகளின் ஆதிக்கம் முன்பு அவ்வளவு செல்வாக்குப் பெற்றிருந்தது. எல்லாத் துறைகளிலும் அவர்க்ள் இட்டதே சட்டம் என்ற நிலை இருந்து வந்தது. ஆனால், தமிழர்கள் இவ்வகையில் நம்பூதிரிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவேயில்லை. இவர்கள் இங்குக் குடியேறியதன் காரணமாகவும் பண்பாட்டு வேறுபாடு காரணமாகவும் தொடர்பு ஏற்படவில்லை என்று உணர்ந்து கொள்ளலாம்.

எதிர்ப்புப் போராட்டம்

கேரளத்தில் தமிழ்ப் பிராமணர்களுக்கு எதிர்ப்பு ஏற்படாமலுமில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் திருவிதாங்கூரில் (கேரளத்தின் ஒரு பகுதியாக முன்பு இருந்தது) கல்வி அறிவுபெற்ற மலையாள மத்திய தர வர்க்கத்தினர் உரிமைக்காகப் போராடினர். தங்கள் சமத்தானத்தில் அரசு உயர்பதவிகளுக்குத் தமிழகத்திலிருந்து பிராமணர்களைக் கொண்டு வந்து நியமிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

திருவிதாங்கூர் அரசு நியமனங்களில் தமிழ்ப் பிராமணர் கள் நுழைவது பத்தொன்பதாம் நூற்றாண்டில் இராமையன் தளவாய் காலத்திலிருந்து தொடர்ந்து நடைபெற்று வந்தது.

இதனை எதிர்த்து 1891—ஆம் ஆண்டு சனவரி முதல் தேதியில் திருவிதாங்கூர் மன்னரிடம் மலையாள விண்ணப்பம்[15] ஒன்று அளிக்கப்பட்டது. இந்த விண்ணப்பத்தில் 10,028 பேர் பல சாதியினர் (மலையாளிகள்) கையெழுத்திட்டிருந்தனர். அரசு வேலைகளுக்கு உள்ளூர்க்காரர்களான மலையாளிகளுக்குத்தான் வாய்ப்பளிக்கச் சட்டம் இயற்ற வேண்டும் என்று விண்ணப்பத்தில் வேண்டப்பட்டிருந்தது.

தமிழ்ப் பிராமணர்கள் பூர்வீகமாகக் கேரளத்தில் வாழ்ந்து வந்திருந்தால் இத்தகைய வேலை வாய்ப்புப் போராட்டத்திற்கு இடம் ஏற்பட்டிருக்காது என்று உணர்ந்து கொள்ளலாம்.

கேரளத்தில் வாழும் தமிழர்கள் அனைவரும் அங்குக் குடியேறியவர்களாவர். பல்வேறு அரசியல் காரணங்களுக்காகவும், வேலை தேடியும் பல்வேறு காலக் கட்டங்களில் கேரளத்தில் குடியேறினர். கேரளம் முழுவதும் பரவி இப்போது வாழ்ந்து வருகின்றனர்.

அடிக்குறிப்புகள்

1. Elankulam Kunjan Pillay, *Studies in Kerala History,* National Book Stall, Kottiyam, 1970, p.302
2. Adoor Ramachandran Nair, (State Editor, Kerala Gazetteers) *Origin of Malayalam,* The Hindu dt. Dec 7 1982
3. K.A.Nilakanta Sastri, *A History of South India* Oxford University Press, 1958 (P.71).
4. Census Report of Travancore, 1931, (p.365)
5. K.N.Krishna Iyer, *A Short History of Kerala,* Pai & Co., Ernakulam, 1966.
6. T.K.Velu Pillay, *Travancore State Manuel Vol.II* Govt. of Travancore, 1940, p.26.
7. A Sreedhara Menon, *A Survey of Kerala History,* National Book Stall, Kottiyam, 1967, p.373.
8. Malabar Gazetteers, p.122.
9. *Ibid.*, p.123.
10. A Sreedhara Menon, *A Survey of Kerala History,* National Book Stall, Kottiyam, 1967, p.252.
11. L.K. Anantha Rama Krishna Iyer, *The Tribes and Castes of Cochin,* Vol. II; Cosmo Publications, New Delhi, (p. 103-119).
12. *Ibid.*, p.103.
13. Census of Travancore, 1931.
14. *Ibid.*,
15. A Sreedhara Menon, *A Survey of Kerala History,* National Book Stall, 1967, p.315.

இயல் 9

9. ஆய்வுரை

கேரளத் தமிழர்களும் அவர்களின் சிக்கல்களும்' எனும் இவ்வாய்வில் கேரளத் தமிழர்கள் மலையாளிகளுடன் கொள்ளும் ஊடாட்டக் கோலங்களும், கல்வி, மொழி, அரசியல் பண்பாட்டுச் சிக்கல்களும் ஆராயப்பட்டுள்ளன.

கேரளத்திலுள்ள திருவனந்தபுரம், கொல்லம் ஆகிய இரு முக்கிய நகரங்களிலும் வாழும் தமிழர்களுள் ஒவ்வொரு நகரிலும் நூறு பேர் வீதம் ஆய்வுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வினாப்பட்டியல் மூலம் தகவல் சேரிக்கப்பட்டது. இத் தகவல் களை ஆய்வு செய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

வினாப்பட்டியல்

இவ்வாய்விற்காக உருவாக்கப்பட்ட வினாப்பட்டியலின் மாதிரிப் படிவம் பின் இணைப்பு எண் 1. கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரு குழு தனது பண்பாடு குறித்து என்ன எண்ணுகிறது என்பது முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும். இதனை உணர்ந்து கொண்டால்தான் அது வேறொரு பண்பாட்டுடன் எவ்வகையில் தொடர்பு கொள்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

இங்குப் பயன்படுத்தப்பட்ட வினாப்பட்டியல் இதனைக் கருத்தில் கொண்டு மேற்குறிப்பிட்ட தன்மைகளை அடிப் படையாகக் கொண்டுள்ளது.

தமிழர் மலையாளிகளின் சமூக ஊடாட்டம் எத் தன்மையிலுள்ளது என்றும், தமிழர்கள் மலையாளிகளைக் குறித்து என்ன எண்ணுகின்றனர் என்றும் ஆராயப்பட்டுள்ளது. சமூக ஊடாட்டம் பல்வேறு தன்மைகளைக் கொண்டது. ஒற்றுமை, போட்டி, பிணக்கு மற்றும் ஒருங்கிணைதல் போன்றவை ஊடாட்டத் தன்மைகளாகும். தமிழர்—மலையாளிகள் சமூக ஊடாட்டம் இவ்வகைத் தன்மை கொண்டதாக இருக்கின்றதா என்பதை இவ்வாய்வு மூலம் அறிந்து கொள்ளலாம்.

இவற்றினைக் கருத்தில் கொண்டு ஆராயும்போது கேரளத் தமிழர்களுக்கு எவ்வகைச் சிக்கல்கள் ஏற்படுகின்றன என்றும் உணர்ந்து கொள்ளலாம்.

திருவனந்தபுரம், கொல்லம் எனும் இரு நகரங்களிலும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களின் வயது விவரத்தைக் குறிப்பிடும் அட்டவணை

9—அ

வயது	10—25	26—50	51
எண்ணிக்கை 100 தி	2	80	18
100 கொ	8	46	46

ஆண்கள்—பெண்களின் எண்ணிக்கை

அட்டவணை 9—ஆ

நகரம்	ஆண்கள்	பெண்கள்
தி	88	12
கொ	60	40

தி—திருவனந்தபுரம் கொ—கொல்லம்.

ஆய்வு செய்யப்பட்ட சாதியின் பெயர், எண்ணிக்கை அட்டவணை

9—இ1

திருவனந்தபுரம்

சாதி	எண்ணிக்கை 100
பிராமணர்	26
வெள்ளாளர்	36
ஆசாரியார்	12

சாதி	எண்ணிக்கை 100
நாடார்	6
செட்டியார்	4
சாலியர்	6
முதலியார்	6
பாணர்	2
சாம்பவர்	2

அட்டவணை 9—இ2

கொல்லம்

சாதி	எண்ணிக்கை 100
பிராமணர்	22
வெள்ளாளர்	24
ஆசாரியார்	14
நாடார்	12
செட்டியார்	10
சேனை —	
முதலியார்	6
யாதவர்	4
மருத்துவர்	2
குலாலர்	6

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைகள் 9—இ1, 9—இ2 மூலம் இவ்விரு நகரங்களிலும் ஆய்வுக்குட்படுத்தப் பட்டவர்கள் வெவ்வேறு சாதியினர் என்பது விளங்கும். (பார்க்க: வரைபடம் 1, 2)



வரைபடம்.1
திருவனந்தபுரம் நகரில் ஆய்வு செய்யப்பட்டவர்களின் சாதி விவரம்

வரைபடம்—2

கொல்லம் நகரில் ஆய்வு செய்யப்பட்டவர்களின் சாதி விவரம்



வீட்டு மொழி பேசுவோர் விவர அட்டவணை

9 —ஈ1

திருவனந்தபுரம்

சாதி	தமிழ்	மலையாளம்
பிராமணர்	/	
வெள்ளாளர்	/	
ஆசாரியார்	/	
நாடார்	/	
செட்டியார்	/	
சாலியர்	/	
முதலியார்	/	
சாம்பவர்	/	

கொல்லம் அட்டவணை 9—ஈ2

சாதி	தமிழ்	மலையாளம்
பிராமணர்	/	
வெள்ளாளர்	20	4
ஆசாரியார்	/	
நாடார்	/.	
செட்டியார்	6	4
சேனை முதலியார்	/	
யாதவர்	/	
மருத்துவர்	/	
குலாலர்	/	

முதல் அட்டவணை எண் 9—ஈ1 திருவனந்தபுரம் நகரில் வீட்டு மொழியாக எம்மொழியைப் பயன்படுத்துகின்றனர் எனும் விவரத்தை அளிக்கும். இரண்டாவது அட்டவணை 9 —ஈ2 —இல் கொல்லம் நகரிலுள்ள தகவலாளரின் விவரம் கொடுக்கப் பட்டுள்ளது. அட்டவணை 9—ஈ2 மூலம் கொல்லத்தில் வெள்ளாளர் 4 பேரும் செட்டியார் 4 பேரும் வீட்டு மொழியாக மலையாளத்தைப் பேசுகின்றனர் என்று தெரிந்து கொள்ளலாம்.

வாடகை வீடு சொந்த வீடு வைத்திருப்பவர்கள் அட்டவணை

9—உ

வீடு / நகரம்	வாடகை வீடு உள்ளவர்	சொந்த வீடு உள்ளவர்
திருவனந்தபுரம்	26	74
கொல்லம்	42	58

அட்டவணை 9—உ மூலம் திருவனந்தபுரத்தில் 74 பேரும் கொல்லத்தில் 58 பேரும் சொந்த வீட்டில் வாழ்கின்றனர் என்பது விளங்கும். இதன்மூலம் அவர்கள் நிலையாகக் கேரளத்தில்தான் வாழ விரும்புகின்றனர் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

பூர்வீகம் அட்டவணை

9—ஊ 1

திருவனந்தபுரம் நகர்

பூர்வீகம் / சாதி	தமிழகம்	பூர்வீகம் தெரியாதவர்	கேரளம்
பிராமணர்	18	8	—
வெள்ளாளர்	32	4	—
ஆசாரியார்	10	—	—
நாடார்	6	—	—
செட்டியார்	4	—	—
சாலியர்	6	—	—
முதலியார்	6	—	—
பாணர்	2	—	—
சாம்பவர்	2	—	—

கொல்லம் நகர் அட்டவணை 9—ஊ 2

சாதி	பூர்வீகம் தமிழகம்	பூர்வீகம் தெரியாதவர்	கேரளம்
பிராமணர்	22	—	—
வெள்ளாளர்	24		
ஆசாரியார்	10	—	4
நாடார்	12	—	—
செட்டியார்	10	—	—
சேனை முதலியார்	6	—	—
யாதவர்	4	—	—
மருத்துவர்	2	—	—
குலாலர்	6	—	—

பூர்வீகம்

பொதுவாகப் பூர்வீகம் தெரியவில்லை எனக் கூறுபவர்களுக்குக் (அட்டவணை 9—ஊ 1) குல தெய்வ வழிபாடு இல்லை. கொல்லத்தில் ஆசாரியார் சாதியைச் சேர்ந்த நால்வர் பூர்வீகம் கேரளம் என்று குறிப்பிட்டுள்ளனர். அவர்களின் குல தெய்வமும் கேரளத்தில்தான் உள்ளது. இவர்கள் மலையாள விசுவகர்ம சாதியைச் சேர்ந்தவர்கள் அல்லர். எனவே இவர்கள் முதலில் கேரளத்தின் ஓர் இடத்தில் தமிழகத்திலிருந்து குடியேறி, பின்பு அங்கிருந்து கொல்லத்திற்குக் குடியேறியிருப்பார்கள் என்று எண்ண இடமுள்ளது.

தகவலாளர்களின் ஆண்டு வருமானம் பற்றிய விவர அட்டவணை:

9—எ

வருமான விவரம்	உரூ.1000 இற்கும் கீழ்	உரூ.2000 கீழ் உரூ.1001—உரூ.2000	உரூ.5000 கீழ் உரூ.2001—உரூ.5000	உரூ.10000 கீழ் உரூ.5001—உரூ.10000	உரூ.20000 கீழ் உரூ.10000

நபர்களின் எண்ணிக்கை தி	-	2	8	18	72
கொ	4	—	40	18	38

(பார்க்க: வரைபடம் 3)

தகவலாளர்களில் வேலைபார்ப்பவர் விகிதம் அட்டவணை

9—ஏ

வேலை / நகரம்	அரசு வேலை	தனியார் வேலை	சொந்த வேலை
தி	42	10	48
கொ	16	36	48

குல தெய்வ வழிபாடு அட்டவணை (விகிதக் கணக்கில்)

திருவனந்தபுரம் 9—ஐ1

இடம் / சாதி	தமிழகத்தில்	குல தெய்வ வழிபாடு இல்லாதவர்	கேரளத்தில்
பிராமணர்	10	16	—
வெள்ளாளர்	24	12	—
ஆசாரியார்	4	8	—
நாடார்	4	2	—
செட்டியார்	2	2	—
சாலியர்	4	2	—
முதலியார்	4	2	—
பாணர்	2	—	—
சாம்பவர்	2	—	—



வரைபடம்—8
தகவலாளர்களின் ஆண்டு வருமானம்
(உரூபாயில்)
நபர்களின் எண்ணிக்கை
80
70
60
50
40
30
20
10
0
2000
4000
6000
8000
10000
12000
14000
16000
வருமானம் உரூபாயில்
திருவனந்தபுரம்
கொல்லம்

இடம் சாதி	தமிழகத்தில்	குல தெய்வ வழிபாடு இல்லாதவர்	கேரளத்தில்
பிராமணர்	20	2	—
வெள்ளாளர்	18	6	—
ஆசாரியார்	10	4	—
நாடார்	10	2	—
செட்டியார்	8	2	—
சேனை முதலியார்	6	—	—
யாதவர்	2	2	—
மருத்துவர்	2	—	—
குலாலர்	6	—	—

குல தெய்வ வழிபாடு மூலம் பூர்வீகத்தை அறியலாம் என்பதற்காக வினாப் பட்டியலில் 9.1—9.4 வரையிலுள்ள கேள்விகள் கேட்கப்பட்டன. ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களுக்குக் குல தெய்வ வழிபாடு கேரளத்தில் இல்லை என்பதன் மூலம் அவர்கள் தமிழகத்திலிருந்து குடியேறியவர்கள் என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. குல தெய்வ வழிபாடு இல்லை என்று கூறுவதற்கு அவர்களுக்கு இது குறித்துத் தெளிவான கருத்து இல்லாததே காரணமாகும்.

(பார்க்க: வரைபடம் 4,5)

திருமண முறைகள்

1. திருவனந்தபுரம், கொல்லம் எனும் இரு நகரங்களில் வாழும் தகவலாளிகளான தமிழர்கள் அனைவரும் தங்கள் சொந்தச் சாதிகளுள்தான் திருமணம் செய்துள்ளனர்.
2. சாதி வேறுபாடுகள் ஏதுமில்லை எனக் கூறும் தகவலாளர்களில் ஒருவர்கூடக் கலப்புத் திருமணம் செய்யவில்லை.


வரைபடம்.4
திருவனந்தபுர நகரில் குலதெய்வ வழிபாடு
தமிழகத்தில் வழிபாடு உள்ளவர்கள்
குலதெய்வ வழிபாடு இல்லாதவர்கள்
28
24
20
16
12
8
4
விகிதம்
பிராமணர்கள்
வெள்ளாளர்கள்
ஆசாரியார்
நாடார்
செட்டியார்
சாலியர்
முதலியார்
பாணர்
சாம்பவர்



வரைபடம்—5

கொல்லம் நகரில் குலதெய்வ வழிபாடு (விகிதம்)

3. தமிழகத்தில்தான் நாடார், சேனைத்தலைவர், குலாலர், மருத்துவர் போன்ற சாதியினரின் திருமணம் நடைபெற்றுள்ளது.
4. 'பெண் வீடு' திருவனந்தபுரம் அல்லது கொல்லத்தில் இருந்தாலும் தமிழகத்திலுள்ள தங்கள் சொந்த ஊரில் திருமணம் நடத்தியவர்களும் உள்ளனர்.

திருமண முறைகளைப் பற்றிய விவர அட்டவணை

அ. திருவனந்தபுரம் நகரில் — 9—ஒ1

ஊர் / சாதி	கணவன்/மனைவி ஊர் — தமிழகம்	கணவன்/மனைவி ஊர் — கேரளம்	திருமணம் ஆகாதவர்
பிராமணர்	12	14	—
வெள்ளாளர்	26	10	—
ஆசாரியார்	8	4	—
நாடார்	6	—	—
செட்டியார்	4	—	—
சாலியர்	6	—	—
முதலியார்	4	2	—
பாணர்	2	2	—
சாம்பவர்	—	—	2

(பார்க்க: வரைபடம் 6,7)

ஆ. கொல்லம் நகரில் — அட்டவணை 9—ஒ2

சாதி ஊர்	கணவன்/மனைவி ஊர் — தமிழகம்	கணவன்/மனைவி ஊர் — கேரளம்	திருமணம் ஆகாதவர்
பிராமணர்	22	—	—
வெள்ளாளர்	14	10	—
ஆசாரியார்	6	8	—
நாடார்	10	—	2
செட்டியார்	8	2	—
சேனை முதலியார்	6	—	—
யாதவர்	2	2	—
மருத்துவர்	2	—	—
குலாலர்	6	—	—


வரைபடம்—6
திருவனந்தபுரம் நகரில் திருமண முறை
தமிழகத்தில் கணவன் அல்லது மனைவி அமைந்த ஊர்
கேரளத்தில் கணவன் அல்லது மனைவி அமைந்த ஊர்
30
25
20
15
10
5
0
பிராமணர்கள்
வெள்ளாளர்
ஆசாரியார்
நாடார்
செட்டியார்
சாலியர்
முதலியார்
பாணர்



வரைபடம்—7
கொல்லம் நகரில் திருமண முறை

திருமணத்திற்கு முன்பு உறவினரா?

ஆய்வு செய்யப்பட்டவர்களுள் திருவனந்தபுரத்தில் 38 பேர் உறவு முறையில் திருமணம் செய்துள்ளனர். 60 பேர் உறவு முறையில் திருமணம் செய்யவில்லை. இரண்டு பேருக்குத் திருமணம் ஆகவில்லை.

கொல்லத்தில் 32 பேர் உறவுமுறையில் திருமணம் செய்துள்ளனர். 78 பேர் உறவுக்குள் திருமணம் முடிக்கவில்லை.

கொள்வினை. கொடுப்புவினை செய்யும் இடங்களைப் பற்றிய விவரங்கள்

அட்டவணை 9—ஓ

நகரம்	எண்ணிக்கை	இடம்
தி	28	தமிழகம்
கொ	38	
தி	16	கேரளம்
கொ	14	
தி	12	தமிழகத்திலும்
கொ	18	கேரளத்திலும்
தி	44	கொள்வினை,
கொ	30	கொடுப்புவினை இல்லாதவர்கள்

கொள்வினை கொடுப்புவினை

திருவனந்தபுரம், கொல்லம் எனும் இரு நகரங்களிலும் கொள்வினை கொடுப்புவினைகள் தமிழர்களுக்குள்தான் நடைபெற்றுள்ளன. கொல்லத்தில் ஒரு குடும்பத்தில் மலையாளச் சாதியான புந்தாழச் செட்டிக் குடும்பத்திலிருந்து வெள்ளாளக் குடும்பம் கொள்வினை செய்துள்ளது. இச் சாதியுடன் வெள்ளாளர் பொதுவாகக் கொடுப்புவினை செய்வதில்லை என்றும் அறியமுடிகிறது.

(பார்க்க: விளக்கப்படம்)

கொள்வினை, கொடுப்புவினை விளக்கப்படம்



ஆசாரிகள், குலாலர்கள், மருத்துவர்கள், யாதவர்கள் ஆகிய தமிழ்ச் சாதியினர் அதே மாதிரி மலையாளச் சாதியினருடன் கொள்வினை கொடுப்பு வினை செய்யவில்லை என்றும் அறியமுடிகிறது.

இரு நகரங்களிலும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள் (200) திருமணம் மற்றும் பிற சடங்குகளில் சொந்தச் சாதி முறைகளைத்தான் பின்பற்றி வருகின்றனர். கேரளப் பண்பாட்டு முறைகள் ஏதும் தமிழர் சடங்குகளில் ஊடுருவவில்லை.

உணவு பரிமாறி வைத்த பின்பு விருந்தினரை உண்ண அழைக்கும் வழக்கம் மலையாளிகளிடமிருந்து தமிழர்கள் பின்பற்றும் வழக்கமாகச் சில தகவலாளர்கள் கூறுகின்றனர். தற்போது திருமணத்தில் மந்திரம் ஓதுவது போன்ற சடங்குகள் குறைக்கப்பட்டுத் தமிழர்களின் திருமணங்கள் எளிதாக்கப்பட்டு வருகின்றன. பொங்கல், தீபாவளி, ஓணம் போன்ற எல்லாப் பண்டிகைகளையும் தமிழர்கள் கொண்டாடுகின்றனர். 8.1 முதல் 8.4 வரை உள்ள கேள்விகள் மலையாள வழக்கங்கள் தமிழர்களிடம் நிலவுகின்றனவா என்று அறிவதற்காகக் கேட்கப்பட்டனவாகும். தமிழர்கள் சமையலுக்கு நல்லெண்ணெயையும் தேங்காய் எண்ணெயையும் பயன்படுத்துகின்றனர். விலைவாசி உயர்வினால் பனை எண்ணெயையும் பயன்படுத்துகின்றனர். மாட்டிறைச்சியை ஒருவரும் உண்பதில்லை. 'கஞ்சி வெள்ளம்' குடிக்கும் பழக்கமும் ஒருவரிடமும் காணப்படவில்லை. இவ்விரு வழக்குகளும் மலையாள வழக்கம் என்பதனால் வினாப் பட்டியலில் உட்படுத்தப்பட்டது.

கல்வியும் மொழியும்

அட்டவணை 9—ஔ

நகரம்	மொழி ஆ மலையாளம் பெ	ஆ—மலையாளம் பெ—தமிழ்	ஆ தமிழ் பெ
தி	78	12	10
கொ	72	8	20

தி—திருவனந்தபுரம்
ஆ—ஆண்
கொ—கொல்லம்
பெ—பெண்

மேலே உள்ள அட்டவணை மூலம் தமிழ்க் குடும்பத்தினர் எம் மொழி மூலம் மலையாளிகளுடன் பேசுகின்றனர் என அறிந்து கொள்ளலாம். ஒரே குடும்பத்தில் ஆண்கள் மலையாளத்திலும் பெண்கள் தமிழிலும் மலையாளிகளுடன் பேசுகின்றனர். ஆண்களும் பெண்களும் தமிழில் மலையாளிகளுடன் பேசுகின்ற குடும்பங்களும் உள்ளன.

கல்வி பெறுவோர் விவரம் (விகிதத்தில்)

அட்டவணை 9—க

மொழி நகரம்	தமிழ்	மலையாளம்	ஆங்கிலம்
திருவனந்தபுரம்	56	18	26
கொல்லம்	34	64	2

மேற்குறிப்பிட்ட 9—அட்டவணை இப்போது தமிழ்க் குழந்தைகள் எம் மொழியில் கற்கின்றனர் என்பதை விளக்கும்.

பெற்றோர்கள் தமிழில் படித்திருந்தாலும் தங்கள் குழந்தைகளை மலையாளத்தில் படிக்க வைக்கவே விரும்பு கின்றனர். கேரளத்தில் மலையாளத்தில் படித்தால்தான் வேலை கிடைக்கும் என்று எண்ணுவதே இதற்குக் காரணம். கேரளத்தில் வாழ்ந்து கொண்டு தமிழில் படிப்பதனால் என்ன லாபம் என்று அவர்கள் கருதுகின்றனர்.

இவ்விரு நகரங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மலையாளத்தில் படிப்பவர்களின் எண்ணிக்கை கொல்லத்தில் அதிகமாக இருப்பதை அறிந்து கொள்ளலாம். ஆனால் ஆங்கிலத் தில் படிப்பவர்களின் எண்ணிக்கை கொல்லத்தைவிடவும் திருவனந்தபுரத்தில் அதிகம்.

தமிழில் படிப்பது என்பது மலையாள எழுத்தில் தமிழைப் போதிப்பதாகத்தான் கொல்லம் புறநகர் பள்ளியில் அண்மைக் காலம் வரையிலும் வழக்கமாக இருந்து வந்தது என்றும் இப்போது அங்கு அந்த வசதியுமில்லை என்றும் ஒரு தகவலாளர் கூறினார்.[1]

(பார்க்க: வரைபடம் 8)


வரைபடம்—8
கல்வி பெறுவோர் விவரம்
தமிழில்—கற்போர்
மலையாளத்தில் கற்போர்
ஆங்கிலத்தில் கற்போர்
100
80
60
40
20
0
விகிதம்
திருவனந்தபுரம்
கொல்லம்

அரசியல்

இரு நகரங்களிலும் ஓரிருவர் தவிர மற்றவருக்கு அரசியல் குறித்து எவ்விதக் கருத்துமில்லை. கேரள அரசியல் குறித்தே இந்நிலை என்றால் தமிழக அரசியல் குறித்து அவர்கள் எவ்விதக் கவலையும்கொள்ளவில்லை. (தமிழர் மலையாளிகள் அரசியல் சிக்கல்: பார்க்க: இயல் 6)

தமிழர்கள் என்ற முறையில் கேரளத்தில் அரசியலில் ஈடுபடுவதற்கு எவ்விதத் தடையுமில்லை என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

தமிழ், மலையாளம் செய்தித்தாள் படிப்பவர் படிக்காதவர் எண்ணிக்கை

அட்டவணை 9—ங

நகரம்	விவரம்	எண்ணிக்கை
தி	தமிழ்ச் செய்தித்தாள் படிப்பவர்கள்	76
	தமிழ்ச் செய்தித்தாள் படிக்காதவர்கள்	10
	மலையாளச் செய்தித்தாள் படிப்பவர்கள்	4
	செய்தித்தாள் படிக்காதவாகள	10
கொ	தமிழ்ச் செய்தித்தாள் படிப்பவர்கள்	72
	தமிழ்ச் செய்தித்தாள் படிக்காதவர்கள்	—
	மலையாளச் செய்தித்தாள் படிப்பவர்கள்	14
	செய்தித்தாள் படிக்காதவர்கள்	14

(பார்க்க: வரைபடம் 9, 10)

தமிழ்ச் செய்தித்தாளைச் சொந்தமாக வாங்கிப் படிப்பவர்கள் பலர். வேலை பார்க்கும் இடங்களிலும் இலவசமாகக் கிடைத்தால் மட்டும் தமிழ்ச் செய்தித்தாள்கள் படிக்கும் வழக்கம் உள்ளவர்களும் உள்ளனர்.

உறவினர்கள்

கேரளத்தில் வாழும் தமிழர்கள் தமிழ் நாட்டுடன் தொடாபு வைத்து வருகிறார்களா என்பதனை அறியும்பொருட்டு, தமிழ் நாட்டில் உறவினர்கள் உண்டா என்ற கேள்வி (12, 0) கேட்கப் பட்டது.

வரைபடம்—9

செய்தித்தாள் படிப்பவர்களின் எண்ணிக்கை திருவனந்தபுரம் நகரில்



தமிழ்ச் செய்தித்தாள் படிப்பவர்கள் 76%

தமிழ்ச செய்தித்தாள் படிக்காதவர்கள் 10%

மலையாளச் செய்தித்தாள் படிப்பவர்கள் 10%

செய்தித்தாள் படிக்காதவர்கள் 4%

வரைபடம்—10

செய்தித்தாள் படிப்பவர்களின் எண்ணிக்கை—கொல்லம்



தமிழ்ச் செய்தித்தாள் படிப்பவர்கள் 72%

மலையாளச் செய்தித்தாள் படிப்பவர்கள் 14%

செய்தித்தாள் படிக்காதவர்கள் 14%

திருவனந்தபுரத்தில் 90 பேர்க்குத் தமிழகத்தில் உறவினர்கள் உள்ளனர்; 10 பேர்க்கு உறவினர் இல்லை.

கொல்லத்தில் 98 பேர்க்குத் தமிழகத்தில் உறவினர்கள் உள்ளனர்; இருவர்க்கு உறவினர் இல்லை.

12.2 முதல் 12.6 வரையிலும் உள்ள கேள்விகளுக்கு அவர்கள் கூறிய பதிலைக் கீழ்க்காணும் வகையில் தொகுத்துக் கூறலாம்.

தமிழ் நாட்டில் உறவினர்கள் பல இடங்களிலும் காணப்படுகின்றனர்.

குடும்பங்களில் உள்ள நன்மை தீமைகளை முன்னிட்டு அவர்கள் தமிழகத்தில் உறவினர் வாழும் இடங்களுக்குச் செல் கின்றனர். தமிழக உறவினர்களும் இவ்வகையில்தான் கேரளத் தமிழர்களைப் பார்க்க வருகின்றனர்.

ஆண்டில் எத்தனைத் தடவைகள் என்று எண்ணிச் சொல்லுமளவுக்குக் கட்டாயமாக உறவினர்கள் வருவது கிடையாது. இவர்களின் நிலையும் அதுவே.

பிற தமிழ்ச் சாதியினர்

திருவனந்தபுரத்தில் 2 பேர் நீங்கலாக 98 பேர் பிற தமிழ்ச் சாதியினருடன் சாதிவேறுபாடு பார்க்காமல் தொடர்பு கொள் கின்றனர். கொல்லத்தில் 100 பேர்களும் தமிழ்ச் சாதி யினர்களுடன் வேறுபாடில்லாமல் பழகுகின்றனர்.

சாதிச் சங்கம் உள்ள சாதியின் பெயரையும் ஆய்வு செய்யப்பட்டவர்களுள் சாதிச் சங்கங்களில் உறுப்பினராக இருப்பவர்களின் எண்ணிக்கையையும் கீழ்க்காணும் பட்டியலில் காணலாம்.

சாதிச் சங்க உறுப்பினர்

அட்டவணை 9—ச 1

திருவனந்தபுரம்

சாதி	சங்க உறுப்பினர் எண்ணிக்கை	உறுப்பினரல்லாதார் எண்ணிக்கை
பிராமணர்	14	12
வெள்ளாளர்	30	6

சாதி	சங்க உறுப்பினர் எண்ணிக்கை	உறுப்பினரல்லாதார் எண்ணிக்கை
ஆசாரி	8	4
நாடார்	—	6
செட்டியார்	2	2
சாலியர்	4	2
சாம்பவர்	—	2

முதலியார், பாணர் ஆகியோர்க்குச் சாதிச் சங்கங்கள் இல்லை. எனவே அட்டவணை 9—ச1—இல் அவர்கள் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை.

சாதிச் சங்க உறுப்பினர்

அட்டவணை 9—ச2

சாதி	சங்க உறுப்பினர் எண்ணிக்கை	உறுப்பினரல்லாதார் எண்ணிக்கை
பிராமணர்	22	—
வெள்ளாளர்	12	12
ஆசாரியார்	8	6
நாடார்	8	4
சேனை முதலியார்	6	—
யாதவர்	4	—
மருத்துவர்	—	2

கொல்லத்தில் செட்டியார் குலாலர் ஆகியோர்களுக்குச் சாதிச் சங்கங்கள் இல்லை. எனவே அட்டவணை 9—ச2—இல் அவர்கள் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை.

வினாப்பட்டியலில் கேட்கப்பட்ட 13.3 கேள்விக்குத் தகவல்களைக் கீழ்க்காணும் வகையில் தொகுத்துக் கூறலாம்.

1. கொல்லத்தில் பிராமணச் சங்கம் கல்லூரி நிறுவத் தீர்மானித்துள்ளது.

2. வெள்ளாளர் சங்கம் கோயிலைச் சீரமைத்துள்ளது; மருத்துவமனை ஒன்று தொடங்கியுள்ளது.
3. நாடார் மகாசனச் சங்கம் சங்கத்திற்கு நிலையான கட்டடம் கட்டத் தீர்மானித்துள்ளது.
4. பிற சாதிச் சங்கங்கள் குறிப்பிடத்தக்க வகையில் ஏதும் சாதிக்கவில்லை

திருவனந்தபுரத்தில் சாதிச் சங்கங்களின் சாதனைகள் என்று எதனையும் தகவலாளர்கள் குறிப்பிடவில்லை. திருவனந்தபுரத்தில் தமிழ்ச் சங்கம் உள்ளது. கொல்லத்தில் தமிழ்ச் சங்கமில்லை. கொல்லத்துத் தமிழர்கள் இதனைக் குறையாகக் கருது கின்றனா.

திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்தில் ஆய்வு செய்யப் பட்டவர்களுள் 38 பேர் உறுப்பினராக உள்ளனர். 62 பேர் உறுப்பினர்கள் அல்லர்; ஆனால் அவர்களும் தமிழ்ச்சங்கம் இருக்கிறது என்பதைத் தெரிந்து வைத்துள்ளனர்.

மலையாளிகளுடன் தொடர்பு

திருவனந்தபுரம், கொல்லம் ஆகிய இரு நதரங்களிலும் வாழும் தமிழர்கள் மலையாளிகளுடன் எவ்வகையில் தொடர்பு கொள்கின்றனர் என்பதை அறிவதற்காக 14.1 முதல் 15.6 வரையிலான கேள்விகள் வினாப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

எல்லாத் தமிழர்களும் அக்கம்பக்கத்தில் வாழும் மலையாளிகளுடன் இணக்கமாகப் பழகுகின்றனர். இதில் சாதி அடிப்படையில்தான் தொடர்பு வைத்துள்ளனர் என்று கூற முடியாது.

தமிழர்களுள் ஒரு குறிப்பிட்ட _சாதியினர் மலையாளிகளுள் ஒரு குறிப்பிட்ட சாதியினருடன்தான் தொடர்பு கொள்கின்றனர் எனறும் வரையறுத்துச் சொல்ல முடியாது.

திருவனந்தபுரத்தில் 84 பேர் மலையாளிகளுடன் எவ்வகை வேறுபாடுமின்றிப் பழகி வருகின்றனர். வினாக்கள் 15.1 முதல் 15.6 வரையிலான கேள்விகளுக்கு ஆம் என்றுதான் பதில் கூறியுள்ளனர்.

16 பேர்கள், வினாக்கள் 15.3 மற்றும் 15.5 கேள்விகளுக்கு இல்லையென்று பதிலளித்திருப்பதன்மூலம மலையாளிகளுடன் குடும்பத் தொடர்பு இல்லை என்று அறிகின்றோம். ஆனால், வினா

எண் 15.6—க்குத் திருவனந்தபுரம் நகரில் ஆய்வு செய்யப்பட்ட 100 பேர்களும் ஆம் என்று விடையிறுத்திருப்பதன் மூலம் தமிழர்—மலையாளிகளிடையேசமூக வேற்றுமை நிலவுவதாகக் கூறமுடியாது.

கொல்லம் நகரில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களுள் 20 பேர் மலையாளிகளுடன் தொடர்பே கொள்வதில்லை என்று அறிகின்றோம்.[2] 80 பேர்கள் மலையாளிகளுடன் வேறுபாடின்றிப் பழகுகின்றனர் என்பதனை 15.1 முதல் 15.6 வரையிலான கேள்விகளுக்கு அளித்துள்ள பதில் மூலம் தெரிந்து கொள்கின்றோம்.

மலையாளிகளுடன் தொடர்பு கொள்ளாதவர்கள்

அட்டவணை (சாதி வாரியாக) 9—ஞ

கொல்லம்

சாதி	எண்ணிக்கை
வேளாளர்	2
ஆசாரியார்	2
நாடார்	2
செட்டியார்	2
சேனை முதலியார்	4
குலாலர்	6
மருத்துவர்	2

மலையாளிகள் தமிழர்களை விருந்துக்கு அழைத்தும் அவர்கள் போகாமலிருக்கலாம். கொல்லம் நகரில் தங்கள் வீட்டுத் திருமணத்திற்கு மலையாளி ஆணும் பெண்ணும் தமிழர் வீட்டினரை அழைப்பதைக் கள ஆய்வின்போது காண நேரிட்டது.

அடிக்குறிப்புகள்

1. தகவலாளர்: திரு.எஸ்.செய்யது அசதுல்லா சாகப் நிர்.181 கரீம் மான்சில் கண்டோன் மெண்ட் வடக்கு கொல்லம்—691 001.

2. இந்தத் தகவலாளர்கள் பெண்களாக இருப்பதனால் மலையாளிகள் வீட்டுத் திருமணங்களுக்குத் தன்னிச்சையாகப் போகாமலிருக்கலாம்; தாழ்த்தப்பட்ட சாதியினராக இருப்பதனாலும் இவர்கள் மலையாளிகள் வீட்டுத் திருமணங்களில் கலந்து கொள்ளாமலிருக்கலாம்.

இயல் 10

10. முடிப்புரை

தமிழகத்திலிருந்து இடம் பெயர்ந்து கேரள மாநிலத்தில் வாழும் 'கொடு மலையாளக் குடியிருப்புடைய' தமிழர்கள் எந் நிலையில் உள்ளனர் எனவும் அவர்களுக்கு ஏதேனும் சிக்கல்கள் உள்ளனவா எனவும் அறிய இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. கேரளத்தில் மிகவும் தொன்மைவாய்ந்த இரு நகரங்களான திருவனந்தபுரமும் கொல்லமும் இதற்கான ஆய்வுக் களங்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டன. தமிழர்கள் தன்னிச்சையாக இவ்விரு நகரங்களிலும் குடியேறியது ஒருபுறமிருக்க ஒவ்வொரு காலத்திலும் மன்னர்களும் திவான்களும் மனமுவந்து தொழில், வாணிபத்திற்காகத் தமிழர்களை அழைத்துக் குடியேற்றிய இடங்களாகவும். இவை காணப்படுகின்றன. இதுவுமல்லாமல் தமிழகத்தின் மிக அருகில் இவை நிலக்கூறுபடியும் அமைந்துள்ளன. கொல்லம் நகர் திருநெல்வேலி மாவட்டத்தின் அங்கமாகச் சிறிதுகாலம் இருந்துள்ளது (பார்க்க: இயல் 7).

இவ்வாய்வின் மூலம் தெரியவந்துள்ள பொதுவான கருத்துக்களைக் கீழ்க்காணும் வகையில் வரிசைப்படுத்தி அறிந்து கொள்ளலாம்.

பூர்வீகம்

திருவனந்தபுரம், கொல்லம் ஆகிய இரு நகரங்களிலும் வாழும் தமிழர்கள் தமிழகத்திலிருந்து சென்றேறிய குடிகளாவர். ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்பு குடியேறியவர்கள் கூட இரு நகரங்களிலும் உள்ளனர் (பார்க்க: இயல் 8).

தமிழகத்துடன் தொடர்பு

கேரளத் தமிழர்கள் தமிழகத்துடன் இன்றும் தொடர்பு கொண்டுதான் வருகின்றனர். அவர்களின் குல தெய்வங்கள் தமிழகத்திலுள்ளன. வழிபாடு செய்வதற்கு ஆண்டில் ஒரு முறையாவது தமிழகத்திற்கு வருகின்றனர். திருமண உறவுக்கும

தமிழகத்துடன் தொடர்பு கொள்கின்றனர். தமிழகத்திலிருந்து உறவினர்களும் கேரளத்திற்கு விசேடக் காலங்களில் சென்று வருகின்றனர். தமிழகத்துடனான தொடர்பு தொய்வு ஏற்படாமல், பிணைப்புகள் இறுக்கமாக உள்ளன என்றும் அறிகின்றோம்.

பொருளாதார நிலை

கேரளத் தலைநகரில் ஆய்வு செய்யப்பட்ட தமிழர்களில் ஏறத்தாழ ஐம்பது சதவீதத்தினர் அரசு வேலையில் உள்ளனர். கொல்லத்தில் தனியார் நிறுவனங்களில் வேலை பார்ப்பவர்களும் சொந்தமாகத் தொழில் செய்பவர்களும்தான் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

இரு நகரங்களிலும் ஐம்பது சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் சொந்த வீடுகளில் வாழ்கின்றனர். கேரளத்தில் நிலையாக வாழ விரும்புகின்றனர் என்பதனையே இது காட்டுகின்றது.

திருவனந்தபுரம் நகரில் ஐம்பது சதவீதத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு ஆண்டு வருமானம் உரூ.10,000/—க்கும் அதிகமாக உள்ளது. கொல்லம் நகரில் ஏறத்தாழ ஐம்பது சதவீதத்தினர் உரூ.5,000/—க்கும் கீழ் வருமானம் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.

மொழி

மலையாள மொழியைத் தமிழர்கள் வீட்டு மொழியாகப் பயன்படுத்துகின்றனர். மலையாளிகளுடன் பெரும்பான்மையான தமிழர்கள் மலையாளத்தில்தான் பேசுகின்றனர். மலையாள மொழியில் கற்போர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இப்போது தமிழ் எழுத வாசிக்கத் தெரியாத தமிழ் இளைஞர்கள் உள்ளனர். மொழி சிதைவுறும் எனில் பண்பாடு பாதிக்கப்படும் கல்வி மொழியாக மலையாளம் பயன்படுத்தப்படுவதனால் தமிழர்கள் தங்கள் பண்பாடுகளை நாளடைவில் மறந்துவிட நேரிடும். (பார்க்க: இயல் 4) மலையாள எழுத்தில் தமிழைப் படித்தால் இச்சிக்கல் மேலும் தீவிரமடையும்.

ஊடாட்டம்

தமிழர்கள் தங்களுக்குள் சாதி வேறுபாடில்லாமல் பழகுவது போன்று மலையாளிகளுடனும் இணக்கத்துடன் பழகி

வருகின்றனர். ஆனால், இரு தரப்பினர்க்கும் ஒருவர்க்கு மற்றொருவர் குறித்தான வெறுப்புணர்ச்சிகளும் வேற்றுமை எண்ணங்களும் இல்லாமலில்லை. சாதாரண சமயங்களில் இவை வெளிப்படுவதில்லை. மலையாளிகளின் வழக்கங்களை மொத்தமாக இவர்கள் பின்பற்றவில்லையெனினும் வெளிப்படையிலான, மேலோட்டமான நடவடிக்கைகளில் மலையாள முறையைப் பின்பற்றுவதைக் காணலாம். (பார்க்க: இயல் 4; பண்பாடு ஒலிக் குறியீடுகள்) உணவு, உடை, சமய நடவடிக்கைகளில் மேலோட்டமாக மலையாளத் தன்மைகள் ஊடுருவாமலில்லை.

வாழ்க்கை முறைகள்

கேரளத் தமிழர்கள் வாழ்க்கை தமிழர் பண்பாட்டின் அடிப்படையிலேயே செல்கின்றது என்பதை நுணுகி ஆராயும் போது அறிந்துகொள்ளலாம். தமிழர் பண்டிகைகளான பொங்கலையும் தீபாவளியையும் அவர்கள் கைவிட்டுவிடாமல் கொண்டாடி வருவதன் மூலம் தமிழர் வாழ்க்கை முறைகளைத் துறந்து விடவில்லை என உணர்ந்து கொள்ளலாம். ஆனால் அதே நேரத்தில் கேரளத்தின் தேசியத் திருவிழாவான ஓணம் பண்டிகையையும் கொண்டாடுகின்றனர்.

அரசியல்

கேரளத்தில் தமிழர்கள் சிறுபான்மையர் என்பதனால் அரசியலில் ஈடுபடுவதற்குத் தடை ஏதுமில்லை. ஆனால், தமிழர்களுள் செல்வாக்கான அரசியல் தலைவர்கள் யாரும் கேரளத்திலில்லை. அரசு வேலை, வாணிபம் ஆகியவற்றில் அதிகமும் தமிழர்கள் ஈடுபடுவதனால் அரசியலில் கவனம் கொள்வதில்லை. பொதுவாகத் தமிழர்—மலையாளிகள் எனும் நிலையில் பல அரசியல் சிக்கல்கள் உள்ளன (பார்க்க: இயல் 6). ஆனால், கேரளத் தமிழர்கள் இச்சிக்கல்கள் குறித்துப் புரிந்துகொள்ளாமலிருப்பது வியப்பளிப்பதாக உள்ளது.

மலையாளமாகுதல்

இரு நகரங்களிலும் வாழும் தமிழர்களுள் வெள்ளாளர்களும் வாணியச் செட்டியார்களும் மலையாளத் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர். வாணியச் செட்டியார்களில் பெரும்பான்மையர் தமிழ் மொழி அறியாதவர்களாக உள்ளனர். வெள்ளாளர் சாதியில் உறவினர்கள் தமக்குள்ளும் மலையாளத்தையே பேச்சு மொழியாகப் பயன்படுத்துகின்றனர்.

கொல்லத்தில் வெள்ளாளர்கள் புந்தாழச் செட்டியார் எனும் மலையாளச் சாதியிலிருந்து கொள்வினை செய்து கொள்கின்றனர். சாதித் தரவரிசையில் இச்சாதி கீழ் நிலையில் இருந்தது என்பதையும் வாணிபத்தினால் பொருளீட்டிப் புதிய நிலையில் சமூக மதிப்பைப் பெற்றுக் கொண்டுள்ளது என்பதையும் அறிகின்றோம்.

தமிழர் எனும் தன்னுணர்வு

கேரளத் தமிழர்க்குத் தமிழர் எனும் தன்னுணர்வு உள்ளது. மலையாளிகளிடமிருந்து வேறுபட்டவர்கள் எனும் எண்ணமும் உள்ளது. ஆனால் தமிழகம் குறித்தோ தமிழக அரசியல் குறித்தோ எவ்விதக் கவலையும் அவர்கள் கொள்வதில்லை. கேரளத்தில் பல இடங்களிலும் தமிழ்ச் சங்கங்கள் செயல்பட்டு வருவதன் மூலம் தமிழர் என்ற உணர்வைப் பேணிக் காத்து வருவதைப் புரிந்து கொள்கின்றோம். கொல்லத்தில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ்ச் சங்கமில்லாதது பெருங்குறையாக இருக்கின்றது.

சாதிச் சங்கங்கள்

தமிழகத்திலிருப்பதைப் போன்று கேரளத்திலும் பல சாதிச் சங்கங்கள் உள்ளன. தமிழர்கள் பலரும் உறுப்பினராக உள்ளனர். தமிழர்களிடையே உள்ள சாதி வேறுபாடுகள் தமிழகத்தைப் போன்று தீவிரமாக இல்லை. சாதிச் சங்கங்கள் தமிழர்களிடையே செல்வாக்குப் பெற்றுக் காணப்படுகின்றன. பிராமணர் சங்கமும் வெள்ளாளர் சங்கமும் தங்கள் சாதியினர் பாராட்டும் வகையில் செயல்பட்டு வருகின்றன.

நிலையாக எங்கு வாழ விரும்புகின்றனர்?

திருவனந்தபுரம், கொல்லம் நகர்களில் ஆய்வு செய்யப் பட்டவர்களுள் ஒரு சிலருக்குத்தான் தமிழகத்தில் நிலபுலங்கள் உள்ளன. சிலர் இருந்த நிலபுலங்களை விற்றுவிட்டனர். கேரளத் தமிழர்கள் கேரளத்தில் வாழ்ந்து பொருளீட்டிய பின்பு மீண்டும் தமிழகத்தில் வந்து குடியேறி வாழ விரும்புகின்றனரா என வினவினால், அவர்கள் அத்தகைய எண்ணம் கொண்டோராக இல்லையெனத் தெரியவருகின்றது. இதன் மூலம் கேரளத்திலேயே நிலையாக வாழவிரும்புகின்றனர் எனவும் அறிந்து கொள்ளலாம். இந்த மனநிலை பிற இடங்களில் வாழும் தமிழர்கள் மனநிலை யிலிருந்து வேறுபட்டிருப்பதையும் உணர்ந்து கொள்ளலாம்.

பின்னிணைப்புகள்

பின் இணைப்பு — 1 — வினாப்பட்டியல்

1.0	தகவலாளர் விவரம்	—	
1.1	வயது	—	ஆண்/பெண்
1.2	கல்வி	—	வேலை
1.3	மதம்	—	
1.4	வீடு	—	சொந்தம்/வாடகை
1.5	சாதி	—	
1.6	தாய்மொழி	—	
1.7	வீட்டு மொழி	—	
1.8	பூர்வீக இடம்—எந்தத் தலைமுறையில் வந்தது? எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு	—	
2.0	குடும்ப விவ்ரம்	—	
3.0	பொருளாதார விவரங்கள்	—	
3.1	சொந்த வீட்டின் மதிப்பு	—	
3.2	நிலபுலங்கள் விவரம்	—	தமிழகத்தில்/ கேரளத்தில் மதிப்பு உரூ
3.3	நன்செய் (ஏக்கரில்)	—	
3.4	தோட்டம்	—	
3.5	தொழில்	—	அரசு/தனியார்/ சொந்த
	அரசு	—	கேரள/மைய அரசு
	தனியார்	—	உரிமையாளர்: தமிழர்/மலையாளி/பிறர்
	சொந்தம்	—	இட்டுள்ள முதல் தொகை
	கீழ்வேலை செய்வோர்	—	தமிழர்/மலையாளி
	உதவியர் தனியராக இருந்தால்	—	தமிழர் தொகை/ மலையாளிகள் தொகை
3.6	பிறவகையில் குடும்ப வருமானம்	—	
3.7	குடும்ப மொத்த ஆண்டு வருமானம்	—	
4.0	திருமண முறைகள்	—	
4.1	கொள்வினை	—	

4.2 உங்கள் மனைவியரின் ஊர் எது அவர் உங்களுக்குத் திருமணத்திற்கு முன்பே உறவினரா? — ஆம்/இல்லை

உங்கள் வீட்டில் திருமணம் செய்து வந்துள்ள பெண்களைப் பற்றிய கீழ்க் கண்ட விவரங்களைக் கூறுங்கள்.

பெயர்	பிறந்த ஊர்	தாய் மொழி	திருமணத்திற்கு முன் உறவு/உறவு இல்லை	சாதி

4.0 கொடுப்பு வினை

உங்கள் வீட்டுப் பெண்களை எங்குத் திருமணம் செய்து கொடுத்துள்ளீர்கள் என்பதை விவரமாகக் கூறுங்கள்.

பெயர்	மாப்பிள்ளை ஊர்	மாப்பிள்ளையின் தாய்மொழி	உறவு உண்டு/ இல்லை	சாதி	பிற விவரங்கள்

5.0 தற்சமயம் கடைப்பிடிக்கும் திருமண வழக்கங்கள் —

5.1 திருமணம் முதலில் பேசுவது – மாப்பிள்ளை வீட்டார்/பெண் வீட்டார்

5.2 திருமணம் நடைபெறுவது — பெண் வீட்டில்/ மாப்பிள்ளை வீட்டில்

5.3 மாப்பிள்ளைப் பரிசம் —
5.4 உருமா கட்டுதல் — உண்டு/இல்லை
5.5 சுருள் வைத்தல்/ஒட்டுப்பணம் — உண்டு/இல்லை
5.6 மாப்பிள்ளை காசிக்குப் போதல் — உண்டு/இல்லை
5.7 பெண்ணுக்குப் புடவை
கொடுத்தல் — மாப்பிள்ளை/தாய்
மாமன்
5.8 மணமேடையில் நெல் வைப்பது — நாழியில்/
மரக்காலில்
5.9 மணமேடையில் தென்னம்பூ
வைப்பது — உண்டு/இல்லை
5.10 திருமணம் நடத்துபவர் — ஐயர்/குருக்கள்
5.11 மாமியார் அடுக்களை பார்க்கும்
வழக்கம் — உண்டு/இல்லை
5.12 சாதகம் பார்த்தல் — உண்டு/இல்லை
5.13 மணமகனுக்கு உறவினர் விருந்து
வைப்பது உண்டா? — ஆம்/இல்லை
5.14 பொதுவாகத் தங்கள் சமூகத்தில்
கல்யாணத்தில் முறைகளில்
ஏற்பட்டுள்ள முக்கிய மாறுதல்
களைக் கூறுங்கள்.
அ) விட்டுப்போன பழக்கங்கள் —
ஆ) புதிதாக ஏற்பட்ட
பழக்கங்கள் —
5.15 பொதுவாகக் கேரளக் கல்யாணச்
சடங்குகள் ஏதேனும் கடைப்
பிடிக்கிறீர்களா? — ஆம்/இல்லை
5.16 ஆம் என்றால் என்னவென்று
குறிப்பிடுக —
6.0 பிற வாழ்க்கை முறைகள் —
6.1 பிள்ளைக்குப் பெயர் சூட்டுதல் — ஆம்/இல்லை
6.2 காதணி விழா — ஆம்/இல்லை
6.3 பிள்ளைக்கு முடி எடுத்தல் — உண்டு/இல்லை
6.4 பெண்ணுக்குப் பூப்புனித நீராட்டு
நீராட்டுபவர் யார்? — ஐயர்/குருக்கள்/
வீட்டுப்பெரியவர்/பிறர்
6.5 சாவுச் சடங்குகள் — ஆம்/இல்லை
கொள்ளி வைப்பது யார்? —

	பிணத்தை எடுத்துச் செல்வது எவ்வாறு?	—	பாடை/தேர்ப் பாடை/நகர்மன்ற வண்டி
	தனி மயானம் உண்டா?	—	சுய சாதியினர்/பிற தமிழர்/மலை யாளிகள்
	பிணத்தை எடுத்துச் செல்ல வருவோர்	—	சுய சாதியினர்/பிற தமிழர்/மலை யாளிகள்
	அஸ்தியை என்ன செய்வீர்கள்	—	ஆற்றில்/ கடலில் இடுவது
	கல்லெடுப்பு நிகழ்ச்சி எவ்வாறு நடக்கும்?	—	
	நன்மைக்கு இருத்தல்	—	உண்டு/இல்லை
7.1	பொங்கல்	—	ஆம்/இல்லை
	தீபாவளி	—	ஆம்/இல்லை
7.2	சிணம் கொண்டாடுவது	—	ஆம்/இல்லை
8.0	உணவு வகை	—	
8.1	சமையலுக்குப் பொதுவாக/ அதிகமாக என்ன வகை எண்ணெய் பயன்படுத்து கிறீர்கள்?	—	
8.2	அசைவமாக இருந்தால் உங்கள் வீட்டில் மாட்டிறைச்சி சாப்பிடுவீர்களா?	—	ஆம்/இல்லை
8.3	ஆம் என்றால் யார் சாப்பிடு வார்கள்?	—	
8.4	ஆம் என்றால் மாட்டிறைச்சி சாப்பிடுவது இங்கு ஏற்பட்ட பழக்கமா? மாட்டிறைச்சி சாப்பிடுவதின் காரணமென்ன?	—	
	விசேட நாள்களில் தங்கள் வீட்டில் செய்யப்படும் பலகாரங்கள்	—	இட்லி/தோசை/ புட்டு/ஆப்பம்

8.5	கஞ்சி வெள்ளம் சாப்பிடுவது உண்டா?	—	ஆம்/இல்லை
9.0	மதமும் தெய்வமும்	—	
9.1	உங்கள் குடும்பத்தில் குல தெய்வ வழிபாடு உண்டா?	—	ஆம்/இல்லை
9.2	உண்டு என்றால் குல தெய்வத்தின் பெயர் என்ன? எங்கு உள்ளது?	—	
9.3	அங்குச் சென்ற உங்கள் வீட்டினர் வழிபடும் வழக்கம் உண்டா?	—	ஆம்/இல்லை
9.4	ஆம் என்றால் பொதுவாக ஆண்டில் எத்தனை முறை செல்வீர்கள்	—	
9.5	கேரளத்தில் உள்ள தெய்வங்களை எதனையாவது முக்கியத் தெய்வங்களாக வழிபடுவது உண்டா	—	ஆம்/இல்லை
9.6	ஆம் என்றால் எந்தக் கடவுளை முக்கியமாக வழிபடுகின்றீர்கள்? ஏன் வழிபடுகின்றீர்கள்?	—	
9.7	நீங்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் உள்ள கோயிலில் வழிபாடு செய்வீர்களா?	—	ஆம்/இல்லை
9.8	ஆம் என்றால் இந்தக் கோயில்களுக்கு வழக்கமாகச் செல்வது உண்டா?	—	ஆம்/இல்லை
9.9	தாங்கள் தீர்த்த யாத்திரையாகச் சென்று வந்துள்ள கோயில்கள்	—	
10.0	கல்வியும் மொழியும்	—	
10.1	உங்கள் வீட்டில் அதிகமாக பேசும் மொழி எது?		
	அ) பெண்கள்	—	
	ஆ) ஆண்கள்	—	
10.2	மலையாள நண்பர்களுடன் எந்த மொழியில் பேசுவீர்கள்?	—	
10.3	பெண்கள் எந்த மொழியில் அவர்களின் மலையாள நண்பர்களுடன் பேசுவார்கள்?	—	

10.4 உங்களுக்குத் தமிழில் படிக்க
பள்ளியில் வசதியிருந்ததா? — ஆம்/இல்லை
10.5 ஆம் என்றால் எந்த மொழியில்
படித்தீர்கள்? காரணம் —
10.6 தங்கள் குழந்தைகளுக்குத் தமிழ்
போதனா மொழியில் படிக்க
இப்பொழுது வசதி உள்ளதா? — ஆம்/இல்லை
10.7 ஆம் என்றால் எதுவரை படிக்க
இங்கு வசதி உள்ளது —
10.8 பொதுவாகத் தமிழ் மூலம் தங்கள்
குழந்தைகள் படிக்க வேண்டும்
என்று விரும்புகிறீர்களா? — ஆம்/இல்லை/காரணம்
தங்கள் குழந்தை எந்த மொழியில்
பயில்கிறது? —
தங்கள் குழந்தை தமிழ்
மொழி படிக்கிறதா? — ஆம்/இல்லை
எங்கு? — பள்ளி/வீடு
11.0 அரசியல் —
11.1 தமிழர்கள் என்ற முறையில்
பொதுவாக அரசியலில்
ஈடுபடுவதற்கு ஏதேனும் தடை
உள்ளதா? — ஆம்/இல்லை
11.2 ஆம் என்றால் என்ன காரணம்? —
11.3 நீங்கள் விரும்பிய அரசியல்
கட்சியில் இங்கு உறுப்பினர்
ஆகலாமா? — ஆம்/முடியாது
11.4 முடியாது என்றால் என்ன காரணம்? —
11.5 கேரளத்தில் அரசியல் கட்சியில்
தமிழர்கள் பொதுவாக முக்கிய
பதவிகள் பெற வாய்ப்புகள் — மாவட்ட அளவில்/
நகர அளவில்/
மாநில அளவில்
உள்ளதா? — ஆம்/இல்லை
ஆம்/இல்லை
ஆம்/இல்லை

காரணம்
11.6 தமிழ்நாட்டு அரசியலில்
உங்களுக்கு ஈடுபாடு உள்ளதா? — ஆம்/இல்லை/காரணம்

11.7 தமிழக அரசியல் கட்சிகளில் உங்களுக்கு ஈடுபாடுள்ள கட்சி எது?	—	
11.8 தாங்கள் வாங்கும் பத்திரிகைகள் எவை?	—	ஆங்கிலம்/தமிழ்
11.9 தாங்கள் தமிழ்ப் பத்திரிகைகள் படிப்பது உண்டா எங்கு?	—	
12.0 உறவினர்கள்	—	
12.1 தமிழ் நாட்டில் தற்சமயம் உங்களுக்கு உறவினர்கள் உண்டா?	—	ஆம்/இல்லை
12.2 ஆம் என்றால் எந்த ஊரில் நெருங்கிய உறவினர்கள் உள்ளனர்?	—	
12.3 நீங்கள் அங்குச் செல்வது உண்டா?	—	ஆம்/இல்லை
12.4 ஆம் என்றால் எந்தக் காரியங்கள் நிமித்தம் செல்வீர்கள்?	—	
ஆண்டில் எத்தனை முறை செல்வீர்கள்?	—	
12.5 தமிழ்நாட்டு உறவினர்கள் உங்கள் வீட்டிற்கு எப்பொழுது வருவார்கள்?	—	
12.7 ஆண்டில் எத்தனை முறை வருவார்கள்	—	
13.0 பிறதமிழ்ச் சாதியினர்	—	
13.1 இவ்வூரில் வாழும் பிறத்தமிழ்ச் சாதியினருடன் நீங்கள் தொடர்பு கொள்வது உண்டா?	—	ஆம்/இல்லை
13.2 ஆம் என்றால் சாதியின் பெயரைக் கூறவும்	—	
13.3 இங்கே உங்கள் சாதியினர்க்கென தனிச்சங்கம் இருக்கிறதா? அதில் நீங்கள் உறுப்பினரா? அதன் சாதனைகள்?		
13.4 இங்கே தமிழர்க்கு எனத் தனிச் சங்கம் இருக்கிறதா?		
அதில் நீங்கள் உறுப்பினரா?	—	
அதன் சாதனைகள்?	—	
14.0 மலையாளிகளுடன் தொடர்பு	—	

14.1 உங்களுக்கு மலையாளி நண்பர்கள் உண்டா? — ஆம்/இல்லை

14.2 ஆம் என்றால் அவர்கள் சாதியைக் குறிப்பிடவும் —

14.3 அவர் எங்கு வாழ்கிறார்கள் —

14.4 அவர்களுடன் நீங்கள் எவ்வகையில் கீழ்க்காணும் நிலையில் தொடர்பு கொள்வீர்கள் — வேறுபாடில்லாமல் செல்லுதல்

15.0 மலையாளிகளுள் எந்தச் சாதியினருள் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ள விரும்புகின்றூர்கள்? —

15.1 பொது இடத்தில் வித்தியாசமின்றிப் பழகுதல் —

15.2 வேலை பார்க்கும் இடத்தில் சரி சமமாகப் பழகுதல் —

15.3 அவர்கள் வீட்டிற்கு விசேட நாள்களில் செல்லுதல் —

15.4 அவர்கள் தம் குடும்பத்தோடு சாப்பிட வருதல் —

15.5 நீங்கள் உங்கள் குடும்பத்தோடு சாப்பிடச் செல்லுதல் —

15.6 வீட்டில் எல்லா இடங்களுக்கும் சரிசமமாகப் போதல் —

	1	2	3	4	5	6
பிராமணர்						
வெள்ளாளர்						
நாடார்						
சாலியர்						
இ.பிள்ளை						
செட்டியார்						
கிருஷ்ணவகையறா						
ஆசாரி						
கிறித். நாடார்						
அரிஜன்						
முஸ்லீம் தமிழர்கள்						
செக்காலா						
தேவர்						

பின்னிணைப்பு—2 துணை நூற்பட்டியல்

ஆங்கில நூல்கள்

1. Anantha Krishna Iyer, LK, *The Tribes and Castes of Cochin,* Cosmo Publictions, New Delhi, 1981.
2. Antony E. Alcock, *The Future of Cultural Minorities,* Macmillan Press, 1979
3. Barth F, *Ethnic groups and Boundaries* London, 1969.
4. Bedekar, V H, *How to write Assighments Research Papers, Dissertion and Thesis,* Kanak Publications, New Delhi, 1982.
5. Elankulam Kunjan Pillay, *Studies in Kerala History,* Pai and Co., Trivandrum, 1968
6. Elbert W Stewart James, *Introduction to Sociology,* II Ed, Tata Megraw Hill Publishing Co., New Delhi, 1976
7. Gordon, Milton, M, *Assimilation in American Life,* Oxford University Press, Newyork, 1964
8. Kayal, Philip M, *The Syrian Lebanese in America,* Twayne Publishers, Bostor, 1975.
9. Kernial Singh Sandhu, *Indians in Malaya,* Cambridge at the University Press, 1969
10. Kidder, L K, *Research Methods in Social Relations,* Holt Rinehart and Winston, Newyork, 1981.
11. Krishna Iyer, K N *A Short History of Kerala,* Pai and Co Eranakulam, 1966.
12. Krober, *Anthropology* Oxford and 1 BH New Delhi, 1967
13. Kusuman, K.K. *Slavery in Tranvacore,* Kerala Historical Society, Trivandrum, 1973.
14. Nathan Glazer, *Beyond the Melting Pot* The H.I T. Press, England, 1973.

15. Nilakanta Sastri, K.A. — *A History of South India*, Oxford University Press, 1958.
16. Padmanaba Menon, K.P., — *History of Kerala*, Govt. of Travancore Vol. I, 1924.
17. Panickar, K.M., — *A History of Kerala*, Annamalai University, Annamalai Nagar 1960.
18. Pattanayak, D.P., — *Multi Linguism and Language Teaching*, Oxford Univesity Press, Madras, 1981.
19. Punekar, Vijay B, — *Assimilation, A Study of North Indians in Bangalore*, Popular Prakashan, Bombay 1974.
20. Rita James Simon, — *Continuity and Change*, Cambridge University Press, 1970.
21. Robert Rado, — *Language Teaching*, Tata Hegraw Hill, Bombay, 1968.
22. Smith Elmer Lewis, — *The Amish People*, Exposition Press, Newyork, 1960.
23. Sreedhara Menon, A., — *Social and Cultural History of India, Kerala*, Sterling Publishing Pvt. Ltd., New Delhi, 1979.
24. Velu Pillay, T.K., — *Travancore State Manuel*, Vol. II, Govt of Travancore, 1940.
25. Vidyadhar Agnihotri, — *Techniques of Social Research*, M.N. Publishers, New Delhi, 1980.

Publications

1. Census of Travancore, 1931.
2. Census of Kerala, 1971.
3. In quest of Kerala, Accent Publications, Trivandrum, 1974.

தமிழ் நூல்

1. கடிகாசலம், ந, தமிழும் தமிழரும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, 1982.

மலர் மற்றும் இதழ்கள்

1. Illustrated Weekly, Bombay, Annual 1976.
2. India Today, New Delhi, April 15. 1983.
3. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மலர், மதுரை, 1981.
4. கேரளத் தமிழ், தமிழ்ச் சங்கம், திருவனந்தபுரம், 1981.
5. ஆனந்த விகடன், 2.1.1983, சென்னை.
6. தாய் 15.5.1983, சென்னை.
7 ராணி, 20.2.1983, சென்னை.